# பூவை எஸ். ஆறுமுகம்

33



# தேவலோகப் பாரிஜாதம்

துரை இராமு பதிப்பகம்

# தேவலோகப் பாரிஜாதம்

(சமூக நாவல்)

பூவை. எஸ். ஆறுமுகம்

துரை. இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

**Title :**

DEVALOGA PARIJATHAM

**Author :**

**POOVAI S. ARUMUGAM**

**First Edition :** November 1993

**Paper Used :** 11.6 Kg. Cream Woven

**Size :** 1/16 Double Crown

**Pages :** 148 + 7 = 155

**Printers :**

**ARUL VEL ACHAGAM**
40A, Vembuliamman Koil Street,
Palavanthangal, Madras-600114.
Phone : 2342854 P.P.

**Publisher :**

Durai RAMU Pathippagam
6, Pillaiyar Koil Street,
Old Tambaram, Madras-600045.
Phone : 402600

Price : Rs. 20/-.



துரை இராமு

பதிப்பாளர்
6, பிள்ளையார் கோயில் தெரு
தாம்பரம்,
25—11—93

# பதிப்புரை

பூவை எஸ். ஆறுமுகம் சிறந்த எழுத்தாளர் அவர் பல்வேறு நூல்களை படைத்துள்ளார். அவரது எழுத்துக்கள் இனம், மொழி என்ற பாகுபாடின்றி வாசகர்கள் மத்தியில் வரவேற்கப்பட்டுள்ளன; பாராட்டப் பெற்றுள்ளன.

மக்கள் பல்லோராலும் ஈர்க்கப்பட்ட இவர் சிறு கதைகள், நவீனங்களும், கட்டுரைகளும் பெரும் புகழைத் தேடித் தந்தன அதனால் இவ்வெழுத்தாளரின் **தேவலோக பாரிஜாதம்** என்ற முழு நவீனத்தை நான் எனது பதிப்பகத்தில் வெளியிடுதலுக்கு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நவீனத்தின் கருவாக இரண்டு கதாபாத்திரங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து பின் திருமணம் புரிந்து இல்வாழ்க்கைத் துவக்குகின்றனர் இதை நூலாசிரியர் தம் சொந்த நடையில் படிப்போர் வியக்கும் வண்ணம் விரித்து நவீனமாக்கியுள்ளமை போற்றுதலுக்குரியது; பாராட்டத்தகுந்தது.

ஆவலோடு எதிர்பார்த்த பூவையின் எழுத்துக்கள் உங்கள் கைகளில். முகர்வதும் உதிர்ப்பதும் உங்கள் விருப்பம்.

துரை இராமு
பதிப்பக உரிமையாளர்
துரை இராமு பதிப்பகம்

## ஆசிரியர் முன் உரை

# மாண்புமிகு பார்வதி . . . !

படைப்பின் தவமே ஒரு தத்துவம் ஆகிறது ; அதுவே படைப்பிற்கு ஒரு விதி ஆகவும் அமைகிறது — அமைக்கப் படுகிறது ! — ஆகவேதான், படைப்பவன் சூத்திரதாரி யாகவும், படைக்கப் படுகிற ஜீவன்கள் 'அலகிலா விளையாட்டுடைய' அந்தச் சூத்திரதாரியின் விளை யாட்டுப் பொம்மைகளாகவும் ஆகின்றன ; ஆக்கப்படு கின்றன. இதுவே, உலகத் தர்மத்திற்குப் பொதுவிதி யாகவும் அமையும். உலக வாழ்க்கையின் பொதுநியதி யும் இதுவே அல்லவா ?....

ஆனால், நானோ எதார்த்தமான இந்தப் பூதலத்திலே மண்ணையும் விண்ணையும் படைத்த முதல் பிரம்மா வுக்குப் போட்டியான இரண்டாவது பிரம்மாவாக இயங்கவும் இயக்கப்படவும் தொடங்கி, நாற்பத்தாறு ஆண்டுகளைத் தாண்டிவிட்ட இந்தப் பொன்னான வேளையிலே, எனக்கு நானே விதியாக ஆகவும் நேர்ந் திருக்கிறது !

விதியென்றால், விளையாடத் தெரியவேண்டாமா, என்ன ?— எனவேதான், நான் இப்போது என் விதி யோடு மட்டுமல்லாமல், என் வினையோடும் விளையாடிக் கொண்டிருக்கிறேன் ! விளையாட்டென்றால், சாமான்யப் பட்ட விளையாட்டா, என்ன ? — ஜீவமரணப் போராட்டத்தின் சித்திர — விசித்திர விளையாட்டு ஆயிற்றே ?...

இடுக்கண் வரும்பொழுது சிரிக்கத்தான் சொன்னார், தெய்வப் புலவர் ! — ஆனால். நான் சிரித்துக் கொண்டே அழுகிறேன் ; அழுது கொண்டே சிரிக்கிறேன் !—

''சுவாமியே சரணம், ஐயப்பா!'' — நாமணக்க பூ மணக்க அழைக்கிறேன்! நெய்மணக்கத் தரிசனம் தருகிறான், ஸ்ரீ ஐயப்பன்! — ஆஹா!...

'அங்கிங்கெனாதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்தப் பூர்த்தியாகி' விளங்குகின்ற ஆண்டவன் ஒரு விளையாட்டுக்காரன் என்பதனாலேயே, வாழ்க்கையும் ஒரு விளையாட்டுத்தான் என்பதாக விதிக்கப்படவில்லையே? — மதிக்கப்படவில்லையே?

வாழ்க்கை ஒரு சத்தியச் சோதனை!— சத்தியம் சோதிக்கும்போதும், அந்தச் சத்தியம் சோதிக்கப்படும் போதுதான், வாழ்க்கை, வாழ்வாங்கு வாழுகின்ற வாழ்க்கையாக அமையும்; அமையமுடியும்; அமையவும் வேண்டும். .

வாழ்வதற்காகவே விதிக்கப்பட்ட சட்டபூர்வமானதும் ஆத்மார்த்தமானதுமான வாழ்க்கை — பொய்யான இம்மண்ணிலே நடக்கும், அல்லது, நடத்தப்படும் மெய்யான வாழ்க்கை — உண்மையும் யதார்த்தமும் சமூகப் பிரக்ஞையுடன் இரண்டறக் கலந்த அசலான ஒரு கதையே அல்லவா?

ஆடி அடங்கும் இந்த 'வாழ்க்கைக் கதை' — ஆடி அடங்காத இந்தக் 'கதை வாழ்க்கை'யின் சித்திர விசித்திரங்கள் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் என்பதில்லை! — எனக்கும் வெளிச்சம்தான்!

இந்த உண்மைக்கு — சத்தியத்துக்கு — தர்மத்துக்கு உதாரணமாகவும் உத்தாரணமாகவும் விளங்குகிறாள் **பார்வதி! என் பார்வதி!** — தேவலோகப் பாரிஜாதப் பூ மண்ணிலும் மலர்ந்து மணம் பரப்பும் என்பதற்கு நிதர்சனச் சாட்சியமாகப் பொலிந்திடும் தமிழ்ச் சாதி

தமிழச்சி அவள்! — அவளே கன்னித் தொழுவப் பொற் சுடராகவும் திகழ்கிறாள்! — அவள் கதை புதியது; புதுமையானது; புரட்சியானதுங்கூட! — ஆமாம், உண்மைதான்! — புதிய பூபாளத்தின் பொன் விடியல் ஆயிற்றே பார்வதி!....

**பெ**ண்ணைப் பற்றி நிரம்பவே சொல்லி விட்டவன் நான். நான் மட்டிலுந்தானா?—ஆமாம்; என்னுடைய கதைகளும் கூடத்தான்!

இன்னமும் சொல்லட்டுமா?—பாடட்டுமா?
**"விதியின்நாயகி பெண்ணென்றால் — அவளே**
**வீதிக்கும்நாயகி ஆகிவிடுவாள்!**
**அருமைமிகு பெண்மைக்குப் பேர்சொல்லி — உலகில்**
**பெருமையுற வாழ்ந்துகாட்டிப் பேரெடுப்பாள்!**
**எட்டிநின்றால் பெண், மாயப்புதிரேதான்! அவளை**
**ஒட்டிவந்தால், அவளே புதுமையன்றோ!**
**சோதனையும் புதிருமே புவனமென்றால் — அவள்**
**சோதனைக்கும் புதிருக்கும் விடையாவாள்!**
**பொறுமைக்கு அவள்தாயாவாள் — உலகச்**
**சிறுமைக்கு அவளே தீயாவாள்!**
**அள்ளியணைத்தால், அவள்குழந்தை!—அவளே**
**கிள்ளியணைத்தால், நாம் குழந்தை!....**

**த**மிழ்ப் படைப்பு இலக்கியத்தின் புதினத்துறைக்குப் பேர்சொல்லி — உங்கள் பூவையின் பெயரைச் சொல்ல இப்போது என் பார்வதியும் மனம் கொடுத்துக் கைக் கொடுத்திருக்கிறாள்!— நம் அருமைத் தமிழ்ச் சமுதாயத் திற்கு அவள் விதியாக மட்டுமல்லாமல், சவாலாகவும் தலை நிமிர்ந்து நிற்கிறாள்!

என் அருமைப் பார்வதி உங்களுக்குத் தெரிந்தவள் தான்!—'தாய்' அன்று பழக்கப்படுத்தியவள் பெருமை மிகு அன்புப் பார்வதி!...

பூவையின் கடைசி நாட்கள் இவை !

நல்ல நேரத்தில்தான், 'பார்வதி, தேவலோகப் பாரிஜாதமாக' மனம் பரப்பி, மணம் பரப்பத் தொடங்கியிருக்கிறாள் ! பார்வதியின் அன்பு மாண்புமிக்கது — மகத்தானதும் கூடத்தான் !...

அன்று...

கவிச்சக்கரவர்த்திக்குச் சடையப்ப வள்ளல் கிடைத்தது இலக்கியச் சிறப்பு வாய்ந்ததாகும் !

இன்று....

எனக்கும் ஒரு வள்ளலாக, அறிஞர் துரை. இராமு விளங்குகிறார்.

தமிழக அரசின் முதற் பரிசுகளை வென்றவர் பூவை என்பார்கள், தமிழ் இலக்கியத்தின் திறனாய்வாளர்கள். அந்த நற்பெயருக்கு மேலும் மணம் ஊட்டுவாள் தேவலோகப் பாரிஜாதம் பார்வதி !

உங்கள் அருமைப் பூவையை நீங்கள் நாளும் பொழுதும் மகிழ்வுடனும் அன்புடனும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆயிற்றே. இலக்கிய ஆர்வலர்களாகிய நீங்கள் உங்களையெல்லாம் மறப்பேனா !

நன்றி !

''தமிழரசி''
25—12—93

**பூவை. எஸ். ஆறுமுகம்**

# தேவலோகப் பாரிஜாதம்

வேடிக்கைதான் !

உமையவள் ஒற்றைக்கால் ஊசிமுனைத் தவத்தை மனமார்ந்த வீர வைராக்கியத்தோடும் நெஞ்சார்ந்தத் தீவிர நேசத்தோடும் இன்னமும் கூட மேற்கொண்டிருக்கின்றாளே...?

அதனாலேதான், பிறைசூடி ஈசன் இன்னமும்கூட அர்த்தமுள்ள கள்ள விழிப்பார்வையை அர்த்தத்தோடு சிந்திக் கொண்டே இருக்கிறானோ?...

பார்வதி சுயப்பிரக்ஞை அடைந்தாள்!—அழகான கண்களின் ஓரத்திலே, அழகான கண்ணீர் அழகாகவே கசிந்தது வழக்கம்போலவே, அவள் இப்போதும் புடைவை முந்தானையைக் கொய்து, கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவில்லைதான்!—சுடுகின்ற கண்ணீரைச் சூடு மாறாமல் உடனுக்குடன் துடைத்துக்கொள்ளவில்லையென்றால் இந்த மண் உலகம்—பாழாய்ப் போன இந்த மண் உலகம், அஸ்தமித்து விடுமா என்ன? வெளியே, ரேழியிலிருந்து படங்கி உள்ளே இரண்டாங்கட்டுக் கூடத்துக்குத் திரும்புகிறாள்.

காகம் கரைகிறது.

காலமும் கரைகிறது.

ஆத்மநாதன் தம்மை மறந்து உறங்கிக் கொண்டிருக்கிறார்; கவலைகளையும் கஷ்டங்களையும் அவர் அந்நேரத்தில் மறந்து விட்டிருக்க வேண்டும். ஜன்னல் கம்பிகளின் வழியாகப் படர்ந்திருந்த பின் நிலவின் கம்பீரம் குறையாத வெளிச்சத்தில் அவருடைய முகம் அன்போடும் கருணையோடும் பாசத்தோடும் பரிவோடும் விளங்கியது.

''அப்பா !...''

பார்வதி முணமுணக்கிறாள் ; உந்திக் கமலத்தின் மொட்டு வெடிக்கத் தவித்துத் துடிக்கின்ற கமலமாகக் கண்மூடிக்கிடந்த அழுகை, இருந்திருந்தாற்போல் கண் மலர்ந்து வெடித்து நெஞ்சுக்குள்ளே பாய்கிறது. உள்ளம் மட்டுமல்ல, உடலும்தான் நடுங்கித் தொலைக்கிறது. அவள் எதை நினைப்பாள் ?- எதை மறப்பாள் ? - நினைவும் மறதியும்தான் வாழ்க்கையா ? கனவுகளையும் காட்சிகளையும் பொய்யாக்கி விட்டு, அவள் மனம் சுழல்கிறது. கனவுகளிலே அவள் அந்தரங்க பூர்வமாகச் சுழல், நனவுகள் அவளுள் அறிவு பூர்வமாக சுழல் கின்றன.

என்ன சத்தம் ?

அம்மா புரண்டு படுக்கிறாள் !

பார்வதி இப்போதும் சிலையென மலைத்து நிற் கிறாள் . அம்மாவிடம் அப்பா அடிக்கடி சொல்லுவதை நினைத்துக் கொள்கிறாள் : 'சிவகாமி ! உலகத்தில் நடக் கக்கூடியதும் நடக்க வேண்டியதுமான வாழ்க்கை எதுவுமே அதனதன் விதிப்படியும் பிராப்தப்படியுந்தான் நடக்கும் ; நடக்கவும் முடியும். ஆகச்சே, நாம் என்னிக்கோ நடத்தப்போற அல்லது, நடத்தவேண்டிய தெய்வச் சித்தத்தின் பேரிலான கலியாணம் என்கிற கட்டாயமான ஒரு நாடகத்துக்காக, அதற்கான வேளைக்கு முன்னாடியே வெறும் மனுஷர்களாகிய நாம் வீணாக மனசைப் போட்டு அலட்டிக்கிறதிலே எந்த நியாயமும் எந்த அர்த்தமும் இல்லேன்னுதான் எனக்குத் தோணுது !... மூத்தவள் கமலி கல்யாணம் நல்லபடியாக நடந்தது மாதிரியே, சின்னவள் பார்வதியோட கலியாணமும் நல்ல விதமாகவே நடந் திடும் ! என்னை நம்பு ; ஏன் தெரியுதா ? — நான்

தெய்வத்தை நம்புகிறவன்; நம்பிக்கிட்டும் இருக்கிறவன் !' — அப்பாவிற்கு வாக்கிலோ, நாக்கிலோ சனியாம் ! — சொன்னால் பலிக்குமாம் ! சொன்னதும் பலிக்குமாம் ! அம்மாவின் நம்பிக்கை இது ! அவள் பெருமூச்செறிகிறாள்

ஊதல் காற்று

பார்வதிக்குத் திடீரென்று கூதல் நடுங்கியது; எண்ணங்களின் சிலிர்ப்பில் கூதல் சிலிர்த்திருக்கலாம், இப்போதெல்லாம் இப்படித்தான் அவளுக்கு அடிக்கடி உடம்புக்கு வந்து விடுகிறது. என்ன செய்வது? — அவள் ஒருத்தி சம்பாதித்தால்தான் உண்டு; இல்லாவிட்டால், நான்கு ஜீவன்களும் பட்டினிதான் ! சோதிப்புகள் ஒன்றா, இரண்டா? கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமா நஞ்சமா? இந்த லட்சணத்தில் அவள் வரதட்சணைக்கு எங்கே போவாள் ?... அவள் எங்கேயும் போக மாட்டாள்; அவள் அவளுக்குள்ளே தான் இருப்பாள் ! — அவள் மனம் அப்படி; தவம் அப்படி; வைராக்கியம் அப்படி ! அவள் சிரித்தாள்; மனம் விட்டுச் சிரித்தாள்; வாய்விட்டுச் சிரித்தாள் !'' ஓ மை குட்னெஸ்...'' ஈரம் கசிந்தது ! ஈரத்தின் கசிவிலே பெருமை இருந்தது; கசிவின் ஈரத்திலே பெருமிதமும் இருந்தது.

சுவர் அலமாரியில் 'டைம்பீஸ்' வீரிட்டது.

மணி ஐந்து.

தலைவாசலில் வந்து நின்றாள் பார்வதி. மலர்ந்தும் மலராத விடிகாலைப் பொழுதின் அமைதியான இயற்கையின் எழிலை ரசிப்பதென்றால், அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்; மனத்திற்கு ஓர் ஆறுதல் கிடைப்பதும் வழக்கம். இப்படிப்பட்ட ரம்மியமான நேரத்திலேதான் அன்றைக்கு ஒரு நாள் அவள் செந்தில் என்கிற அந்தப்

பணக்காரப் பிள்ளையை முதன்முதலிலே சந்தித்தாள்!— 'இந்தச் செந்தில் உண்மையிலேயே நல்ல பிள்ளை தானோ ?'— பார்வதி விதியிடமா விடை கேட்கிறாள்?...

மகாலட்சுமித் தெரு இன்னமும்கூட வெகு நிதான மான அமைதி கொண்டு காட்சியளித்தது.

இப்போது அவளுக்கு ஆபீஸ் நினைவு வந்து விட்டது. பரபரப்பு அடைந்தவளாக, வீட்டு அலுவல் களைக் கவனிக்க இரண்டாம் கட்டில் அடியெடுத்து வைத்தாள்.

அதற்குள் :

குழாயில் கார்ப்பரேஷன் தண்ணீர் கருணையே வடிவெடுத்துக் கசியத் தலைப்பட்டது.

விஷமப் புன்னகையில் சுதாரித்துக் கொண்டாள் பார்வதி ; அடுப்படிக்கு விரைந்து எவர்சில்வர் குடத்தைக் கழுவி எடுத்து வந்து குழாயடியில் வைத்தாள் : சுதந்திர மான சுகம் அவளை அணைத்தது. போட்டி இல்லாத தொரு தனிச்சுகம். தியாகராயநகர்ப் பகுதியில், இப்படிப் பட்ட வசதி வாய்ப்புகளுடன் தனிவீடு அமைந்ததென்பது அதிர்ஷ்டவசமான காரியம்தான். நாட்டிலே நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட புதிதில் கிடைத்த வாடகை வீடு அது. ஒரு காலத்தில் அப்பாவின் சமர்த்து கொடி கட்டிப் பறந்ததென்னவோ பொய் இல்லைதான் ! குழாயை அடைத்தாள் ; நிரம்பி வழிந்த குடத்தை இடுப் பில் தூக்கி வைத்துக் கொண்டு நடந்தாள். கூடத்தில் இறக்கி வைத்தாள். சின்னத்தட்டை எடுத்து மூடினாள். அருகில் தம்ளரையும் வைத்தாள் !— சின்னப்பயலுக்கு அடிக்கடி தாகம் எடுக்கும், குடத்தை இங்கே வைத்தால் தான் அவனுக்கு சௌகரியமாக இருக்கும். இதுவும் பார்வதி செய்த ஏற்பாடுதான். இந்த குடத்திலே தண்ணீர் மட்டுந்தான் நிரம்பியிருந்ததா ?

அது, கமலி பாசத்தோட வாங்கித் தந்த குடம் அல்லவா ?

கமலீயின் அன்பு தனி ; பாசமும் தனிதான்.

சொல்லப் போனால் அன்பின் அர்த்தங்களையெல் லாம் அறிவு பூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் பார்வதிக்குப் படித்துக் கொடுத்தவள் கமலி என்றுகூடச் சொல்லிவிடலாம். நடப்பும் அதுவே.

'கமலி!' – உள்வட்டமாகப்பாசம் விம்மியது ; தவித் தது; ஏங்கியது ; உருகியது.

கமலி என்றால், கமலிதான் !

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இஷ்டம் இல்லாமலே தன் இஷ்டப்படி கமலி வாங்கிவைத்துவிட்டுப் போன எவர்சில்வர் குடம் அது. பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டுக்குப் புறப்பட ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், பாண்டிபஜாரில் நூற்றி அறுபது ருபாய் சுளைசுளையாக எண்ணிக் கொடுத்து வாங்கிக் கொடுத்தாள். முன்பு கல்யாணத்தின்போது, எலுமிச்சை நிறத்திலே உயர்வான பட்டுப்புடைவையைப் பார்வதிக்கு வாங்கித் தரவில்லையா கமலி?...

காந்தி மகாத்மாவுக்குப் போய் பேசத் தேவை கிடையாது! அன்பு எதையும் கேட்பதில்லை. எதையும் கொடுக்கவே செய்யும்!

தென்றல் சுகமாக ராகம் பாடியது.

பாதங்களில் என்னவோ இழைந்த மாதிரி இருந்தது அமெரிக்கையாகவும் நிதானமாகவும் குனிந்தாள்: கரப் பான் பூச்சி! ஏற்றி விட்டாள். கமலியானால், இந் நேரம் வீடு தூள்பட்டிருக்கும்; 'தங்கச்சிக்குத் தைரியம்

ரொம்பத்தான் ; ஆனாலும் பொம்பளைங்களுக்கு இவ்வளவு துணிச்சல் தேவைதானாக்கும்?' என்பதாகத் தன்னுடைய மாமூலான பல்லவியைப் பாடியிருப்பாள்! பார்வதி சலனம் அடைந்தாள்! — 'கமலி ... பாவம். சொல்லப்போனா, ஆம்பளைங்களைக் காட்டிலும் பொம்பளைங்களுக்குத்தான், தைரியமும் துணிச்சலும் கூடுதலாகவே தேவைப்படும். ஏன்னா, இவங்களுக்குத் தான் இந்தத் தமிழ்ச்சமுதாயத்திலே சட்டங்களும் சம்பிரதாயங்களும் கட்டுப்பாடுகளும் கவனிப்புகளும் ரொம்ப ரொம்ப அதிகமாக விதிக்கப்பட்டிருக்கு; அதனாலேதான், இவங்களைச் சோதிக்கிற சோதிப்புக்களை எதிர்கொள்ளவும் எதிர்க்கவும் வெல்லவும் இவங்களுக்கு, அதாவது, பெண்களுக்கு துணிச்சலும் தைரியமும் அவசியமாகத் தேவைப்படும்' — நிர்த்தாட்சண்யமான பிடிவாதத்தில் காலூன்றியவாறு, தலையைக் கம்பீரமாக நிமிர்த்தினாள் பார்வதி; நழுவி விழுந்த மாரகச்சேலையைச் சீராக்கிக்கொள்ளத் தவறி விடவில்லைதான்,

விடியல்பாப்பாவுக்குக் கீழ்வானம் 'ஆராரோ... ஆரிரரோ' பாடுவதை நிறுத்துகிறது; 'உலகநீதி' பாடப் போகிறதாம்!

வெளிச்சம் வந்து விட்டால், தன்னம்பிக்கையும் வந்து விடும் போலிருக்கிறது! மெய்சிலிர்த்தாள் பார்வதி; மெய்!

''அக்கா அக்கா!''

சின்னப்பயல் ராமையா கனவு கண்டு விழித்திருக்க வேண்டும் பாசக்கனவு கண்டிருப்பான். ஆர்வத்தோடும் ஆவலோடும் சுற்றும் முற்றும் பார்த்தவன், கமலியைக் காணாததால் ஏமாற்றம் அடைந்தவனாக, உதடுகள் துடித்திட மீண்டும் கிழிசல் பாயில் குப்புறப் படுத்துக் கொண்டான்.

மின்விசிறி நின்றது.

பார்வதி நெடுமூச்செறிகிறாள்!— 'எங்க அம்மான் மகன் ஆனந்த் எங்க கமலிக்குத் திருப்பூட்டி ஸ்ரீ ரங்கத்துக்கு அழைச்சுக்கிணுபோய் விளையாட்டுப் போல வருடம் ஒண்ணு ஆகப் போகுது!' பாசத்தின் தவத்தில் மனம் நெகிழ்ந்தது! குடும்பத்தின் சுமையில் செம்பாதியைக் குறைத்து வைத்த புண்ணியவதி கமலி! — திட்டமிட்ட பிரகாரம் இந்த வருடப் பிறப்பிற்கு இங்கே அவளால் வர முடியாமல் போய் விட்டதாம்! — ஆபீஸ் போன கையோடு பதினைந்து பைசா செலவில் குடும்பத்தின் க்ஷேமலாபத்தை அக்காவுக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும், துளி தாமதித்தாலும், அவள் துளிகூட பொறுக்க மாட்டாள்!... ஏழ்மைக்கு பசியை மறக்கத் தெரிந்தாலும், பாசத்தை மறக்கத் தெரியவில்லையே! நகர்ந்தாள்.

ஸ்டவ், தீப்பெட்டி எல்லாம் தயார்.

பால் வந்தது.

பார்வதி அடுப்பைப் பற்ற வைத்து ஒரு மிடறு காப்பியாகிலும் போட்டுக் கொடுத்தால்தான், சிவகாமிக்கு உடம்பிலும் சூடு பிடிக்கும்; கண் மூடிக் கண் திறப்பதற்குள்ளே. இட்டிலி சுட்டு, புதினா துகையலோ, தேங்காய்ச் சட்டினியோ அரைத்துத் தாளித்துவிடுவாள். அப்பால் பார்வதிக்கு அலுவலகத்தில் மத்தியான்னம் பசி ஆறுவதற்காக உப்பை முனைப்பாகத் தூவித் தயிர்ச்சாதம் பிசைந்து டிபன்பாக்சில் நிரப்பி, பூண்டு ஊறுகாய் வைத்துத் தயாராக வைத்திருப்பாள். ராமையா பள்ளிக்கூடத்துக்கும் பார்வதி அலுவலகத்துக்கும் விடை பெற்றுச் சென்றபின். சிவகாமியும் ஆத்மநாதனும் ஜோடி சேர்ந்து கும்பகோணம் வெற்றிலையையும், சீவலையும் பன்னீர்ப்புகையிலையை

யும் வாய் கொள்ளாமல் மென்று விழுங்கிய வண்ணம், ஜோடியாக நளபாகத்தில் இறங்கி விட்டார்களானால், சொல்லி வைத்த பாவனையில் மணி பன்னிரண்டு ஆகி விடும். நீராடி, நீறு தரித்து, பூஜை பண்ணி தம்பதி சமேதராக உண்டு முடித்து ஆளுக்கொரு முடுக்கில் உறக்கம் என்னும் சிறையில் அடைக்கப்பட்டு. பிறகு ஐந்துமணி சுமாருக்கு விடுதலை பெற்று விடுவதும் சகஜம். அப்புறம் சாயந்தரம் காப்பி வேளையில், வீடு கலகலப்பாகி விடும். இரவுச் சாப்பாடு தயாரிப்பது பார்வதியின் கண்ணியமான பொறுப்பாக அமையும். பிறகு... டிரான்ஸிஸ்டருக்குப் பொழுதுபோக அந்த குடும்பமே பொழுதுபோக்காகத் துணை நிற்பதும் நடைமுறைதான்

சே ! என்ன ஜன்மம்... என்ன வாழ்க்கை !

பார்வதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'இருப்பு'க்கு எங்கே போவாள் அவள் ?

காப்பி மணக்கிறது.

பார்வதி தயாரிக்கும் காப்பியின் முதல்மரியாதை அம்மா சிவகாமிக்குத்தான் கிடைக்கும். பெற்றவளின் படுச்கையை நோக்கி நடந்தாள். அவளுக்கு அவளே சுமையாக ஆகிவிட்ட மாதிரியான ஓர் உணர்வு மறுபடி கிளர்ந்தெழுந்தது இப்படிப்பட்ட பரிட்சை நேரங்களில் அவள் தனச்குத்தானே சிரித்துக் கொள்வது வழக்கம்: பழக்கம் வள்ளுவத்தின் விதியை மீறக் கூடாதுதான் : அரைக்கணம் அம்மாவை ஊடுருவினாள். குடும்பத்தில் இன்னம் மிச்சம் மீதம் இருந்த பாதிப் பாரத்தை நல்ல நேரத்தில், நல்ல படியாகக் கழித்து வைக்க வேண்டிய பொறுப்பான கடமையின் ஆதங்கம் அம்மாவின் வெளுப்பேறிய முகத்தில் துல்லியமாகவே தெரிந்தது 'எங்க பாரு குட்டியையும்

மனித நேசமுள்ள அன்பான இடத்திலே கட்டிக்கொடுத்திட்டா, என்னோட மனச் சுமை முழுசாவே கழிஞ்சிடும்: நானும் உடம்புதேறி ஓடியாடி நடமாட ஆரம்பிச்சி விடுவேன்; அப்புறம் எங்களுக்குக் கவலை ஏது? கஷ்டம் ஏது? நாங்க நினைக்கிற மாதிரியே, எல்லாம் தெரிஞ்ச ஆண்டவனும் நினைச்சால்தான். நாங்க நல்லதனமாகத் தப்பிக்க முடியும்! எங்க குடும்பமும் நல்ல படியாகத் தப்பிப் பிழைக்க முடியும். வயசுக்கு வந்திட்ட பெண்ணை நாலைஞ்சு வருஷத்துக்கு மேலேயும் வீட்டுக்குள்ளே போட்டுப் பூட்டி வச்சிருந்தா ஊர் உலகமும் ஜாதி சமூகமும் ஏசாதா, என்ன?'— அப்பாவின் தலைமாட்டில் குந்திக்கொண்டு பரம ரகசியமாக அம்மா ஓதியது நேற்றுச் சொன்ன மாதிரி இருக்கிறது! — சலனம் விளைந்த சடுதியில் சாந்தியும் விளையவே, சமன் நிலை அடைந்தாள் பார்வதி. ''அம்மா!'' என்று குரல் எழுப்பி, சூடான காப்பியோடு சிவகாமி அம்மாளை எழுப்பினாள்.

''அம்மாடி கமலி!''

அமமா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

நேருக்கு நேராக —

பார்வதி மோகினிச் சிலையாக நின்று கொண்டிருந்தாள்,

''காப்பி போட்டுக் கொண்டாந்திட்டியாம்மா?''

''ஆமாம்மா!''

''பாரு குட்டின்னா. பாருக் குட்டியேதான்!''

## 10

"சரி, சரி; எந்திரிச்சு வாயைக் கொப்பளிச்சுட்டு, சூடு ஆறுறத்துக்குள்ளாற காஃபியைக் குடி, அம்மா !"

"ஆகட்டும், பார்வதி".

பார்வதிக்கு வாயெல்லாம் பல்; பல்லெல்லாம் குறும்புநகை.

அம்மா இனி இயந்திரம் ஆகிவிடுவாள் ! தஞ்சாவூரில் விடிந்ததும் விடியாததுமாகவே கீழேவாசல் கடை வீதி அமர்க்களப்பட ஆரம்பித்து விடுகிற மாதிரி ஆகி விடும் இந்த வீடு !....

பார்வதிக்குச் சிரிக்கவும் தெரியும் !

# 2

உதயம் பூமணம் சுமக்கிறது.

வானொலியில் தமிழ்மணம் கமழ்கிறது.

பார்வதி ஆடும் பம்பரமாக, ஆடாமல் சுழன்றாள். காப்பி குடித்து முடித்ததும். எத்தனையோ காரியங்களைச் செய்து முடித்து விட்டாள். பனகல்பார்க் சென்று காய்கறி வாங்கி வந்தாள். சுமங்கலிக் கிழவியிடம் பச்சைக் கொத்தமல்லி, கறிவேப்பிலை 'கொசிறு' வாங்கிய கையோடு, 'நீ மகராசியாக இருப்பாய் அம்மா !' என்கிற வழக்கமான வாழ்த்துதலையும் வாங்கி வந்தாள். முந்தானைக் கிழிசல் தெரியாமல் இடுப்பில் செருகிக் கொண்டவளாகச் சாண் அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலா முற்றத்தின் கீழ் முனையில் அரிவாள் மனையும் கையுமா அமர்ந்து. புடலங்காயைப் பொறியலுக்கு நறுக்கி வைத்தாள். முருங்கக்காய், நாட்டுக் கத்தறிக்காய், வெங்காயம் எல்லாம் சாம்பாருக்குத் தயார் ஆயின, தோசை மாவு பிரச்சனையும் தீர்ந்தது. இப்போது குளியல் அறைக்குள் பிரவேசித்தாள். கதவு என்று பேர் படைத்த பிரம்புத் தட்டியை மூச்சை இழுத்தவாறு, இழுத்து மூடினாள், ஆனால் வாழ்க்கைக் கனவுகள் மாத்திரமே திறந்து கொண்டன. வாழ்க்கையின் சுந்தரக் கனவுகளும் இந்நேரத்திலேதான் சொகுசாக நீராடும் போலும் நயமாகவும் விநயமாகவும் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். வினாடிகள் நெளிந்தன. இப்பொழுது அவள் தனக்குள் தானாகவே நாணம் பூத்துக் கொள்கிறாள். விடியல் மந்தாரத்திலே தளிர் மேனியிலே குளிர் நீர் பட்டதும், மனமும் தளிர்த்திருக்கலாம். விளம்பரப்

பெருமை கண்ட 'விமல்' புடவையை விளம்பரப் படுத்தாமலே உதறினாள். எலுமிச்சை நிறத்தில் அழகு காட்டிய சோளியையும் ஏந்தினாள் ஏந்திழை. இடுப்பில் ஈரம் சொட்டச் சொட்ட வெளியேறினாள் பார்வதி.

காலைச் செய்திப் பத்திரிகை, காலை இளங்காற்றில் படபடக்கிறது.

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் தலைமையில் அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்று விரைவில் டில்லி சென்று பிரதமரைச் சந்திக்கப் போகிறதாம்!

அப்பாவுக்கு அவல் கிடைத்துவிட்டது.

'மியாவ்!'

பார்வதி மனிதநேயம் துலங்கப் புன்னகை செய்கிறாள்.

அடுப்பங்கரையில் காய்ச்சி இறக்கி ஆறவைக்கப் பட்டிருந்த பாலுக்குக் காவல் இருந்தது வெள்ளைப் பூனை.

எல்லாம் பார்வதியின் வாய்ப் பாடம்; கைப்பாடமும் கூட.

வாண்டுப் பயல் ராமையா சிந்துவெளி நாகரிகத்தைக் கரைத்துக் குடித்துக்கொண்டே இருந்தான்.

காலம் ஓடியது.

ஆனால்

பார்வதி ஓடவில்லை; வெளிப்புறக் கூடத்தில் வந்து நின்றாள். ஹைதர் காலத்தின் நிலைக்கண்ணாடி அவள் முன்னே வந்து நிற்கிறது.

மகாலட்சுமி பூலோகத்தில் குளித்து முழுகி மஞ்சள் பூசிக் கொண்டால், பார்வதியைப் போலவேதான் காட்சி தருவளோ ?

'சுப்ரபாதம்' மிதந்து வருகிறது.

பூவோடு பொட்டும் மணத்தது.

புது நிலவு ஆனது புன்னகை.

நாணத்தின் மருட்சியில் 'கோலமாதர் விழிகள் கண் சிமிட்டின.

முகப் பருக்கள் என்றால், ஒரு கவர்ச்சிதான்.

அழகும் கவர்ச்சியும் கொழித்த இளம் மார்பகத்திலே ஒற்றை வடச் சங்கிலியின் மயில் பதக்கம் மையம் கொண்டது, 'நான் புஷ்பவதியாகி எனக்குச் சடங்கு சுற்றினப்ப, அம்மாவும் அப்பாவும் கூட்டுச் சேர்ந்து சிறுவாடு சேர்ந்துச் சரபோஜி அரமனைப் பக்கம் இருந்த பத்தர்கிட்டே செஞ்சி போட்டது இது !'

சேலையின் முகதலைவு சீர் ஏந்திற்று.

# 3

அதோ :

சீர் பெற்ற வாலைக்குமரி, தாய் வீட்டுச் சீரென நின்று கொண்டே யிருக்கிறாள் !

" அம்மாடி !"

அம்மா :

" மகாலட்சுமியாட்டமே இருக்கிற நீ மகாலட்சுமி யாகவே வாழ்வாய், தாயே!"

சுடுநீர் சிலிர்க்கிறது.

அலுவலகத்தின் எட்டு மணி நேர வேலைக்கு வீட்டை விட்டு ஒன்பது மணிக்குப் புறப்படுவதுதான் தர்மம் !

இல்லையென்றால் பதிப்பகம் கோபிக்காதா ?

ட்ரங்குப் பெட்டியில் கைப்பையை எடுத்தாள் பார்வதி ; கூடவே அந்தக் கடிதமும் வந்தது சாமான்ய மான கடிதமா அது ?— அது காதல் கடிதம் ! யாரோபத் தொன்பதாவது அசல் இளந்தமிழ்ச் சிங்கம் ஒன்று காத லாகி, கசிந்து, கண்ணீர் மல்கி வரைந்திருந்த கடிதம் ஆயிற்றே ? அன்றைக்கு அப்பாவும் அம்மாவும் சிரித்த மாதிரி இன்றைக்குப் பார்வதியும் சிரித்தபடியே, அந்தக் கடிதத்தை அதே பெட்டியின் அடியில் திணித்தாள். கைப் பை கையோடு வந்தது,

என்னமோ சலசலப்பு.

ஓ ! டம்பப்பை சிரிக்கிறது.

நாய் வேஷம் ! சே ! ஆற்றாமை பாதியும் ஆத்திரம் பாதியுமாக அவள் தன்னைத்தானே நொந்து கொண்டாள். நாய்க்குப் போட்டியாக மனதிற்குள்ளேயே குரைத்துப் பார்த்துக் கொண்டாள். இப்போது அவளும் சிரிக்கிறாள்.

" அம்மாடியோ .. பாருகுட்டி ! வாம்மா ; வந்து இட்டிலி சாப்பிடம்மா ; உனக்கு நாக்குக்கு ருசியா உப்பு முனைப்பாகப் போட்டுப் புதினா துகையல் தயார்ப் பண்ணி இருக்கேன்; வாம்மா !"

" இந்தா வந்திட்டேன்; தம்பி சாப்பிட்டானாக்கும்!.... அப்படின்னா, எனக்கும் நேரம் ஆச்சுத்தான். இதோ வந்துட்டேன் !"

நாலே நாலு இட்டிலிக்குக் கூட ஏப்பம் வரும் போலும் ! இதழ்க்கரையில் துளிர்த்த ஈரத்தை மட்டும் சேலை முந்தானை துடைத்துக் கொண்டது.
'உங்கள் விருப்பம்' ரேடியோவில் ஒலிக்கிறது ; எதிரொலிக்கிறது.

"அப்பா, நான் போயிட்டு வாரேன் !

"பத்திரமாய்ப் போயிட்டு வாம்மா !"

"போய் வர்றேன், அம்மா !"

"மகராசியாகப் போய்வா, பாருக்குட்டி!"

அதோ, புறப்பட்டு விட்டாள் குமாரி பார்வதி பி.ஏ. !...

தோட்டம் வந்தது.

நின்றாள்.

பூத்துக் குலுங்கிய ரோஜாப் பூக்கள் தூய்மையான நறுமணத்தைத் தூவியும் நுகர்ந்தும் காற்றில் ஆடின; சாய்ந்தாடின.

ரோஜா என்றதும், செந்தில் தோன்றினான்!

செந்தில் என்றவுடன் 'டால்ஃபின்' நிற்கிறது.

அவள் மனம் மகிழ்ந்தாள், மனம் நெகிழவும் செய்தாள். செந்திலுக்கு ரோஜாப்பூ என்றால்தான் எவ்வளவு நேசம், பாசம், பிரியம்! யார் இந்தச் செந்தில்?... செந்தில் நாதன் என்கிற செந்தில் ஒரு நாளைப் போலவே தினமும் இனிமையான விடியல் நேரத்திலே இங்கே வருகிறார்; தெருவிலே நிற்கிறார்; வாசலில் நான் நின்றால், என்னை என்னவோ ஒரு நம்பிக்கையோடு கனவு காண்பவரைப் போலப் பார்க்கிறார். பெருமூச்சு விடுகிறார். பிறகு, தோட்டத்திற்குள் நுழைந்து, சமிக்ஞையில் அனுமதி கோரி, ஒரேயொரு ரோஜாப்பூவை மட்டிலும் அலுங்காமல் நலுங்காமல் கிள்ளி எடுத்துக் கொண்டு கைகளை ஆட்டி 'டாடா' சொல்லிக் கொண்டு, அழகான அந்த ரோஜாப்பூ வண்ணக்காரிலே பறந்து விடுகிறார்!... செந்தில் யாராம்? நான் யாராம்? — இமைகள் துடிக்க நடந்தாள்.

தெருவிலே, பெரிய இடத்தைச் சார்ந்த பெரிய கல்யாண ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது.

பார்வதிக்குப் பெருமூச்சுத்தான் வந்தது. 'நம்ம மாதிரி சின்னச் சின்ன வீடுகளிலே பூச்சாண்டி காட்டுகிற இந்த வரதட்சணைப் பிசாசு இந்த மாதிரியான பெரிது

பெரிதாக உயர்ந்து நிற்கிற பங்களாக்களையும்கூட விட்டு வைக்கிறதாகப் பத்திரிகை எதுவும் சொல்லக் காணோமே? வேடிக்கையான ஜனங்கள்! வினோதமான சமுதாயம்! மனித ஜாதியும் மனித சமுதாயமும் நவநாகரிகமான இந்த அவசர யுகத்துக்கு ஊடாலே நின்று நிதானிச்சு எப்பத் தான், எப்படித்தான் உண்மையாகவும் சத்தியமாகவும் திருந்தவும் சீர்திருந்தவும் போகிறதோ?... எல்லாரும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு இருக்க வேணும் என்கிற சர்வ சாதாரணமாக இயற்கை விதியை. நியதியைப் பாரதத் திருநாட்டுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவே இரண்டு காந்தியை அன்புப் பாரதம் பலி வாங்கிடுச்சு-பலிகொடுத் திடுச்சு! ஈனத்தனமான பொய் வேஷதாரிங்க மலிஞ்சிட்ட தாலே, போலித்தனமாகவும் கேவலமாகவும் ஆகிக்கிட்டு இருக்கிற அருமையான இந்தத் தமிழ்ச்சமூகம் பாடம் கற்றுக்கிட இன்னும் எத்தனை காந்தி தேவைபடப் போகிறதோ?' பிரக்ஞையின் ஆற்றாமையில் அவள் கண்கள் திறந்தன. ''கொஞ்சப் பொழுதிலே நான் எங்கேயோ போயிட்டேனே?' — நடை தொடர்கிறாள்! 'நல்ல காலம்! எங்க கமலிப் பெண்ணு மட்டும் மகாக் கொடுமையான வரதட்சணைக்குப் பலி ஆகிடாமல் தப்பிச்சிட்டா!... ஏன், என்னாலே மட்டும் அதுமாதிரி தப்பிப் பிழைக்க முடியாதா, என்ன?' வைராக்கியமான ரோஷத்தில் கம்பீரமாகவே தலை நிமிர்ந்தாள் தலை நிமிர்ந்தவளை இனம் விளங்காத இன்பவேதனை ஆட் கொண்டது! ஆம் உஸ்மான் சாலையிலே பறந்து மறைந்தது மிஸ்டர் செந்தில் நாதனின் டால்ஃபின்' தான்!

தெரு வந்தது.

''தாயே, பசிக்குதே....''

''பசிச்சால் சாப்பிடுறதுதானே, தந்தையே!''

‘ ஆனால், வழிதான் தெரியலீங்க. நான் அனாதைப் பாவி. உங்க மாதிரி ஒரு மகள் கூட எனக்கு மிஞ்சல்லே ; நான் கொடுத்து வைக்காதவன் ; அதிலேயும், படுகிழம். சொல்லச் சொல்லக் கேட்காமல், வயிறு பசிச்சுக்கிட்டே இருக்குதுங்களே ? நான் என்னா செய்வேன் ? எங்கிட்டுப் போவேன் ?’’

ஈரம் சொட்ட, ஒரு ரூபாய் நாணயத்தைப் பரதேசியிடம் நீட்டினாள் ; நாளைக்குக் காலையில் தன்னை வந்து பார்க்கும்படி கேட்டுக் கொண்டாள் ! ‘நிஜமாவே செந்தில்நாதன் மனிதத் தன்மையும் மனிதாபிமானமும் உள்ளவராகவே தோன்றுகிறார். அவரோட இருப்பிடம் அறிஞ்சு, அவர்கிட்டே இந்தப் பிச்சைக்காரப் பெரியவரை அனுப்பினால் நியாயமான ஒரு தமிழ் உயிர் நீதியோடு பிழைச்சுப் போகும் !’— இனி, பார்வதி நிற்கமாட்டாள்!

வயிற்றுப் பணிக்கு நேரம் ஆகிவிட்டது !....

# 4

**பா**ர்வதிக்கு எப்போதும் முகராசி அதிகம்.

கண்மணிப் பதிப்பகம் வந்தது.

மணி ஒன்பது, முப்பது

வரவேற்புப் பெண் வத்சலா, தொலைபேசிக் கருவியின் வாயைச் சாமர்த்தியமாகப் பொத்திக் கொண்டே, 'வாங்க, பார்வதி, வாங்க,'' என்று கூறி வாய் நிரம்பின வாத்சல்யத்தோடு பார்வதிக்கு வரவேற்புக் கொடுத்தாள்.

திரும்புகிறாள், பார்வதி.

''குட்மார்னிங், மிஸ் பார்வதி.''

''குட்மார்னிங், மிஸ்டர் கமல்!''

உரிமையாளர் கனகசபை உள்ளே இருக்கிறார்

''வணக்கங்க!''

''வணக்கம் ... வணக்கம்!''

எடுபிடிப் பையன் யூசப், பதிப்பகத்தின் 1985 வெளியீடுகளைப் பார்சல் கட்டும் சாலமன்—இப்படி அவரவர்கள் பார்வதியின் பால் பாசம் காண்பிக்கின்றனர்.

'பில்' போடுவதில் மூழ்கியிருந்த பூபேந்திரகுமார் மட்டிலும் வாயைத் திறக்கவில்லை. அர்த்தம் இல்லாத அவனுடைய 'பார்வை' யின் நியாயப்படுத்தப்பட முடியாத அநாகரிகமான அடாவடியை அங்கீகரிக்க மறுத்த பார்வதி பத்துப்பன்னிரண்டு பேர் முன்னிலையிலே அவனுக்குச் சூடு கொடுத்த சோகத்தை அதற்குள் மறந்திருக்க மாட்டான்.

பழைய நினைவுகளின் மின் வீச்சில் பார்வதி பெருமூச் செறிந்தாள்.

நான்கு சுவர்ப் பக்கங்களிலும், திருமண வீட்டில் மொய்' எழுதப்பட்ட பரிசில் பொருட்களை அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருப்பதைப்போல, அணி வகுத்தும் அணி செய்தும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிதான புத்தகங்கள் நிரம்பி வழிந்த ஹால் வந்தது.

கடந்தாள் அவள்.

அவள் : பார்வதி.

துப்புரவோடும் ஒப்புரவோடும் பொலிந்த அதுதான் அவளுடைய நாற்காலி.

எதிர்மேஜையில் தட்டெழுத்து இயந்திரம்.

நாற்காலியிலே அவள் அமர்ந்து விட்டாள் என்றால் அவளும் இயந்திரம் ஆகிவிடுவாளென்றுதான் அர்த்தம். அமர்ந்தாள். மேஜை டிராயரைத் திறந்தாள்; நேற்றுச் சாயந்தரம் 'டைப்' அடித்து முடித்து வைத்து விட்டுப் போயிருந்த அவசரம் அவசரமான நினைவூட்டல் கடிதங் களையெல்லாம் ஒரே கொத்தாக எடுத்து மேஜை மீது வைத்துக் கொண்டாள். ஓய்வாக இருக்கிற நேரத்தைப் பார்த்து, அவற்றில் ஐயாவிடம் கையெழுத்து வாங்கி இன்றைக்கு மெயிலில் அனுப்பி விடவேண்டும்,

''பார்வதி ! வந்திட்டீங்களா ?''

உள்ளேயிருந்து 'பாஸ்' குரல் கொடுத்தார்.

பார்வதி ''ஆமாங்க'' என்று சொல்லி எழுந்து நின் றாள். பூங்கரம் குவித்து வணக்கம் சொன்னாள்.

க்னகசபையும் வணக்கம் தெரிவித்தார். ''நீங்க உங்க வேலையைப் பாருங்க, பார்வதி, ''என்றார்.

பார்வதியின் அழகான உதடுகளில் ஆதரவானதும் ஆறுதலானதுமான புன்னகை அழகாக இழைகிறது.

ரெமிங்க்டன் இயங்கத் தொடங்குகிறது.

கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளுக் கான கடிதங்கள் தயார்; 'செக்' போட்டு அவரவர் களுக்கு அனுப்பிவிட்டால், கணக்கு தீர்ந்து விடும்; நாணயமும் பிழைக்கும்.

வெஸ்ட் கோஸ்ட் பேப்பர் கம்பெனியின் பிரதிநிதி ஒருவர்—இளவட்டம், வாட்ட சாட்டமாக, வெள்ளையும் சொள்ளையுமாக, அப்போதுதான் சூயஸ்கால்வாயி லிருந்து சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கின மாதிரி வந்து நின்று, துண்டுச்சீட்டு ஒன்றைஒயிலாக நீட்டினார். "நீங்க மிஸ் பார்வதி பி. ஏ..... நான் மிஸ்டர். டமில்மணி!"

பார்த்தாள் பார்வதி !

தமிழ்த் திரைப்பட விநியோகத் துறைப் பிரதிநிதி அவர்!

"ஹெல்லோ, மிஸ் பார்வதி!"

ஏறிட்டு விழித்தாள் அவள்.

என்னவோ கேட்கிறார்!

"என்ன கேட்கிறீங்க? கேட்பதைத் தமிழிலே கேளுங்களேன், ஐயா"

"ஓ! நீங்க பார்வதிதானே?"

"ஊம்!"

"என்னை மறந்திட்டீங்களா?'

"ஆமாம்; மயந்திட்டதாலேதானே, உங்களை சட்டென்று இனம் கண்டுக்கிட முடியல்லே?"

அரைக்கணத்தில் ஆண்டவனை ஆங்கிலத்தில் கூவி அழைத்து, கால் வினாடி வருந்தினார் பிரதிநிதி. சம்பவம் ஒன்றினை நினைவூட்டினார். தமிழ்ப்பேச்சுப் போட்டி ஒன்று, அனைத்துக் கல்லூரிகளின் சார்பில் நடந்த சமயத்தில் ராணிமேரி கல்லூரியிலிருந்து போட்டியில் கலந்து கொண்டபார்வதி தங்கப்பதக்கத்தை வென்று தமிழ் வீராங்கனையாக நின்ற நிகழ்ச்சியை விளக்கியதோடு அந்தப் போட்டியில் தானும் பங்கு கொண்டு மண்ணைக் கவ்வின துயரத்தையும் வர்ணித்தார் இளைஞர். "இதை நீங்க வச்சுக்கங்க" என்று கூறி, மற்றொரு பார்வையாளர் அட்டையையும் சமர்ப்பித்தார்.

கனவுக் காட்சிகளிலே மிதந்தாள் பார்வதி!— தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டபோது, 'பார்வதி' என்று அன்புடன் விளித்துப் பாராட்டுத் தெரிவித்த அந்த வாலிபர் இவராகத்தான் இருக்க வேண்டும்!

"உங்க பேரைச் சொல்லலையே?"

"நீங்க அதைக் கேட்கலையே?— ஓ கே! என்னோட பெயர்: தமிழ்மணி!... இனி மறுதரம் உங்களைச் சந்திக்கக் கூடியபாக்கியம் கிடைச்சா, உங்க கையிலே நான் அசல் தமிழிலேயே பேசி மகிழ்வேன் பார்வதி!"

"ரொம்ப நன்றி; ஐயாவை போய்ப் பாருங்க!"

உரிமையாளரின் அறைக்கு வெளியே ஜாக்கிரதைப் பிராணி எதுவும் தரிசனம் தராத காரணம் கொண்டு, தமிழ்மணி உள்ளே நுழைந்தான்!

தமிழ்த் திரைப்படத் துறைப் பிரதிநிதி ஒருவர் தோன்றினார்.

''ப்ளீஸ் வெயிட் ஏ மினிட்!''

பார்வதிக்குக் கருமத்திலேதான் கண்!—ஐயாவின் பேரில் படத்துறையின் கொள்ளிக் கண்ணுமா பட்டுத் தொலைக்க வேண்டும்?— ஊம்; பணத்திற்கு போகவும் வரவும் வடிகால் வேண்டுமோ?— உள்மனம் சலனம் கண்டது. சலனம் மனத்தோடு சரி: பூவிரல்கள் சுறுசுறுப்பு அடைந்தன.

உள்ளே :

கனகசபை மகராஜாவின் தர்பார் நடந்து கொண்டிருந்தது.

பூவாணத்தின் ஒளிச்சிதறல்களாக, சிரிப்பின் அலைகள் மின் வெட்டின. இந்த ராஜ்யத்தில் அன்பிற்குப் பஞ்சமே இருப்பதில்லைதான், எனவேதான், அங்கே காப்பியின் சுகந்தம் சுகமாகவே மணக்கவும் செய்தது. கண்மணிப் பதிப்பகத்தின் புகழில், உரிமையாளர் கனக சபையின் செல்வாக்கு ஆட்சி செய்ததிலும் வியப்பில்லைதான். அவர் நாலுபேருக்கும் நல்லவர் ; நாலு பேருக்கு நடுவில் உழைத்தவர் ; நாலுபேர் போற்றிட உழைத்தவர். நல்ல குணம் கெட்டு விடக்கூடாதென்று நினைத்தோ என்னவோ. அவர் இன்னமும் நாற்பது வயதைத் தாண்டாமலே இருந்தார்.

காலடி அரவம்.

அரவம் — சத்தம்,

பார்வதிக்கும் பயத்திற்கும் வெகுத் தொலைவு காதளவோடிய கண்களை உயர்த்தினாள் : இதழ்க்கடையில் பூஞ்சிரிப்பின் கடைவிரிப்பு.

''நான் போயிட்டு வர்வேன். பார்வதி ; என்னை மறந்திட மாட்டீங்களே ?''

பார்வதி: மேல் வரிசையில் முன்பற்கள் இரண்டும் முத்தொளி சிந்துகின்றன.

திரைப்படத் துறை நபர் உள்ளே சென்றார்.

யூசுப் காப்பிக்கோப்பையை வைத்துவிட்டு நகர்ந்தான்.

பார்வதி சுவரைப் பார்த்தாள்.

மணி பத்தரை.

கடிகாரம் எப்போது பத்து அடித்தது?

'வணக்கம், தம்பி!'

''ஓ! அக்காவா? வணக்கம். வணக்கம். புஸ்தகம் பண்டல் போடுறதிலே அக்கா வந்ததைக்கூட கவனிக்க முடியல்லீங்க! ஒரே பேஜார் பிடிச்ச ஜோலியாய்ப் போச்சுங்க, அக்கா!''

திரும்புகிறாள் பார்வதி.

''குட் மார்னிங், மிஸ் பார்வதி!''

''குட் மார்னிங், மிஸ்டர் கமல்!''

'1985 வெளியீடுகள்' என்னும் 'அபய அறிவிப்பு'ச் செய்த விலைப்பட்டியல்கள் அம்பாரமாகக்குவிந்து கிடந்த மேசைக்கடியில் தலையைக் கூட்டுக்குள்ளே முடக்கிக் கொண்ட நத்தையைப்போலக் காட்சியளித்தவண்ணம்' பில் போடுவதில் மூழ்கியிருந்த பூபேந்திரகுமார் மட்டுந்தான் வாயைத் திறக்கவில்லை! — அர்த்தம் இல்லாத அவனுடைய 'பார்வையின் நியாயப்படுத்த முடியாத அடாவடியை அங்கீகரிக்க மறுத்த பார்வதி, வாயைத் திறந்து பத்துப்பன்னிரண்டு பேர் முன்னிலையில் பகிரங்கமாகச் சூடு கொடுத்த அந்தச் சோக நிகழ்ச்சியை அதற்குள்ளே மறந்து விடமாட்டான் அவன்!

பார்வதியைப் பார்த்தது மூலமுதலான மகாலட்சுமியைத் தரிசித்ததுபோலவே இருக்கிறதாம்! — காஷியர் சுப்பையா விமர்சனம் செய்தார். இவரும் வலையப்பட்டிதான்.

ரோசி பரிதாபம் மேலிட ஓடி வந்தாள்; மடித்திருந்த பக்கத்தைச் சுட்டினாள்.

'நாட்டு மக்களுக்குப் பிரதமர் ராஜிவ்காந்தியின் அறை கூவல்!' – பார்வதி வாசித்தாள்.

''அதுக்குக் கீழே...!'' என்று திருத்தினாள் சிலுவைக்காரி. பார்வதி வாசித்தாள்:

கொடுத்த கெடுப்பிரகாரம் வரதட்சணைப்பாக்கியைக் கொடுக்காததால் வெகுண்டெழுந்த கணவன், கட்டிய மனைவியையே நிர்வாணமாக்கித் துன்புறுத்திக் கடைசியில் அவளைக் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டான்!'

பார்வதியின் எண்சாண்மேனி ஒரு சாணாகக் குறுகிவிட்டது; வேர்த்துக் கொட்டியது ''இப்படியும் ஒரு படுமோசமான காட்டுமிராண்டிப் புருஷன், பண்பாடு, பண்பாடுன்னு அல்லும் பகலும் வாய்கிழியப் பேசிக்கிணு இருக்கிற இந்த அருமைத் தமிழ்மண்ணிலே, இன்னமும் உயிரோடு இருக்கானே? அடப்பாவி மனுஷா! சே!''— ஆத்திரம் தூள் பறக்கக் கத்தினாள் பார்வதி.

'வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் சட்டப்படி குற்றம் மட்டுமல்ல! சமூகக் களங்கமும்கூட!'

ரேடியோ பாடம் படித்தது!...

மௌனம் ஒரு பாஷை அல்ல; அது ஒரு சோதனை!

தோழிமார்கள் மௌனம் கலைந்தனர்,

அப்பொழுதும், மறந்து விடாமல் புன்னகை செய்தாள் பார்வதி. அதைத்தவிர, வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை ?அவளுக்கு. ஆனாலும் வேறு ஒன்றை மட்டிலும் தனக்குத் தானாகவும், தன்னில் தானாகவும் கேட்டுக் கொள்ளத் தோன்றியது!— 'எனக்கு மகாலட்சுமி அந்தஸ்து கிடைக்கிறது நடைமுறைக்குச் சாத்தியமான உண்மையாக இருந்திருந்தால், அந்த நாளிலேயே எங்கள் வீட்டிலே குபேரச் செல்வம் கொழித்திருக்க மாட்டாதா, என்ன ? நானும் என்றைக்கோ கழுத்திலே மூன்று முடிச்சைப் போட்டுக் கொண்டு, அக்கா வைத்துவிட்டுப் போன மீதிப் பாரத்தையும் கழித்து விட்டு 'அக்கடா' வென்று மாமியார் வீட்டில் காலை எடுத்து வைத்து நுழைத்திருக்க மாட்டேனா, என்ன?,—மேடைப் பிரசங்கத்திற்காக எழுதி வைத்திருந்ததை நெஞ்சிற்குள்ளே மனனம் செய்து கொள்ளுகிற பாவனையில், இப்பொழுதும்கூட அதே வாசகத்தை அச்சுக் குலையாமல் நினைவு கூர்ந்தாள் அவள்.

காலம் எப்படி எப்படியெல்லாம் அவள் குடும்பத்தைச் சோதித்து விட்டது ! அலைக் கழித்து விட்டது !

'பிராப்தம் என்கிற ஒன்று உண்மையிலேயே கைகூடியும் வந்திருந்தால், எண்பத்தி மூன்றிலேயே அவள் மாலையும் கழுத்துமாக ஆகிவிட்டிருப்பாளே ? ஒன்றுவிட்ட பட்டுக்கோட்டை அத்தை வீட்டின் சம்பந்தம் வரதட்சணைத் தகராறில் முறிந்து போகாமல், கல்யாணமும் ஜாம் ஜாமென்று நடந்து முடிந்திருக்குமே!'... பார்வதி தவித்தாள் !

காலம் ஒரு புள்ளிமான்.

கனகசபைச் செட்டியார் அங்கிருந்து கிளம்பிவிட்டாரென்றால், பகல் மணி பன்னிரண்டரை என்று அர்த்தம்

"எல்லாத்தையும் ஏறக்கட்டிக்கிணு எல்லாரும் வயிற்றுப்பாட்டை கவனிங்க, நாம் எல்லாருமே சாண் வயிற்றுக்குதானே இத்தனை பாடுபட வேண்டியிருக்குது! ஊம், ஏந்திரும்மா, பார்வதி!"

கனகசபை மனிதர்!

திரைஉலகம் அட்டகாசமான மினுமினுப்புடன் சுழலத் தொடங்கி விட்டது!

ஆயர்ப்பாடி மாளிகை தரிசனம் தந்தது.

ஆடும் தீபங்கள் ஆடின.

உணவு வேளை:

ஓய்வுக்கூடத்தின் மகளிர் பகுதியில் சாப்பாட்டுக்கடை ஆரம்பமாயிற்று.

வத்சலா: தயிர்ச்சாதம்.

பார்வதிக்கு அளிக்கப்பட்ட படி சாம்பார்ச் சோறு.

நூர்உன்னிசாவுக்குப் பரோட்டா 'பாயா' ரொம்பவும் பிடித்தம்.

ரோசியின் பங்கில் தோசையும் கறிகுருமாவும் சுவை காண்பித்தன.

உணவு வகைகள் பாகம் பிரித்து கொண்டன. நள பாகம் பிரித்துக் காட்டின.

யூசுப் முட்டை ஆம்லெட்டில் பாதியைக் கொண்டு வந்து பார்வதியிடம் கொடுக்க, பார்வதி அதை மூன்று பாகமாக்கித் தோழிமார் இருவரிடமும் கொடுத்தாள்; ஒரு துண்டு அவளுக்கு. பாவம், வத்சலா!— அவள் சுத்த சைவம்.

சாப்பாட்டுப் பிரச்சனை தீர்ந்தது.

'கோனி'— 3 பாண்ட் ரேடியோ—காஸெட் - ரெக்கார்டர்' ஜமாய்த்துக் கொண்டே இருந்தது.

சாலமன் தந்த செய்திப் பத்திரிகை ரோசியின் பார்வையில் ஊர்ந்தது.

நூர் உன்னிசாவுக்கு மௌனமே ஒரு பொழுது போக்குத்தான்.

வச்சலாவின் மூச்சுக்காற்று ரோசியின் பக்கம் இழையத் தொடங்கியது.

பார்வதியின் கைகளிலே 'அகல் விளக்கு' சுடர்தெறிக்கிறது.

வத்சலா கணவுகண்டு விழித்தவள் மாதிரிபார்வதியை நெருங்கி, "பாரு ! வர்ர ஆவணியிலாவது எங்களுக்குக் கல்யாண விருந்து வச்சிடுவியா ? இனிமேலும் எங்களாலே ஒரு நாள் கூட பொறுத்திருக்க முடியாதாக்கும் !" என்று கண்டித்து எச்சரித்தாள்.

பார்வதி ஏறிட்டு நோக்கிப் புன்னகை செய்தாள் 'எல்லாம் பகவான் கையிலே தான் இருக்கு !" என்றாள்.

"விருந்துக்குக்கூட பகவானையே அரேஞ் செய்துட்டியாக்கும் ?"

அதற்குள்,

"பார்வதி ! அம்மா பார்வதி ! சத்தியம் பண்ணிடாதே ! .. ஆணையும் வச்சிடாதே !"

கனகசபை நீர் நிரம்பின கண்களோடு நின்றார்,

அன்பும் பாசமும் இரண்டறக் கலந்தால், இப்படித் தான் தரிசனம் தருமோ ?

பார்வதி, வெலவெலத்து நின்று விட்டாள் ; நெஞ்சம் அழவே விழிகளும் அழுதன. மனம் அழும்போது, மனச் சாட்சி மட்டும் சிரிந்துக் கொண்டிருக்குமா, என்ன ? ஆனால் அவள் சிரிக்க முயன்றாள் இல்லையென்றால் வள்ளுவம் கோபிக்காதா ? ஆனாலும் அவளுக்குச் சிரிப்பு வர வில்லை !

''பார்வதி, உன் இஷ்டப்படி நீ தேர்ந்தெடுக்கிற மாப் பிள்ளையைக் கொண்டு உனக்குத் திருப்பூட்டி வைக்க வேண்டியது என் பொறுப்பாக்கும் ! .. என்னை நம்மம்மா பார்வதி ;''

பாசமான அன்பின் திருப்பாதங்களில் சரண் அடைந் தாள் பார்வதி.

சுவர்க்கடிகாரம் ஒன்று.

பிற்பகல்! மணி ஒன்று அடித்தது

சாயந்தரத்திலும் பார்வதிக்குக் காப்பிதான் பிடிக்கும்

சாலமன் கொடுத்தான்.

புதிதாகப் பிறந்த தெம்போடு காப்பியைச் சுவைத்துக் குடித்தாள் பார்வதி.

அப்போது ;

நவீனமான பெண் பிள்ளையின் பெயரில் எழுதும் நவ ரசக் காதல் கதாசிரியரான ஆண்பிள்ளை ஒருவரும், ஆணின் பெயரால் எழுதிக் குவிக்கும் பெண் எழுத்தாளி ஒருத்தியும் மேலை நாட்டு இலக்கியத்தில் இனக் கவர்ச்சிப் புரட்சி செய்த ஆசிரியர்கள் சிலரைப் பங்கு வைத்துத் துணைக்கு அழைத்துக்கொண்டு தனித்தனியாக உள்ளே பிரவேசித் தார்கள்.

பார்வதி முகம் சுளித்தாள்.

மறு ஐந்தாவது நிமிடத்தில். அவர்கள் இரண்டு பேரும் பூமணத்தோடு திரும்பி விட்டார்கள்.

பார்வதி விநயமாகவே சிரித்துக்கொண்டாள். படைப் பிலக்கியத்தை மட்டுமல்லாமல், இளைய தலைமுறையை யும் பாழ்படுத்திக் கொண்டிருந்த இம்மாதிரியான ஒரு சிலரது திசைகளிலேகூட தலைவைத்துப் படுக்காதவர் முதலாளி என்பதை அவள் மட்டுமே அறிவாள்.

கனகசபை அழைத்தார்.

நுழைந்தாள் பார்வதி.

''யாரோ செந்தில்நாதனாம் ; உங்களோட பேசணு மாம் !''

''நான் வீட்டுக்குப் போயிட்டதாகச் சொல்லிடுங்க ஸார் !''

திரும்பினாள் அவள்.

மறுபடி கூப்பிட்டார் உரிமையாளர் ; ''இப்ப தாரான்னு ஒரு பொண்ணு பேச ஆசைப்படுறாங்களாம்!'' என்று தெரிவித்தார்.

''நான் தான் முன்னாடியே வீட்டுக்குப் புறப்பட்டாச் சுங்களே, ஐயா ?''

''ஆமா, ஆமா !'

சிரிப்பில் சிலிர்த்தவாறு, பார்வதி மீண்டாள் ; மிச்சம் இருந்த அரை மணி நேரமும் நல்லதனமாகக் கழிந்திட வேண்டுமென்று முப்பாத்தம்மனைப் பிரார்த்தனை செய்தாள் !

நமக்கென்ன ? இவங்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் ? ஊம் என்னைப்பத்தி நினைக்கவும் நினைச்சுப் பார்க்கவுமே பொழுது காணல்லேயே... கடவுளே !'' பணி நேரத்தில் சொந்த முறையில் அவள் பத்து நிமிஷங்களை எடுத்துக்கொண்டது வெகு அபூர்வம். விரைந்தாள்!

உள்ளே —

பதிப்பகத்திற்கு உரித்தான பரபரப்பு குறைகுடமாகத் தளும்பிக் கொண்டிருந்தது.

காலடியில் சிக்கிய அச்சுப்படி ஒன்றை எடுத்து வலம்புரியின் மேஜையில் போட்டுவிட்டு நடந்த பார்வதியின் பூவிரல்கள் தட்டெழுத்துக்களில் விளையாட தொடங்கின. மனத்தின் மனமோ, வீட்டைச் சுற்றிச் சுற்றி விளையாட்டுக் காட்டத் தொடங்கிவிட்டது !— 'அப்பாவின் துணையுடன் அம்மா இந்நேரம் மத்தியான்னச் சாப்பாடு செய்துகொண்டிருப்பாள் ; தம்பிப் பயல் பாடங்களில் சிறைப்பட்டிருப்பான், கமலி ஸ்ரீரங்கத்தில் தனிமைச் சிறைவாசத்தை அனுபவித்துக்கொண்டிருப்பாள் ; அத்தான். ஃபைல்' குவியல்களில் சரணாகதி அடைத்திருப்பார் ! அத்தான் இல்லாத தனிமையைப் போக்கிட கமலியின் வயிற்றில் ஒரு பூச்சி பொட்டு இனியாகிலும் உண்டானால் தேவலாம் !— நான் கமலியை நினைக்கிற இந்நேரத்தில், கமலியும் என்னை நினைப்பாளா ? நினைத்துப் பார்ப்பாளா ?— நினைவுகள் சுழித்தன ; 'பொறை' ஏறியது. அரை வினாடி திக்கு முக்காடிப் போனாள் ; நாடி வந்த குளிர்நீரில் ஒரு வாய் பருகினாள்; இப்பொழுது கமலி கட்டாயம் என்னைப் பற்றித்தான் எண்ணிக்கொண்டிருக்க வேண்டும் !— அங்கீகாரம் பெற்ற பாசத்தில் பிரகடனம் செய்யப்பட்ட நல்லமைதியில் அவளுடைய கண்கள் தளும்பின.

பார்வதியின் கன்னி மனமும் ஆடும் பம்பரமும் ஒன்று ; காஷியர் சொல்ற மாதிரி நான் மகாலட்சுமியாக

இருந்திருந்தால் எங்க ஓட்டை வீட்டிலேயும் குபேரச் சம்பத்து கொழிச்சிருக்குமே? பிராப்தம்னு சொல்லப் படுற அதிர்ஷ்டம் கூடி வந்திருந்தால், அப்பா — அம்மா மனம் குளிர்கிற மாதிரி எண்பத்தி மூணிலேயே நான் மாலையும் கழுத்துமாக ஆகியிருக்கமாட்டேனா? ஒன்று விட்ட அறந்தாங்கி அத்தை வீட்டின் சம்பந்தம் வரதட் சனைத் தகராறில் முறிஞ்சி போயிடாமல், கல்யாணமும் ஜாம் ஜாம்னு நடந்திருக்குமே?—கமலிக்குக் கடிதம்வரைந் தாள் மாலையிலேயே வீட்டுக்குப் போகும் வழியில் கட்டில் சேர்த்து விடலாம்! - அயர்ச்சியில் கொட்டாவி பறிந்தது. தினம் தினம் எவ்வளவு தூரம் தான் நடப்பதாம்?

யூசுப் காப்பி கொடுத்தான்.

எடுபிடிப் பையன் சாலமன் பதட்டமாக உள்ளே பாய்ந்தான்;'' தெருவிலே ஒரு விபத்து நடந்திருச்சு; தெருத் திருப்பத்திலே மடங்கின கருங்கல் லாரி ஒண்ணு எதிர்த்து வந்த புது ஸ்கூட்டர் மேலே பேய்த்தனமாய் மோதி ஸ்கூட்டர்லே வந்தவங்க ரெண்டு பேரையும் அலக்காத் தூக்கி யெறிஞ்சிடுச்சு; நல்லகாலம், அவங்க உயிர் தப்பிச் சிட்டாங்க!'' என்று விவரம் தெரியப்படுத்தினான். அவன்

மறுகணம்;

கனகசபை, கதர்ச்சட்டை தும்பைப்பூவெனப் பளிச்சிட மனிதத் தன்மையின் பரிவோடு விரைந்து வெளியேறினார்.

பார்வதிக்கும் உள்ளே இருப்பிடம் கொள்ளவில்லை.

நடுத்தெரு,

**பேயைக் காணோம்!**

நெற்றிப் பொட்டிலே, பொட்டுக்குப் பதிலாகப் பீறிட்ட சிகப்பு ரத்தத்தைச் சோற்றுகையால் அழுத்திக் கொண்டே, தலை சுழலத் தடுமாற்றத்தோடு நகர்ந்தான் அந்த வாலிபன், ஜரிகை வேட்டியைத் தட்டி விட்டபடி நடந்தான். முறுக்கு மீசையில் மண் ஒட்டாமல் இருந்திருக் கலாம் !

மல்லாந்து மண்ணில் கிடந்த அந்தப்பெண் அப்போது தான் தன்னுணர்வு பெற்றவளைப் போன்று, தரையில் கைகளை ஊன்றிக்கொண்டு மெள்ள மெள்ள எழுந்திருக்க முயற்சி செய்தாள்; பார்வையின் உணர்வுகளில் பதற்றம் மூளவே, அவசரம் அவசரமாக மாரகச்சேலையைச் சரி செய்து கொண்டாள். சங்கிலி இப்படி மெலிந்திருக்க வேண்டாம்; ஆனாலும் அதற்குச் சமர்த்து அதிகம். ஆகவேஅது அவள் மார்பகத்தில் மையம் கணித்து மயங்கிய படியே தவழ்ந்து கிடக்கிறது.

''தாரா, சமர்த்தா மெதுவா எழுந்திருச்சிடு; ஊம்; அவ்வளவுதான் !'' சொற்கள் கவலையால் தேய்ந்தன ஆனால், நெற்றி மேட்டிலே ரத்தம் மாத்திரம் தேயாமல் வழிந்து கொண்டிருந்தது. சட்டத்தை எதிர்பார்க்காமல் தலைக்குக் கவசம் அணிந்திருந்தால் இப்படிப்பட்ட எதிர் பாராத விபத்துக் காலத்தில் ரத்தம் சேதமடையாமல் பாதுகாக்கப்பட்டிருக்கும் !

டியர் குட்டிச் சாத்தானின் வெற்றிகரமான சிரிப்பு பகல் வெளிச்சத்தில் இன்னமும் மாறவில்லை

ஸ்கூட்டரைச் சரிசெய்து நிறுத்தினான் வாலிபன்.

யதேச்சையாகத் தன்னைப்பார்த்த இளைஞன், மறு வினாடியில் முகத்தைத் திசைதிருப்பிக் கொண்டதைக் கவ னித்ததும் பார்வதிக்கு நெஞ்சில் நெருஞ்சிமுள் குத்திவிட்ட மாதிரி உணர்வுகள் வலித்தன. 'ஓ... செந்தில்நாதன் ?

அவளுக்கு நினைவு வந்தது!—விடியல் பொழுதிலே வீட்டில் முகப்புத் தோட்டத்தில் சிந்தனை வசப்பட்டவளாகச் சுய தரிசன நிலையில் மெய்மறந்து நின்றிருந்த நேரங்களில் உஸ்மான் சாலையில் நேர்வழியிலேயே போக வேண்டிய வன், ரோஜா நிறப் புதிய காரைத் திருப்பி மகாலட்சுமித் தெருவில் மடக்கி நிறுத்தியபின், தன்னையே பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, பிறகு தோட்டத்து ரோஜாப் பூக்களைப் பறித்துச் சென்ற சந்தர்ப்பங்களை அவளால் அவ்வளவு லகுவில் மறந்துவிட முடியாதுதான்!— "நீங்க பார்வதி!... நான் செந்தில்!" ஒருநாள் உள்ளார்ந்த அன்போடு மனம் நெகிழப் பேசிய சொற்களையும் அவள் இன்னமும் மறந்துவிடவில்லைதான்! அதுசரி!— இந்தப் பெண் யார்? வேர்வை பெருகுகிறது. தெரிந்த முகமா கத் தெரிகிறதே?...

'ஹிரோ மெஜஸ்டிக் 50' சுழன்றது.

செந்தில்நாதன், அந்தச் சின்ன விபத்தின் பெரிய கதாநாயகனாகச் சுழன்றான்.

பெரிய இடத்துப் பிள்ளையாண்டானுக்குக் காருக்கும் ஸ்கூட்டருக்கும் தானா பஞ்சம் ஏற்படப் போகிறது!

"தாரா!"...

தெய்வாதீனமாக மயிரிழையில் தப்பிவிட்ட அவள் இப்போது சகஜமாகவே காணப்பட்டாள். பலத்த அடி எதுவும் பட்டிருக்க நியாயமில்லை. இடுப்பை மட்டும் தடவிக் கொண்டாள். வெட்கத்தோடு அங்கும் இங்குமாக விளித்தவள், மறுநொடியில் தலையைத் தாழ்த்தினாள்: குனிந்தாள்.

செட்டியார் தன் பதிப்பகத்திற்குத் திரும்பினார்.

இனிமேல், பார்வதிக்கும் அங்கே அப்பொழுது வேலை கிடையாது!—திரும்ப எத்தனம் செய்தாள்; 'சுரீர்' என்ற

பதட்டம் நெஞ்சடியில் கிளம்பியது!— தாரா!... யார் இந்தத் தாரா? கல்லூரித் தோழி தாராவேதானா?— கபாலி கோவில் ஏழைக் குருக்களின் சீமந்தப் புத்திரியான பேரழகி தாராவேதானா?'— நின்றாள்; பார்த்தாள்; ஊடுருவிப் பார்த்தாள்; பார்வையிட்டாள்; நகர்ந்தாள்; நடந்தாள் "ஹாய், தாரா!... நீ தானா? அதுக்குள்ளாற என்னை மறந்திட்டியா?'' என்று வினவினாள்

'விழி, விழி, யென்று விழிக்கிறாள். தாரா. பேய் அறைந்து விட்டதா அவளை? செக்கச் சிவந்த முகத்தில் அழகோடு அசடும் வேர்வையும்! சேர்ந்து வழிகின்றன; தடுமாறினாள் ஆமாம்? நேக்கு நினைப்பு வந்துடுத்து; நீ பார்வதி!'' என்றாள் அவள்.

பார்வதி கண்களை மூடிக் கண்களைத் திறப்பதற்குள் —

செந்திலும் தாராவும் மறைந்து விட்டார்கள்!

எங்கே மறைந்தார்கள்?

எப்படிப் பறந்தார்கள்?

பார்வதி ஆத்திரம் அடைந்தாள்; 'இவங்க எங்கே போனால் நமக்கென்ன?... இல்லே; இவங்க எக்கேடு கெட்டால்தான் எனக்கென்ன?— கடமை அழைத்தது!

வழிந்த வியர்வையை வெகு பதனமாக எச்சரிக்கையுடன் புடவை முந்தாணையைக் கொய்து துடைத்துக் கொண்டாள் பார்வதி.

உள்ளே முதலாளி சத்தமிட்டார். தேமதுரத் தமிழின் படைப்பிலக்கியத்தை மட்டுமன்றி, இளைய தமிழர் தலைமுறையையும் சுயநல நோக்கில் பாழ்படுத்தி வரும் நிலையற்ற 'ஸ்டார்' எழுத்து மன்னர்கள் மற்றும் மன்னிகள் சிலரின் திசைகளில் கூட தலைவைத்துப் படுக்க மனம் ஒப்பாதவர்.

பார்வதிக்கு நன்றாகவே தெரிந்த—தெரிந்துகொண்ட சேதிதான்.

பகல் நட்சத்திரங்களாக மூவர் கைப்பிரதிகளைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி வெளியே வந்தார்கள்.

பார்வதிக்கு நல்ல மூச்சு வந்தது. ஆறுதலோடு நேத்திரங்களைத் திருப்பிய நேரத்தில் கவிஞர் புன்னகையும் முழுநிலவுமாகத் தென்படவே, வேதனையின் அதிர்ச்சியை இப்போதும் சந்தித்தாள்.

கண்ணுக்குத் தெரிந்த புள்ளிமானாகக் காலம் ஓடியது. கண்களுக்குத் தெரியாமலே ஓடியது.

வத்சலா, ''பாரு! எங்க சாதியிலே இருந்துயிட்டு வர்ற வரதட்சணைக் கொடுமைங்க உங்க இனத்திலேயும் கூட இருக்குமா?'' என்று விசாரித்தாள்.

பார்வதியின் எழிலார்ந்த வதனம் சிறுத்தது; விழிகள் சிவந்தன.'' நல்லாக் கேட்டே, போ! வரதட்சணைப் பிரச்சனைக்குப் பலியாகாத சாதி சமுதாயம் நம்ம நாட்டிலே எங்கே இருக்குதாம்?'' என்று பதிலுக்குக் கேட்டாள். ''வத்சலா! முந்தி ஒரு தரம் சொன்னதையே இப்பவும் உன் கையிலே நினைப்பூட்டுகிறேன். வரதட்சணைக்காக இல்லாமல் எனக்காகவும் என்னோட பரிசுத்தமான அன்புக்காகவும் மாத்திரமே என்னைத் திரிகரண சுத்தியோட அங்கீகரிச்சு ஊர் உலகத்தின் சந்நிதானத்திலே என் கழுத்திலே மனசு பூர்வமாய் மூணு முடிச்சுப் போட முன் வர்ற உண்மையான மனிதாபிமானம் கொண்ட ஒரு நல்ல பிள்ளைக்குத்தான் நான் என்னோட பவித்திரமான உயிரையும் புனிதமான உடலையும் அர்ப்பணம் செய்வேன்! என்னுடைய இந்த வைராக்கியத்திலே, எனக்கு நானே தான் விதி! இல்லாட்டி விதியோட எழுத்தைக் கிழிச்சு வீசிட்டு. எனக்கு நானே முற்றுப்புள்ளி வச்சுக்கிடவும் தயங்கமாட்டேன்! இது...'' அவள் பேச்சை முடிக்கவில்லை.

# 5

சங்கத் தமிழுக்கும்கூட, பொது விளம்பரம் பொது வாகவும் தேவைப்படும் போலும்!

ரேடியோவுக்கு நிலவு தூங்கும் நேரம் அது.

வெளிவாசலில் அப்பொழுது நிலவு விழித்துக் கொண்டிருந்ததுடன் சரி: பாட்டு எதுவும் பாடக் காணோம்.

கண் விழித்துக் கொண்டிருக்கக் கடமைப்பட்ட காரணத்தால், பார்வதி தூக்கத்தைக் கெடுத்துவிட்டு, ஜாக்கிரதையாகவே விழித்துக் கொண்டிருக்கிறாள்.

கண்கண்ட தெய்வமாம் காஞ்சி மாமுனியின் அமுத வாக்குகள் எதிரொலிக்கின்றன - மீண்டும்.

ஒரு கன்னிப் பெண் தெய்வத்தை சுயநலமிகளால் சமூகத்திலே உண்டு பண்ணின வரதட்சணை என்னும் பாவத்திற்கு பலி வாங்கும் வழக்கம் மிக மிகப்பாவம்! இந்தப் பாவத்துக்குச் சமூகமும் நாடும்தான் நல்வழி கண்டுஅபலைக் கன்னிகட்கு விடிமோட்சம் ஏற்படுத்த வேண்டும்!

கடைக்குட்டிப் பயல் ராமையாவுக்கு இன்றைக்கு திருவிழா பட்டபாடுதான்!— டி.வி.யில் 'ஒலியும் ஒளியும்' நடந்து கொண்டிருக்கும்!— சிவாஜி, ரஜினி, எம்.ஜி.ஆர். மோகன், சத்யராஜ், ஸ்ரீதேவி, ஊர்வசி, இளவரசி, சரிதா, பாக்கியராஜ் முதலானோர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பி. சுசிலா, ஜேசுதாஸ், டி.எம்.எஸ், மலேசியா வாசுதேவன் மற்றும் சீர்காழி சார்பில் பிட்டு வாய்களை அசைத்து

அசை போட்டு கொண்டிருப்பார்கள்! காதல் டுயட்! கும்மாளி போடும்; 'டிஸ்கோ நடனம்' அமர்க்களப்படலாம்! ... நாலைந்து பங்களா தள்ளி இருந்த சரித்திர நாவலாசிரியரின் வீட்டிலும் 'மஸ்டாங்' இருந்தது. அங்கே தோழன் கார்த்திக் சகிதம் கடல்புறாவாகப் பறந்தோடி விட்டான் :

இங்கே, கடைசிப் பட்சமாக ஒரு 'விஜயா'வையாகிலும் வாங்கிப்போட்டால் தேவலாம், தவணை முறையிலே வாங்குவதானாலும்கூட பிராணன் போய்விடும் போலிருக்கிறது! — திருவிதாங்கூர் ஸ்டேட் வங்கியில் சேமிப்புக் கணக்கு கேவலம் ரூபாய் நாலாயிரத்தை எட்டிப் பிடிக்கவே என்னைப் பார் உன்னைப்பார்' என்று போராட்டம் நடத்த வேண்டியதாக ஆகிவிட்டது போதும் போதாதற்கு கல்யாணப் பிரசனை வேறு தலைக்கு மேலே திரிசங்கு சொர்க்கத்தில் பூச்சாண்டி காட்டிக் கொண்டேயிருக்கிறது அம்மா - அப்பா ஆசைப் படுகிற மாதிரி, இந்த ஒரு திருமண வைபோகமும் நாலு பேர் மதிக்கிறவகையிலும் மெச்சுகிற போக்கிலும் நடந்து முடிந்து விட்டால், அப்புறம் இந்த வீட்டிலே எந்தச் சிக்கலுக்குமே இடம் இருக்காது. இளவரசு பட்டம் ராமையாவுக்கு என்ன கவலை? — அவனுக்கென்று இளவரசி ஒருத்தி இந்நேரம் தமிழ்மண்ணிலே ஏதோ ஒரு முடுக்கிலே அவதரித்திருப்பாள்!

பதிப்பகம் முடிந்து புறப்பட்டால், எப்படியும் மாலையில் ஐந்தரை மணிக்கெல்லாம் பார்வதி வீடு திரும்பி விடுவாள், இடைவழியில் தடங்கல் ஏதாவது ஏற்பட்டால் வருந்தியபடியே, சற்று தாமதமாகவும் வந்து சேர்வது உண்டு, அன்றைக்குத் தாராவைச் சந்தித்து அவளிடமிருந்து கடைசியில் தப்பிப்பதற்குள் எத்தனை பாடுபட வேண்டியதாகிவிட்டது!— பாவம் தாரா! அவளைச்

சந்தித்து வள்ளிசாகப் பன்னிரெண்டு நாட்கள் ஓடி விட்டனவே? சிநேகிதி தாரா என்ன ஆனாள்? தோழர் செந்தில் என்ன ஆனார்? அவர்களது காதல் கதை என்ன ஆயிற்று? ஒரு கதையும் தெரியவில்லை!

தெரு நாய்க்கு வேலை இல்லை,

பிச்சைக்காரப் பெரியவருக்கு இந்நேரம் நிழல் கிடைத்திருக்கும்!

பார்வதியின் தர்மம் அவள் தலையைக் காக்க வேண்டியதுதான் பாக்கி

அப்பா ஆத்மநாதனை இன்னும் காணவில்லை. மயிலாப்பூர்வரை போயிருக்கிறார், சொல்லிவிட்டுதான் புறப்பட்டார். வரன் விஷயம்! வரதட்சணை வாங்காத அபூர்வமான மாப்பிள்ளையாம்! என்னவோ பெயர் சொன்னாரே அப்பா?— ஓ நாராயணன்! நடுத்தரவர்க்கத்திற்கு லாயக்கான பேர்தான்! எதையோ நினைத்தவள் ஏனோ தன்னுள்ளே சிரித்துக் கொண்டாள் வரந்தாவுக்கு வந்து தாழ்பாளைச் சரிபார்த்து விட்டுக் கூடத்துக்குத் திரும்பியவள் திரும்பவும் தன்னுடைய அறைக்குச் சென்று ட்ரங்கு பெட்டியைத் திறந்து, அந்த காதல் கடிதங்களின் கனமான உறையைக் கனமான நெஞ்சத்தோடு சுமந்து வந்து குறிச்சியில் அமர்ந்தாள்.

கொசுப்பண்ணை மின் காற்றின் சுகத்தை அனுபவித்ததோடு திருப்தி அடையாமல் அம்மா பேரிலும் படையெடுத்துத் தொலைக்கவே, பார்வதி ஆத்திரம் அடைந்தாள். பேப்பரை எடுத்துக் கொசுக்களை விரட்டிவிட்டாள்.

அம்மா புரண்டு படுக்கிறாள்.

டாக்டர் சுசிலா அம்மாள் சிபாரிசு செய்த ‘இப்ரால் டானிக் நன்றாகவே வேலை செய்கிறது. இல்லையென்றால் அம்மா எங்கே அசந்து தூங்கப்போறாள்? பூப்பாரம் சுமந்த புண்ணியவதி, குடும்ப பாரத்தைச் சுமக்க மாட்டாமல் எத்தனை தூரம் அவதிப்படுகின்றாள்?—பார்வதி தன்னுடைய கலியாணத்தில் போய் நின்றாள், தலையைச் சுற்றியது; எழுந்து விட்டாள். இப்போது அவள் பார்வையில் பிளாஸ்டிக் உறை தட்டுப்பட்டது. பிரகடனம் செய்யப்பட்ட காதலின் கடிதங்கள் அல்லவா அவை? காதலாம் காதல்; கள்ளமார்க்கெட் இல்லாமல் காதல் கூட விலை போகாதே! என்ன விலையாம் கிலோ?

தம்பிப்பயல் வந்து விட்டான்.

அடடே, அப்பாவும் திரும்பி விட்டார்.

சரிபாதி மன உளைச்சல் மிச்சம்.

பார்வதிக்கு இப்போதுதான் பசி தெரிந்தது; பசி எடுத்தது.

பாத்திரங்கள் சத்தம் போட்டன.

ராமையா மட்டும் சத்தம் போடவில்லை: சாப்பிட்டான்.

ராமையாவிற்கான பாயை உதறி போட்டாள் அவள். அதிலேதான் எத்தனை எத்தனை பொத்தல்கள்!—ஆயிரம் கண் உடைய ஆயிமகமாயிக்குத்தான் வெளிச்சம்!—முதல் தேதி சம்பளம் வாங்கின கையோடு, புதுப்பாய் ஒன்று வாங்கிட வேண்டும். கோடை முடிவதற்குள்ளாக வாங்கி விட்டால் சரி. சின்னஞ்சிறு தலையணையையும் எடுத்துப் போட்டாள் தம்பிக்கு ஒரு பழக்கம் உண்டு, ராத்திரியில் சாப்பிட்டுக் கையை கழுவினானோ இல்லையோ, தூக்கம் ஓடோடி வந்து விடும்!

அப்பா முகம் கை கால் கழுவிக் கொண்டு, பூஜைக் கூடத்துக்குப் போய்த் திரும்பி அம்மாவின் தலை மாட்டில் வந்து குந்தினார். கொண்டவளைக் கண்கள் கொண்ட மட்டும் பாதாதி கேசம்வரை ஒரு முறை பார்வையிடலானார்; ஆற்றாமையால் பெருமூச்சுச் சீறுகிறது. சிவகாமியின் உள்ளம் தொட்டு புண்ணியவான் அவளது உடலைத் தொட்டு எழுப்பினார்.

வாரிச்சுருட்டுக் கொண்டு எழுந்து குந்தினாள் சிவகாமி. ''உங்களைத்தானே நம்ம பார்வதிக் குட்டிக்கு நாம் இனியாச்சும் கல்யாணம் பண்ணிவச்சிட வேண்டாமுங்களா; போன காரியம் என்ன ஆச்சு? . இந்த சம்பந்தம் சாடிக்கையாச்சும் திகைஞ்சிடுமுங்களா?'' என்று வினவினாள். அவள் தூங்கின லட்சணம் இவ்வளவுதானா ?

ஜனநாயகக் குடியரசின் கட்டமைப்பில், விடுமுறைக் குரிய வசதிகள் மற்றும் வாய்ப்புக்களையும்கூட, மேடுகளாகவும் பள்ளங்களாகவும் ஆக்குகின்ற, அல்லது, ஆக்கிக் கொள்ளுகின்ற பெருமையும் இந்த மனிதர்களுக்கே உரித்தாகிறது; மேலும் இந்நிலைக்கு அவரவர்களின் நிலையும் சூழ் நிலையும்தான் காரணம் ஆகவேண்டுமோ?

பார்வதியைப் பொறுத்தவரை, ஞாயிற்றுக்கிழமை என்றால், விடுமுறையென்று அர்த்தம் இருப்பதில்லை; எனவே, மற்ற விடுமுறை நாட்களில் அவளுக்கு விடுமுறை விதிக்கான ஓய்வு சகஜமாகக் கிட்டுவது கிடையாதென்பதும் பொருளாகிறது. காரணமும் காரியங்களும் தெரிந்தவைதான். அம்மாவுக்கு அடிக்கடி உடம்புக்கு வந்துவிடும் அம்மாவுக்கு ஒன்று என்றால் அதன் பந்தமும் பாதிப்பும் இயல்பாகவே அப்பாவையும்

விட்டக்குறை — தொட்டக் குறையாகப் பற்றி தொற்றிக்கொண்டுவிடுவதும் இயல்பாகிவிடும்!

சரி :

அழைப்பது அம்மாவேதான்!

அவள் நிதானமாக எழுந்தாள்.

அவரவர் இஷ்டத்திலும் போக்கிலும் தன்னை காதலித்ததோடு நிற்காமல், காதல்பாயிரம் வேறு பாட வும், பாடிக்காட்டவும் முன் வந்த அத்தனை காதலர் களின் காதல் கடிதங்களை அத்தனையையும் வழக்கம் போலவே ஒரு குவியலாக எடுத்து உரைக்குள்ளே திணித்து அந்த உறையைப் பற்றற்ற நிலையில் பற்றியவளாகக் கூடத்துக்கு நடந்தாள்; பெட்டியில் அடைத்தாள். திரும் பினாள்; ஒரு வாய் தண்ணீர் குடித்தாள்; மீதித் தண்ணீரில் கண்களையும் கைகளையும் கழுவினாள், அம்மாவிடம் ஓடினாள். அவளோடு புதிய உற்சாகமும் ஓடி வந்தது. காதல் என்கிற உணர்வையும் கைகழுவி விட்டதால் விளைந்த புது அனுபவம் அவளது மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும்பாலும் இந்த இல்லத் தின் மதியானச் சாப்பாட்டுக்கு முட்டைக் குருமாதான் ஸ்பெஷல்!

பார்வதிக்கும் ருசி உண்டு; பசியும் உண்டு;— அது சரி; ஞாயிற்றுக்கிழமைகளிலேனும் இந்தப் பசிக்கு விடு முறை விட வேண்டாமோ? அவளுக்குச் சிரிக்கவும் தெரிந்திருந்தது முட்டை கோசு பொறியலுக்குச் சன்னம் சன்னமாக நறுக்கினாள்: தேங்காய் மூடியைத் துருவி முறத்தில் தனியாக வைத்தாள். பாகற்காய்களைத் துண்டு துண்டாக அரிந்து சாம்பாருக்காக ஒதுக்கினாள். அம்மா — அப்பா சாப்பாட்டுக்காகவே காத்திருக் கிறார்கள்!

ஆத்மநாதன் ஆத்மார்த்தமான நம்பிக்கையோடு சிரித்தார் "வேளை கூடி வந்தால், எல்லாம் கைகூடி விடும். நிம்மதியாகச் சாப்பிடலாம்; வா சிவகாமி!" என்று ஆதுரத்தோடு ஆதரவாகக் கொஞ்சினார்; கெஞ்சினார்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தட்டுக்களை எடுத்து வைத்தாள் பார்வதி, அவளுடைய தட்டும் கையோடு வந்தது; அதை இடம் மாற்றி அலமாரியில் மேலே வைத்தாள். கமலியின் எவர்சில்வர் பிளேட்டை எடுத்து வைத்தாள். இப்போதெல்லாம் அவள் அதில்தான் சாப்பிடுகிறாள்.

பச்சைக் கொத்தமல்லி பசுமைப் புரட்சி செய்கிற போக்கில், அபாரமாக மணம் பரப்புகிறது.

தாய் தந்தையர் சாப்பிடும் அழகைப் பார்த்துப் பரவசப்பட்டவளாகச் சாப்பிட்டாள் அவள். கொட்டாவி விட்டாள்.

"ஏங்க, நாளைக்குத்தானே ஞாயிற்றுக்கிழமை?" என்று சந்தேகம் கேட்டாள் அம்மா.

"இல்லே; நாளைக் கழிச்சு!" என்றார் அப்பா, அப்பட்டமான அலைக்கழிப்புக் கேலி!

உடனே, "அம்மாடி. பார்வதி! எனக்குத் தெரியும். நாளைக்குத்தான் ஞாயிறு, லீவு! நாளைக்கு உனக்கு வீட்டிலேயும் கூட லீவு!" தான் வாரத்திலே ஆறுநாள் முடிச்சுடுந்தான் புத்தகக் கம்பெனியிலே அசராமல் வேலை பார்க்கிறே. வீட்டிலே ஒரு நாளாச்சும் உனக்கு முழுசா ஓய்வு வேணாமா?" என்று நீதி ஓதினாள் அம்மாக்காரி.

பேசிக்கொண்டிருக்கும்போதே, அம்மாவுக்குக் குரல் தழதழத்தது.

பார்வதி திடுக்கிட்டாள்; திகைத்தாள். ஏக்கமும் தவிப்பும் சூழ்ந்திட, அன்னையை நோக்கினாள். அம்மாவின் உடம்புக்கு ஒன்றும் வந்து விடவில்லை!—நெஞ்சிலே கவலைகள் கட்டு மீறுகையில், உணர்ச்சிகளும் கட்டுமீறிப் போய் விடுவது அம்மாவைப் பொறுத்தமட்டில் சர்வ சாதாரணமான நடவடிக்கைதான்!— "நான் இன்னம் எத்தனை நாளைக்கு உங்களுக்காகக் கஷ்டப்படப் போகிறேன்? முதலிலே வயிற்றுப் பாட்டைப் பார்ப்போம்!—வா அம்மா சாப்பிடலாம்; அப்பா வந்து குந்துங்க," என்று அழைத்தாள்.

சோற்றைப் பிசைந்து ஒருவாய் சாப்பிட்டு ஒரு வாய்த் தண்ணீரையும் குடித்தவள், "பாருகுட்டி! நீ பேசுறதைப் பார்த்தால், ரொம்ப ரொம்பச் சீக்கிரத்திலேயே நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு எங்களை விட்டுப் பிரிஞ்சிடுவே போலத் தோணுதே?... என்னமோ, கருமாரி கடாட்சத்திலே உனக்கு ஒரு நல்ல காரியம் சீக்கிரம் நடந்து முடிஞ்சா, எங்களுக்கு அதுவே போதும்டி, அம்மா" என்றாள்.

பார்வதியின் மனம் விம்மிப் புடைத்தது. "உனக்குத்தான் பேசினாலே தொண்டையை அடைக்குமே? பேசாமல் சாப்பிடு அம்மா." என்று கேட்டுக் கொண்டாள்.

அப்பா தன்னுடைய மனக் குமைச்சலை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை!—

இப்போது பார்வதி ஒரு முடிவுக்கு வந்தாள்! 'அந்தச் செந்தில்நாதனும் இந்தச் செந்தில் நாதனும் ஒரே நபராகவே இருக்க வேண்டும். நெஞ்சிலே பிறந்த முதற் காதலை வெளிப்படுத்தி மகிழ்ந்திட அவர் தனது பிறந்த மண்ணை ஏன் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது?'

யௌவனப் பொலிவுடன் அழகாக எம்பித் தணித்த இளம் மார்பகத்தை மூர்த்தண்யமாக அழுத்தித் தேய்த்த நேரத்தில், செந்திலைப் பற்றி மாதங்கி பேசிய பேச்சும் அவளது நெஞ்சகத்தில் எதிரொலிக்க ஆரம்பிக்கிறது.

இனிமேல் செந்திலின் கடிதம் காற்றிலே பறக்காது!

குறிச்தியில் வந்தமர்ந்த பார்வதிக்கு 'அப்படின்னா இந்தச் செந்திலை அந்தத் தாரா காதலிச்சது பொய்யா கதையா, இல்லே, கனவா ? ஓய்ந்த வலி ஓயவில்லை, கனாக் கண்டு விழித்தவளின் கண்கள் திறந்தன. பெண்மையின் செருக்கோடு விழிகளைத் தணித்த கம்பீரத்தோடும் இனித்த சத்தியத்தோடும் உயர்த்தி நிமிர்த்தினாள் : காதலாம், காதல்!... என்னைக் காதலிக்க இந்தச் செந்தில் யார் ?— நான் எங்கே?... செந்தில்நாதன் எங்கே? கொச்சைப்படாத மனிதாபிமானத்தின் நியாயப் படுத்தப்பட்ட ஒழுங்கோடு அவள் நிச்சலனமாகக் கண்களைத் திருப்பவும் மூடிக் கொண்டாள். உள்ளுக்குள்ளே என்னவோ சிரிப்பொலி கேட்டது. காதலுக்குச் சிரிக்கவும் தெரியுமோ ? காதல் என்றால் என்னவென்று தாராவிடம் அன்றைக்குக் கேட்க எண்ணியதை நினைவு கூர்ந்தாள். இப்போது அவளுக்குத் சிரிப்பு வந்து விட்டது.

அவள் : பார்வதி!...

# 6

ஞாலம் போற்றிடும் ஞாயிற்றுக்கிழமை !...

பராக்... பராக்... !

முகப்புக் கூடத்தின் நிலைப்படியில் இளஞ்சூரியன் கதிர் முத்தங்கள் முத்தம் பதிக்கத் தொடங்குகின்றன.

வெள்ளை நிறத்துப் பூனை பாலுக்குக் காவல் இருக்க வேண்டிய கடமைப் பொறுப்பினை எதிர்பார்த்து ; பார்வதியை வளைய வளையச் சுற்றி வந்தது.

பார்வதிக்குக் கொட்டாவி பறிகிறது கண்களில் எரிச்சல் மூண்டது ; அரைநாழிப் பொழுதிற்காகிலும் படுத்து எழுந்தால், உடம்புக்கு கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கல கலப்பாக இருக்கும். நேரம் எங்கே இருக்கிறது ? ஆற்றாமையில் முதிர்ந்த தள்ளாமையை விலக்கிவைத்து விட்டு, அடுப்படியில் ஓடியாடித் தோசை சுட்டுக்கொடுத்து விட்டாள் அம்மா. அவள் உடம்பிற்கு இதுவே பெரிய காரியம். எல்லாருக்கும் காலையில் டிஃபன் பரிமாறினாள். தேங்காய்ச் சட்டினியைத் தாராளமாகவே ஊற்றினாள். நல்லெண்ணெய் வாசனை நெஞ்சுக்குழியில் இன்னமும் வீசுகிறது. அப்பாவுக்கு உடம்பு மோசமாகக் கெட்டு விட்டது. உள்ளத்துக்குச் சிக்கு இல்லையானால், உடம்புக்கு எந்தக்கேடும் வராது ஒரேயொரு தோசையை கிள்ளிக் குதறித் தொண்டைக்குள் இறக்குவதில் அவருக்கு முகமெல்லாம் வேர்த்துக்கொட்டி விட்டது ! — அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இப்படியெல்லாம் முடியாமல் போய் விடுவதற்கு ஆதியும் அந்தமுமான காரணம் இந்தப் பாவிதான் !—'நம்மபாரு குட்டிக்கு எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாய்க் கல்யாணம் முடிச்சு வைக்கிறோமோ,

அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாய் நாம ரெண்டு பேரும் மனசு தேறி, உடம்பும் தேறி, முன்னைப் போலவே தெம்போட நடமாடத் தொடங்கிப்பிடலாமுங்க !' என்று அம்மா பிரச்சினையக் கிளம்பிய துப்பு பகவானுக்கே அர்ப்பணம்.

மழை ஓலமிடுகிறது.

பார்வதியின் உள்ளத்தின் உள்ளமும் மீண்டும் ஓலமிடுகிறது. 'பெண்ணாகப் பிறக்கிறதுக்கு மாதவம் செஞ்சிடவேணும்னு மதிப்பும் மரியாதையும் வச்சுப் பேசப்படுற ஒரு பெண்ணாக நான் நல்லதனமாய்ப் பிறந்திட்ட அந்த ஒரு பாவத்தைத் தவிர. — வேறு எந்தப் பாவத்தையும் செஞ்சறியாதவளாச்சே நான் ? ... புண்ணியம் பண்ணின அப்பா அம்மாவுக்கு இருந்திருந்து துரதிர்ஷ்டம் பிடிச்ச நான் பெண்ணாகப் பிறக்கிறத் துக்குத்தானா, இவங்க ரெண்டு பேரும் தவம் இருந்தாங் களா ? ... ஒரு வேளை நான் இவங்களுக்கு மகளாகப் பிறக்காமல் இருந்திருந்தால், இவங்களுக்கு நெஞ்சுவலிப் பிரச்சனை ஏற்பட்டிருக்கவே ஏற்பட்டிருக்காதோ, என்னமோ ? ... இல்லாட்டி, அப்பாவும் அம்மாவும் ஒரு சந்தர்பத்திலே ரகசிய ஆலோசனை நடத்தின மாதிரி. நான் ஆண் பிள்ளையாகப் பிறந்திருந் தால், இவங்க ரெண்டு பேரும் இப்படி அவதிப்படுற துக்குப் பதிலாக, 'ஓஹோ'ன்னு ஆனந்தமாய்ச் சுகப்பட்டி ருப்பாங்களோ ? — அவளுக்கும் நெஞ்சில் வலி எடுக்கத் தொடங்கி விட்டது ; அந்த வலியை மிகைப்படுத்தி மேன்மைப்படுத்திக் கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்ட வன் கணக்கிலே, அவளுடைய மனச்சாட்சியினின்றும் பிசிறு தட்டிய அந்நினைவை நினைத்துப் பார்க்கவும் துணிகிறாள் ; 'ஒருவேளை, நான் பிறந்த இந்த மண்ணிலேயே நான் செத்து மடிஞ்சிட்டா அப்பறம். என் அப்பாவுக்கும் என் அம்மாவுக்கும் நெஞ்சு வலி என்கிற பிரச்னையும் ஏற்படாமலே போயிடும்தானே? — பார்வதி வீரிட்டாள் ஐயையோ !''

கணங்கள் பேய்க்கணங்களாக ஓடின !

கணக்கு நோட்டுடன் வந்தான் ராமையா.

ஆவளுடைய கணக்குத்தான் அவளுக்குத் தெரியாது ! மற்றக் கணக்கெல்லாம் அத்துப்படி

அப்பா பசி இல்லாமலே, பழங்கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அம்மா தூங்கினாள் ; தோசை சாப்பிட்ட மயக்கம். தூங்கி எழுந்ததும், சமையலுக்கு உதவ அழைப்பதாகச் சொன்னாள்.

சூரிய ஒளிக்கு வழிவிட்டாள். பார்வதி ; அவள் பெரு மூச்சுவிட நன்றாகவே பழகியிருந்தாள். இல்லாததும் பொல்லாததுமான ஏதேதோ நினைவுகள் படம் எடுத்தன; படம் காட்டின. காலையில் க.ாப்பி நேரத்தில் மயிலாப்பூர் மாப்பிள்ளையைப்பற்றி அப்பா நம்பிக்கையோடு தகவல் சொன்னார். சாயந்தரம், பெண் பார்க்கும் படலம் திரும்பவும் ஏடு விரியப் போகிறது! - அவள் தன்னைத் தானே கேலி செய்து கொண்டு, தனக்குத்தானே விரக்தி யோடு சிரித்துக்கொள்கிறாள். சுகமாகவும், சுதந்திரமாக வும், கெளரவத்தோடும் நிம்மதியோடும் சுகப்பட்டு வாழ் வதற்கு இந்த வாழ்க்கைக்குத் தெரியாதோ ? — தெரியவே தெரியாதோ ? இப்படிப்பட்ட சோதனையான வாழ்க்கை முறைக்கு இப்படியொரு போராட்டமான பிறவி முறை தேவைதானா ? — இப்போது அவளுக்குத் தலையும் வலித்தது.

படைக்கிறவன்தான் இந்தப் புதிருக்கு விடை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறான்.

தாகம் தீர்ந்தாள் பார்வதி.

காதலில் தோற்றதால் தற்கொலை செய்து கொண்ட அனுதாபத்துக்குரிய பைத்தியக்காரியின் புகைப் படத்தை மீண்டும் காண்பித்தது ; தினசரி ஒன்று.

வாங்கிக்கிணு வீட்டுக்குத் திரும்புறவரையிலும், அப்பாவோட நெஞ்சுவலி எக்குதப்பாக் கூடிப் போயிடாமல் இருந்தால் தேவலாம். தமிழ்ப் படமானால், இம் மாதிரி ஆபத்துச் சமயத்துக்குத் திடுதிப்னு கார் ஒண்ணு உதவிக்கு வந்து குதிக்கும் ! நான் அத்தனை அதிர்ஷ்டக் காரியா ! பாசத்தின் துடிப்பில் அங்கிருந்து ஓட்டம் பிடித்து மருந்துகடை வாசலில் நின்றுவிடவும் துடித்தாள்.

ஜனங்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள்

பனகல் பூங்கா நெருங்கியது.

பார்வதி திசைமாறி, திசை திரும்பிப் பாய்ந்து நடந்தாள் !...

இது அநியாயம் இல்லையா ?

அவளை எதிர்த்துப் பாய்ந்து திரும்பி மடங்கிய நூதனமான 'பிளஷர்'. கார் ஒன்று அவளை முன்னே மறித்துச் 'சரே லென்று நின்றது.

''ஹெல்லோ' பார்வதி!'' என்று, கூவி, முன் ஆசனத்தில் இருந்த மின்னல் கொடியாள் ஒருத்தி அழைத்தாள் '' ''க்வீன்'' மேரீஸிலே உன்னோட பி.ஏ, படிச்ச அதே சாட்சாத் மாதங்கியேதான் நான் !'' என்றாள்.

''எங்க அம்மாள் இப்போ பட்டணம் அறிஞ்ச பெரிய சமூக சேவகியாக்கும் !'' காரை ஓட்டி வந்த ரம்பையோ, திலோத்தமையோ மேலும் சேதி சொன்னாள்.

வேளை தப்பிய வேளையில் தனக்கு உண்டான சோதனையான அவசர ஆத்திரத்திலே, 'இப்படியொரு கரடிச் சோதனையா' எனத் தவித்த நிலையில், தோழியைச் சற்றே கூர்ந்து பார்த்ததும், அவளையும் அறியாமல், ''ஓ! — அந்த மாதங்கிதானா நீ?'' என்று கேட்டு, ஆனந்தப் பரவசத்தோடு கூவி விட்டாள் பார்வதி.

கூதல் காற்று பேசியது

''நீ கல்யாணம் கட்டிக்கிணியா?'' கார்மோகினியின் விசாரிப்பு.

''அது ஒண்ணுதான் குறைச்சல்!'' ஏழைப் பார்வதியின் ஏழ்மையான பதில்.

''நீ அப்படியெல்லாம் சொல்லப்படாது!''

''நான்தான் அப்படிச் சொல்லவேணும்; சொல்லவும் முடியும்! சரி; உன்னோட மாரேஜ் எல்லாம் முன்னாடியே ஜாம்ஜாம்னு நடந்திருக்கும்; நீ பெரிய இடத்துப் பெண் ஆச்சுதே?'' என்று வினவினாள் பார்வதி.

மாதங்கியின் புன்சிரிப்பில் பெருமிதமும் இருந்தது. ''வர்ற வைகாசியிலே என் மாரேஜும் முடிஞ்சுடும்!'' என்றாள், பேச்சு வாக்கில் கனமாக இழைந்திருந்த சங்கிலியை வெளி மார்பில் வெளிப்படையாகவும் எடுப்பாகவும் போட்டுக் கொண்டாள்.

ப்பூ!... டாலர்கூட இல்லாத வெறும் சங்கிலிதானா?... அது போகட்டும்; இந்தச் சிங்காரிக்கு இன்னும் சிக்கனமாக யாருமே ப்ளவுஸ் தைச்சுக் கொடுக்கல்லே போலிருக்குது' — பழைய நட்பில் வேண்டுமென்றேதான் அவளோடு ஒருமையில் பேசினாள். அவளும் திருத்தவில்லை! — அப்படியானால், மாதங்கி இன்னமும் திருந்தவில்லையோ — பார்வதி விழிவழி நடந்தாள்.

# 7

பனகல் பூங்கா. ராஜகளை துளியேனும் இருக்காதா? மாலை மலரும் நேரயின் சூழலில், இயற்கையை அணைக்க முயன்ற இருளை அணைத்தது மெல்லிய பூங்காற்று.

எதிர்புறத்தில் பார்வதி வந்து நின்றதுதான் தாமதம்; நெஞ்சடியில் கோடுகிறுக்கிக் கிடந்த பாதி அமைதியும் கலைந்துவிட்டமாதிரி உணரலானாள்; கழுத்தைச்சுற்றி முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டபோது, கண்பார்வையில் தென்பட்ட உம்மிடியாரின் தங்க நெக்லஸ் படவே, பற்று அறுத்த நிலையில் கண்களை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள். ஆனாலும், ஆற்றாமைச் சிரிப்பு அவளையும் மீறிகொண்டு வீரிடவே செய்தது.

மனிதமந்தை ஆத்திரமாகவும்; அவசரமாகவும் நளிகிறது; ஊர்கிறது; நகர்கிறது; மோதிப்பிரியவும் தவறி விடவில்லை.

ஜாதி முல்லை மணம் பரப்பிக் கொண்டேயிருந்தது.

இரண்டு முழம் வாங்கிக் கொண்டாள் பார்வதி. அவளுக்கும் அம்மாவுக்கும் யதேஷ்டம்! — கைப் பையி லிருந்து எடுத்த ஒரு ரூபாயில் மிச்சமாகக் கிடைத்த பத்துப் பைசாவை உள்ளே போட்டு வைக்க ஜிப்பைத் திறந்தாள்.

"ஆத்தா, ஒம் புள்ளக்குட்டிக நல்லா இருக்கும்; பத்துக்காசு தருமம் போடு, தாயே!"

தாயான தோஷத்திற்குத் திருஷ்டி கழிப்பதுபோல் இடுப்பில் இடுக்கிக்கிடந்த நோஞ்சான் குழந்தையுடன்

வந்து நின்ற தாய்ப்பிச்சைக்காரி பல் எல்லாம் தெரியக் காட்டிக் கெஞ்சினாள்.

பத்துப் பைசாவை இனம் கண்டு கொண்டு பிச்சைக் காரியால் அவளை இனம் தெரிந்து கொள்ள முடிய வில்லை ; ஒரு வேளை காற்றில் கலைந்த கழுத்து துணியிலிருந்து தலை நீட்டிய கழுத்துச் சங்கிலியைத் தாலிச் சங்கிலியென்று அவள் அனுமானம் செய்திருக்க வேண்டும் நீள்மூச்சு வெகு நீளமாகவே பிரிந்தது. வெளிச்சத்துக்கு நடுவில் இருட்டு தன்னைத் தேடிக் கொண்டிருந்த வேளை தப்பின வேளை அது

பாதங்கள் பரபரத்தன.

"பார்வதி !"

குரல் கேட்டது.

நிதானமாகத் திரும்பினாள்.

அங்கே, தாரா ... !

பார்வதியின் பாவனைகள் மிகுந்த முகம் அருவருப் படைந்தது. தாரா என்றால் புதிர் எனவும் அர்த்தம் இருக்கலாம் ! உங்களைப் பெற்றவங்களைச் சாட்சி வச்சுப் புருஷன் — பெண்சாதி ஆகிவிட வேண்டியது தானே ?

அப்புறம், பிரச்சனைக்கு என்ன வேலை இருக்க முடியும் ?"

"பிரச்சனையே அங்கேதானே இருக்குது ?"

"என்ன சொல்லுகிறே நீ, தாரா ?"

"உள்ளதைத்தான் சொல்லுகிறேன் !"

"இன்னம் சொல்லலையே"

''சொல்லிடுறேன் பார்வதி ; எங்களோடது கலபபுக் கலியாணமாக்கும் !''

வாஸ்தவந்தான் ! — கலப்புக்காதல் முடியிறதும் நியாயந்தான்; முடியவேண்டியதும் நியாயந்தான் ! தவிரவும், கலப்புத் திருமணத்திலே பாரத சமுதாயத்தோட சீர்த்திருத்தம் மட்டிலும் அடங்கியிருக்கல்லே; நம்ம அரசாங்கத்தோட சீர்த்திருத்தம் மட்டிலும் அடங்கியிருக்கல்லே; நம்ம அரசாங்கத்தோட தமிழ்ப்பண்பாடு தழுவின ஆதரவும் பாராட்டும் கூட அடங்கியிருக்குதே, தாரா? ?

''ஆனால்...?''

'என்ன பயமுறுத்துறே'' ?

நான் ஒண்ணும் பயமுறுத்தல்லே, பாரு! — எங்களுக்கு வாய்ச்ச சூழ்நிலைதான் எங்களைப் பயமுறுத்துது!''

''விபரம் புரிஞ்ச பொண்ணு நீ; கொஞ்சம் விவரமாய்ச் சொல்லேன், தாரா !''

''உன் கையிலே அவசரமா ஒரு யோசனை கலக்கணும்னு அங்கே பார்க்கிலே அவர் இருக்கார்! உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கார் அவர்! ''

''எவர் ?''

''அவர்தான் — மிஸ்டர் செந்தில்!''

''அவரோட வீடு...ஊகூம், பங்களா எங்கே ?''

''130, க்ரீன்வேஸ்ரோடு, அடையாறு, சென்னை.''

ஓ...அப்படியா ? யார் அவர் ?

''அவர்தான் செந்தில், பார்வதி!''

''அதான் தெரியுதே? யார் அந்தச் செந்தில்?''

''செந்தில் ஒசந்த இடத்துப் பிள்ளையாண்டா னாக்கும்!''

அப்படின்னா, நீ?

'' .... ... ... ...''

''ஊம், சொல்லேன் தாரா''

''நான்...நான்...''

''ஆடு திருடின கள்ளி மாதிரி ஏன் இப்படி முழிக் கிற?... அப்படின்னா, நீ தாழ்ந்த இடத்துப் பொண்ணா?... தாழ்ந்த இடத்துப் பொண்ணு தானா நீ?''

''பாரு! என்று கூவி ஓங்காரக் குரல் எழுப்பினாள் தாரா; பூவிரல்கள் பூதாகாரமாகத் துறுதுறுக்க, வீரா வேசத்தோடு விழிகளைத் திரட்டிப் பார்வதியை எரித்துச் சாம்பலாக்கி விட எத்தனம் செய்தாள்.

பார்வதி மௌனமான அமர்த்தலோடு எக்காள மிட்டாள். ''தாரா, பார்வதியைப் படிச்சுக்கிறத்துக்கு உனக்கு வயசு பற்றாது, எதையும் விவேகத்தோட தாங்கிச் சமாளிக்க மனவலிமையும், எதுக்கும் நிதான மாக ஈடு கொடுக்கக்கூடிய பண்பு நலமும் பகவான் கடாட்சத்தினாலே என் கையிலே நிரம்பவே இருக்கு. நீ வெறும் தாரா! என்னை உன்னாலே ஒண்ணும் செய்யமுடியாது! என்று கண்கள் சிவக்கப் பேசினாள்.

சூடு தாங்காமல் பொருமினாள் தாரா.

தாரா, கண்களைத் துடைச்சுக்க; உன்னோட ஃப்ரண்ட் மிஸ்டர் செந்திலைப்பற்றி நீ என்கிட்டே சொன்னப்ப, என்னை மாதிரி, செந்திலும் ஒசந்த இடத்

தைச் சேர்ந்தவர் தான்' அப்படின்னு நீ தன்மானத்தோடவும் சுயகௌரவத்தோடேயும் சொல்லியிருந்தா நான் உன்னை ஏன் ஏசப் போறேன்? சரி, சீக்கிரமா விஷயத்துக்கு வா. இருட்டிப் போச்சு; என்னை எங்க வீட்டிலே தேடுவாங்க,'' என்று தூண்டுதல் அளித்தாள் பார்வதி.

தாரா அப்போது ஆசைக்கனவுகளின் நிர்வாண எழிலிலே மங்கியிருக்கலாம்: கவர்ச்சி மேனியெங்கும் பெருகிவழிந்திட்ட அவளுக்கு அவளது இடது கன்னத்து மச்சம் நிச்சயம் ஒரு 'ப்ளஸ் பாயிண்ட்' தான்—தோழியின் கைபட்டு விழிப்படைந்தாள்.

இதற்கிடையில் ஜோடியாக வந்த தாராவும் செந்திலும் விபத்துக்கு உள்ளாகி ஜோடி பிரிந்த காட்சியையும் பார்வதியின் மனம் படம் போட்டுக் காட்டியது.

திடீரென்று புகைப்படலம் விரிந்தது.

யாரோ விடலை ஒருவன் வழி தவறி நடந்து, ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்ற தோழிமார் இருவருக்கும் அருகிலே வந்து நின்று முறைத்தவனாகப் புகை கக்கிக் கொண்டிருந்தான்.

பார்வதி ஆண்மையோடு சினந்தாள்: ''ஏய்! சர்க்கார் பாதை அங்கே கிடக்கு; பாதையைப் பார்த்துநட. இல்லேன்னா, நடக்கிறதே வேறே!''

'சனி' விலகியது.

தாரா அமரிக்கையாக முறுவல் பூத்தாள்.

''பெண் என்கிறவள் பூவாக இருக்கிறதிலேதான் புண்ணியம் உண்டு என்று பேசுகிற வாதத்திலே இருக்கிற நியாயம், பெண் என்பவள் பூ நாகமாக இருக்கிறதாலே

பாவம் இல்லை என்கிற பிரதிவாதத்திலேயும் இருந்தாக வேணும்.''

வாஸ்தவம், பார்வதி !'' என்று ஆமோதித்த தாரா சொன்னாள் : மிஸ்டர் செந்தில்நாதன் ஒரு ஜென்டில் மேன் ; அவரை அவரோட திரண்ட சொத்துப் பத்துக் காகக் காதலிக்கலே நான் ; அவரை அவருக்காகவும். அவரோட நல்ல குணத்துக்காகவுமே மனசாரக் காதலிக் கிறேன். நேக்கு என்னோட காதலே உலகம் ஆச்சு... இந்த விஷயத்தை அவரிடம் சொல்லுறதுக்கோசரம் அவரோட ஆத்துக்குப் போயிண்டிருந்தப்பத்தான், வழியிலே அவரை ஸ்கூட்டரிலே கண்டுட்டேன் ; என்னையும் உட்கார்த்தி வச்சுக் கூட்டிண்டு வந்தார் ; அப்பத்தான் காலம்பற ஆக்சி டென்ட் ஏற்பட்டுடுத்து ! சாகப்பிழைக்கக் கிடைக்கிற தன்னோட தாயாருக்கும் தொகப்பனாருக்கும் ஆறுதலை ஏற்படுத்துறதுக் கோசரம் என் காதலை அங்கீகரிச்சு என்னை மாரேஜ் செஞ்சுக்கவும் முன்வந்தார் செந்தில் ...!

''... ஆனா, என் ஃபாதரும்மதரும் ஒப்புத்துக்க மாட் டேன்னு அழும்பு பண்றாளே ?... என்னோட டியர் செந்திலை ரொம்பவும் கீழ்த்தரமா, அவா ரெண்டுபேரும் பேசினதைப் பொறுக்கமாட்டாமல், அவாளை வாய்க்கு வந்தபடி திட்டிப் போட்டுட்டு, என் வழியிலே இப்ப இங்கே ஓடிவந்துட்டேன். ஆகச்சே இந்தக் காதல் விவ காரத்திலே நீதான் ஒரு நல்ல தீர்ப்புச் சொல்லி, நீயே சாட்சியாகவும் இருந்து எங்களோட கலப்புக் காதல் கல்யாணத்தை முன்னே நின்னு நடத்தி வைக்கணும். கல்யாணம் முடிஞ்சுட்டா நான் அவரை செந்திலை எப்படியும் கண்காணாத ஒரு இடத்துக்கு அழைச்சிண்டு ஓடிடுவேன் ! இது பிரமாணமாக்கும் ! ...

பார்வதிக்குத் தலைவலி மருந்து தேவைப்பட்டது மெள்ள நகர்ந்தாள். தாரா பின்னே தொடர்ந்ததை

உணர்ந்தவள், நின்றாள் : ''தாரா !... நான் வெறும் மனுஷி... வெறும் பார்வதிதான் ; என்னைப் பெற்றவங் களோட கடைசிக்கால ஆசையைப் பூர்த்தி செய்யக் கடமைப்பட்ட நான், எனக்கு உண்டான ஒரு நல்ல வழியைத் தேடிக் கண்டு பிடிக்க இன்னமும் முடியாமல், நானே திண்டாடித் தவிச்சுக்கிட்டு இருக்கேன் !... காதல் என்பது புரட்சிக்கு மறுபேர்னு நானும் கூட வாசிச்சிருக் கேன், ஆனாலும் நடைமுறை நியாயத்துக்கும் தர்மத்துக் கும் பொருந்தாத பொருந்த முடியாத — பொருந்தவும் கூடாத இந்த மாதிரியான அபத்தமான, அசிங்கமான புரட்சி விவகாரமெல்லாம் எனக்கு உடன்பாடில்லே! நான் வர்றேன், தாரா ! '' தீர்ப்பைச் சொல்லிவிட்டு நடந் தாள். அம்மாவும் அப்பாவும் அவளுடைய ஜோடிக் கண் களிலும் ஜோடியாகவே நின்றார்கள்.

என்னைப்போலவே உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த செந்தில்நாதன் எனக்காகக் காத்துக்கிட்டிருப்பார் !''

''பேஷ்...பேஷ் !''

''நானும் செந்திலும் ஒருத்தரை ஒருத்தர் உயிருக்கு உயிராகவும், உயிருக்கும் மேலாகவும் நேசிக்கிறோம் பார்வதி !''

''ஓஹோ ! அப்படியா ?''

''ஆமா !''

''சரி ; உங்க ரெண்டுபேரோட காதலும் உயிரளவிலே தான் இதுவரைக்கும் ஐக்கிப்பட்டிருக்குதா ? இல்லே—''

பார்வதி கேள்வியை முடிப்பதற்குள்ளே —

தாரா பதிலை ஆரம்பித்தாள் ; எங்களோட காதல் பவித்திரமானது ; பரிசுத்தமானது ; அதனாலேதான், அது இது வரையிலும் எங்களோட உயிர் அளவிலே

யும் மனசின் அளவிலேயும் ஒன்றிக் கலந்து உறவாடிக்கிட்டே இருக்குது ; மற்றப்படி, எங்க காதல் இந்த நிமிஷம் வரை எங்க உடல்களைத் தொற்றவே இல்லை ; அப்படி தொற்றவும் நாங்க விடமாட்டோம்!— நட்பின் பேராலே மனம் விட்டுப் பழகிப் பேசிகிட்டு இருக்கத்தான் நாங்க லாட்ஜ் பிடிச்சோம் ! என்னை நம்பு, பாரு !', என்றாள்.

தோழிகள் நடை பயின்றனர்.

இப்போது அவள் கண்களும் நனையத் தொடங்கின!— "தாரா ! பெண் என்கிறவள் பூவாக இருக்கிறதிலேதான் புண்ணியம் உண்டு என்கிற வாதத்திலே இருக்கிற நியாயம், பெண் என்பவள் பூ நாகமாக இருக்கிறதாலே பாவம் இல்லை என்கிற பிரதிவாதத்திலேயும் இருந்தாக வேணுமாக்கும் ?"

தஞ்சாவூர்த் தலையாட்டி பொம்மையென தாரா தலையை ஆட்டினாள்.

சரி—நீ இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறே?— சொல், தாரா, சொல் !"

விதிக்குக் கேள்வி கேட்கத்தானா தெரியாது ?

"நீ என்னோடு அந்தப் பார்க் மட்டுக்கும் வரணும், பாரு ! அங்கேதான், காலை வெய்யலில் பதிப்பகத்தின் முன்னிலையில் நடுத்தெருவில் தாராவும், அவளுக்குத் துணை நிழலாக வந்த செல்வப்பிள்ளை செந்திலும் துணை பிரிந்து— ஜோடியும் பிரிந்தும் ஸ்கூட்டர் விபத்துக்கு ஆளான சங்கதியை அவள் சற்றுமுன் காலாற நடந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போதும் கூட நினைத்துப் பாாத்து சலனம் அடைந்ததும் பொய்

அல்ல ! — "தாரா, இருட்டிப் போச்சே ? இன்னமும் இங்கே தியாகராய நகரிலேதான் இருக்கிறீயா ? வீட்டிலே உன்னைத் தேடக்கிட மாட்டாங்களா ?" என்று இயல்பான அனுசரணையோடு விசாரித்தாள். விசாரணையின் நிர்த்தாட்சண்யத்தை அவளால் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் போயிற்று.

தாரா தட்டித் தடுமாறியவளாக, நடைபாதையின் சிமெண்டுத் தரையில் கால் பெருவிரல்களால் கோலம் போட்டவள், குனிந்திருந்த தலையைத் தயக்கத்துடன் நிமிர்த்தினாள். கண்களின் இமை விளிம்புகளில் பனி படரலாயிற்று.

பார்வதிக்குச் சுருக்'கென்றது; பதட்டமாக ஏறிட்டுத் தோழியை ஊடுருவினாள்.

தாரா சற்றுமுன்புதான் குளித்து முழுகி விட்டு வந்தவள் போலவே தோன்றினாள். பவுடர்ப் பூச்சின் பகட்டுக்கு 'ஓச்சம்' சொல்ல முடியாது.

சிவப்புக் கொன்றை மரத்தடியில் கைகளைப் பிசைந்தபடி நின்று கொண்டிருந்தான் செந்தில். தாராவையும் பார்வதியையும் கண்டவுடன், புதிய தெம்பு கொண்டான்; இருவரையும் வரவேற்றான் இப்போதாகிலும் அவனுக்கு பார்வதியை அடையாளம் தெரிந்ததே ! — "நல்லா இருக்கீங்களா, பார்வதி ?" என்று பார்வதியிடம் குசலம் விசாரித்தான்.

"ஏதோ இருக்கேனுங்க !" என்றாள் பார்வதி. மெல்லிய பூஞ்சிரிப்பை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டாள். பிறகு, மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள். உடம்பில் பரவிய பரபரப்பைச் சமாளித்துக் கொண்டாள். இப்போது அவள் பார்வை தாராவின்

திசைக்குத் திரும்பியது. "தாரா, கொஞ்சம் முந்தி நீ என் கையிலே சொன்ன தாக்கல் தகவல் எல்லாம் சுத்தமான பேச்சுத்தானே?" என்று வினாவினாள்.

"சுத்தமான பேச்சு மட்டும் இல்லே; சத்தியமான நடப்பும்தான்!" என்பதாக உறுதி மொழிந்தாள் தாரா.

"சத்தியத்துக்குத் தருமம் என்கிற முதல் மரியாதையும் உண்டுண்ணு நம்புறவள் நான்!"

"நானும் அப்படித்தான் நம்புவேன்!"

"ஆல்ரைட்! இப்ப நான் என்ன செய்யட்டும்? சொல்' தாரா!"

"உன் தேவ சபையிலே, நீதான் எங்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்க வேணும்."

"எனக்கு உண்டான ஒரு நல்ல வழியைத் தேடிக் கண்டு பிடிக்க இன்னமும் முடியாமல் நானே திண்டாடித் தவிச்சுக்கிட்டு இருக்கேன்; இந்த லட்சணத்திலே, அந்நியோன்யமான உங்க காதல் விவகாரத்திலே, அந்நியமான நான் எந்த நல்ல வழியைச் சொல்லித் தர முடியப் போகுதோ, விளங்கல்லையே? சரி, சரி; 'டைம்' ஆச்சு; விஷயத்துக்கு வா, தாரா!"

"நானும் செந்திலும் மனமாரவும் மனப்பூர்வமாகவும் காதலிக்கிற மாதிரியே, கல்யாணமும் பண்ணிக்கிட முடிவு செஞ்சிருக்கோம்!"

அப்புறம் என்னவாம்? — ஒரு முகூர்த்த நேரத்தைக் குறிச்சு நீங்க ரெண்டு பேரும் கலியாணத்தை செஞ்சிக்க வேண்டியதுதானே!

எங்க கலப்புக் கலியாணத்துக்கு எங்களோட பெற்றோர் சம்மதம் தெரிவிச்சுப் பச்சைக் கொடி

காட்டிடுவாங்கண்ணு எங்களுக்குத் தோணவே இல்லை! ... அதனாலே ...''

''அதனாலே ...''

''அதனாலே, நானும் செந்திலும் உன்னையே சாட்சி வச்சு, முப்பாத்தம்மன் சந்நிதானத்திலே கல்யாணம் பண்ணிக்கிட வேணும்னு தீர்மானிச்சிருக்கோம், பாரு !''

இருந்திருந்தாற்போல அங்கே பரவத் தொடங்கிய பயங்கரமான மௌனத்தை மென்று விழுங்கியவாறு, தீர்ப்புப் படிப்பது போலக் கூறினாள் பார்வதி :

''தாரா, மிஸ்டர் நீயும் செந்திலும் மேஜர் ஆனவங்க; சட்டப்படி, சுதந்திரம் ஆனவங்க ; அதனாலே உங்க காதலுக்குக் குறுக்கே நிற்கிறத்துக்கு எந்தச் சக்தியாலேயும் முடியாது; முடியவே முடியாது!'' ஆனாலும் உலகசம்பிர தாயத்தை மறந்து, உங்களுக்குண்டான கண்ணியமான — கட்டுப்பாடான கடமையையும் மறந்து, நீங்க இரண்டு பேரும் உங்களோட அருமையான பெற்றோர்களைத் துறந்து, நீங்க உங்க மனம்போன போக்கிலே, அம்பாள் சந்நதியிலே கணவனும் மனைவியுமாக ஆகிடணும்னு முடிவு செஞ்சிட்ட இந்தக் கலியாணத்திலே என்னை எதுக்கு சாட்சியாக இழுத்து, வம்புக்கு இழுக்கிறீங்க ? காதல் என்கிறது புரட்சிக்கு மறுபேர்ணு நானும் அறிவேன்.

ராமையாப் பயல் மேல்மூச்சு — கீழ்மூச்சு வாங்க ஓடி வருகிறான் : ''அம்மாவுக்கு மறுபடியும் வழக்கமான நெஞ்சுவலி வந்திடுச்சு; நல்ல காலமா அப்பா வீட்டிலே இருந்திட்டாங்க, ஓடிபோய் மருந்து வாங்கியாந்து குடுத் தாங்க. இப்பத்தான் நம்ம அம்மா அசந்து கண்ணை மூட ஆரம்பிச்சிருக்காங்க. ரொம்ப நேரமாகியும், நீ வீடு திரும்

பலையேன்னு பயந்து, நான்தான் உன்னைத் தேடிக்கினு ஓடியாந்தேன்.''

பாசம் தூண்டியது.

பாசம் தூண்டிலும் ஆனது.

இருளும் ஒளியும் கண் பொத்தி விளையாடிக் கொண்டிருக்கின்றன.

அக்காவும் தம்பியும் நடந்தனர்.

சரோஜினி தெருவின் திருப்பத்தில் ரோஜா நிறத்தில் ஒரு கார் திரும்பியது.

ஓ...செந்தில்...மிஸ்டர் செந்தில் !

':நல்லா இருக்கீங்களா, மிஸ் பார்வதி ?''

''நல்லா இருக்கேனுங்க ! போயிட்டு வர்றேன்: அம்மா வுக்கு உடம்புக்கு முடியலையாம் !''

''அப்படியா ? நீங்களும் தம்பியும் வண்டியிலே ஏறிக் கங்க; வீட்டிலே கொண்டு வந்து விட்டுட்றேனுங்க : டாக்டர் ராஜ் பெரிய கார்டியாலஜிஸ்ட். அவரையும் அப்புறம் அழைச்சிட்டு வருவேனுங்க !''

''ரொம்ப ரொம்ப நன்றிங்க; உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம் ? நாங்க போய்க்கிடுறோமுங்க !''

டால்ஃபின் திசை மறுகித் திசை திரும்பிவிட்டது !

# 8

ராத்திரி சாப்பாடு முடிந்ததும், கைக்கு மெய்யாகத் தாம்பூலம் தரித்து, துளி அளவுக்குப் பன்னீர்ப் புகையிலையைக் கடைவாயில் சுவாரசியமாக அடக்கிக் கொண்டு ஆனந்தப் பட்டால்தான், சிவகாமிக்கு உறக்கம் பிடிக்கும். வழக்கம்போல் தாம்பூல சம்பிரதாயத்தைச் சட்டமாக முடித்துக் கொண்ட ஆறுதலோடு தலையணையை இழுத்துப் போட்டுத் தரையிலே ஊன்றிச் சாய்ந்திருந்த கைகளில் தலை சாய்ந்து கிடந்தவள், அசந்து மறந்த நிலையில், பன்னீர்ப் புகையிலையின் எச்சிலை மிடறு விழுங்கவே, காட்டுத் தனமாக இருமம் வெடித்தது; கண்கள் சிவந்து வழிந்தன; முகமெல்லாம் மாறியது ; மூச்சுப் பேச்சு இல்லை.

பார்வதி பதறினாள்.

ஆத்மநாதன் வெளியே காற்றாட நின்றவர், உள்ளே ஓடி வந்து சின்னப்பிள்ளை மாதிரி விம்மி விம்மி அழுதார். உயிருக்கு இனியவளின் அலுத்துச் சலித்த மார்பை விரல்கள் நடுங்கத் தடவிவிட்டார். மார்பகத்தில் சாட்சி சொல்லி வடுபாய்த்திருந்த தாலித் தழும்பில் அலங்கோலமாகக் கிடந்த மங்கலத் தாலியைப் பார்த்ததுதான் தாமதம், "சிவகாமி!" என்று ஓங்கிப் புலம்பினார்.

பார்வதியும் அழுதாள்.

ராமையாவுக்கும் அழுகையில் பாகம் கிடைத்தது.

நடந்த கண்ணீர்க் கலாட்டாவில் சிவகாமியின் கண்கள் சிவந்தன.

ஆத்மநாதனுக்கு வாயெல்லாம் சிரிப்பு ஆகிவிட்டது. இல்லத்தரசியின் சுருக்கம் விழுந்து வெளுத்துக் கிடந்த நெற்றிமேட்டில் ஒதுங்கிக் கிடந்த வெள்ளை மயிரிழைகளை நோகாமல் ஒதுக்கி விட்டார். பிறகு, நெஞ்சோடு நெஞ்சை இருத்தி, ''சிவகாமி! சாந்திமுகூர்த்தம் நடந்தப்போ நாம ரெண்டுபேரும் செஞ்சுக்கிண ஒப்பந்தத்தை மறந்திட மாட்டியே?... நீ போறதானாலும், என்கிட்ட ஒரு வார்த்தை கட்டாயம் சொல்லிப்பிடு; நான் போறப்பவும், உன் கையிலே நிச்சயம் சொல்லிப்பிடுவேன் என்றார்.

விதரணை புரிந்த அக்காவும் தம்பியும் விவரம் புரிந்து விம்மி .வெடித்தனர்.

''கடைசிப் பட்சம் நம்ம பாரு குட்டியை மாலையும் கழுத்துமாவும் தாலியும் மெட்டியாவும் பார்க்கிற மட்டுக்குமாவது, நாம ரெண்டு பேரும் சத்தியமாய் உசிரோட இருப்போமுங்க, அத்தான்!... இந்த ஒரு நாயமான பிரார்த்தனையைக் கூட நல்லபடியா நிறைவேற்றித் தர எந்த ஒரு தெய்வத்துக்கும் முடியலேன்னா — தெரியலேன்னா அப்புறம் தெய்வம் உண்டுண்ணு நம்மாலே எப்படி நம்ப முடியுமாம்.? அப்பாலே நாலு பேரைப் போலவே, நாமளும் சாமியும் இல்லே; பூதமும் இல்லே' அப்படின்னு பிரசங்கம் பண்ண வேண்டியதுதான்.

இப்படியெல்லாம் தர்க்கமும் குதர்க்கமும் பேச எங்கே கற்றுக் கொண்டாள் சிவகாமி ?— அவள் வாயை அவர் பொத்தினார்.

கண்ணீரோடு உள்ளே சென்றவள் தண்ணீரோடு வெளியே வந்தாள். ''ராத்திரி சாப்பிட வேண்டிய ரத்த விருத்தி மாத்திரையைச் சாப்பிடல்லேதானே ?'' என்று கேட்டவாறு, குழாய் மாத்திரையையும் தம்ளர் தண்ணீரையும் நீட்டினாள் பார்வதி.

''மறந்திட்டேம்மா!''

''எல்லாக் கணக்கும் தெரியறவருக்கு இந்தக் கணக்கு மாத்திரம் தெரியாமல் போயிடுமா ?''

எழுந்து அமர்ந்து மாத்திரையை விழுங்கித் தண்ணீரைக் குடித்ததும், ''அம்மாடி ! உன்னோட கலியாணத்தை எங்களாலே முடிஞ்சவரையிலும் நல்லபடியா நடத்தி வைக்க வேண்டியது எங்க பொறுப்பு. தம்பிப் பயல் கல்யாணம் உன் கையில்தான் இருக்கு; மறந்திடாதேம்மா !'' என்று வேண்டினாள்.

''மறந்திட மாட்டேம்மா ! நான் சொல்றேன், பாருங்க, தம்பி கல்யாணத்தை என்னோடே சேர்ந்திக்கிணு நீயும் அப்பாவும் ஜோடியா நடத்தி வைக்கத்தான் போறீங்க !— என்னை நம்பு, அம்மா !— ஏன், தெரியுதா? — நானும் தெய்வத்தை நம்புறவள்!''

தாய்க்காரிக்குத் தூக்கம் சொக்கியது.

சிவகாமிக்கு உறக்கம் பிடித்தால், ஆத்மநாதனுக்கு மட்டும் உறக்கம் பிடிக்காமல், போகலாமோ ?

குறட்டைச் சத்தம் ஜோடி சேர்ந்தது ஜோடி சேர்த்தது.

ஈஸ்வரா ! ....

# 9

பார்வதிக்கு நல்ல மூச்சு வந்து வினாடிகள் இருபது ஆகியிருக்காதா ? விடிவிளக்கைப் போட்டு அறைக் கதவுகளை லேசாகச் சாத்திவிட்டு வெளிக்கூடத்துக்கு வந்தாள். இதமான காற்றின் சுகத்தில், அவளுக்கும் கனவுகளில் குளிர் காய வேண்டும் போலிருந்தது. அந்தச் சுகானுபவம் ஒரு சில வினாடிகள் நீடித்தால்கூட போதும் ! உறையைப் பிரித்தாள் ; வகை வகையான காதல் கடிதங்கள் பிரிந்த பாங்கை வெகுவாகவே ரசிக்கவும் செய்தாள். மேலும் அக்கடிதங்களைப் பற்றி இன்னொரு 'சிதம்பர ரகசிய'மும் இல்லாமல் இல்லை !— அத்தனை காதல் கடிதங்களையும் தான் மாத்திரம் படித்துச் சிரித்ததோடு நிற்கவில்லை ; அவற்றைத் தனது பெற்றோருக்கும் வாய் விட்டுப் படித்துக் காண்பித்து மனம் விட்டுச் சிரித்து நையாண்டி செய்ததும் யதார்த்தமான நடப்பு ; நடவடிக்கை.

அத்தனை தபால்களும் காதலின் பெயரால் பார்வதிக்கு வந்தவை !—யார் யாரோ 'இந்தியன்' என்ற உரிமையுடனும் 'தமிழன்' என்ற உறவுடனும் எழுதியிருந்தார்கள் !— திரை நட்சத்திரங்களுக்கு இப்படிப்பட்ட கடிதங்கள் வருவது உண்டாம். அவள் படித்திருக்கிறாள். இவங்களுக்கெல்லாம் என் பேர் எப்படித் தெரிஞ்சுது ? என்னோட இருப்பிடத்தைக்கூட சி ஐ டி. வேலை பண்ணி அறிஞ்சிருக்காங்களே ?' அவள் தன்னுடைய 'கல்லூரி நாட்களை நினைவு கூர்ந்தாள். பதிப்பகப் பணியைத் தொடர்வதற்கு முன் இரண்டு இடங்களில் தற்காலிகமாக அலுவல் பார்த்தபோது. அங்கங்கே சந்திக்க வேண்டிய செல்வ செருக்குமிக்க அநாகரிகமான பார்வைகளாலும் பாவனைகளாலும்

வயிற்றுப் பசியையும் மீறின உள்ளக் குழப்பத்தால் உந்தப் பட்டு 'குட்பை' போட்டு விட்டுப் பெண்மைச் செருக் கோடு வெளியேறிய தினங்களையும் மறந்துவிட மாட்டாள்!— பாவம், ஒரு பார்வதிக்காக ஒரு தேவதாஸ் தானே பிறந்திருக்க முடியும்?—அம்மாடி பார்வதிப் பொண்ணே! உன் தங்கக் கழுத்திலே ஒரு மஞ்சள் கயிறு விழுகிற வரைக்கும் நீ பிறத்தியார் கண்ணிலே விழுந் திடாமல், மானம் மரியாதையோடவும் வைராக்கிய ரோசத்தோடவும் ரொம்பவும் ஜாக்கிரதையாக ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாட்டம் கழிச்சாகணும்!—உலகம் பொல்லாதது; அதைக் காட் டிலும் பொல்லாதது தமிழ்ச்சமூகம்!—இவ்வாறாக, அப்பாவும் அம்மாவும் பாடம் படித்துத் தரவில்லையா?— காதலாம் காதல்!...இந்தக் காதலின் நிலை என்ன? விலை என்ன? கதி என்ன? விதிதான் என்ன?...கள்ள மார்க்கெட்டிலும் இந்தக் காதல் விவகாரம் செல்லுபடி ஆகிறதோ?...அது, கிலோ என்ன விலையாம்?— நமட்டுச் சிரிப்பில் பொலிகிறாள்!

ஜாதிமுல்லையின் தனிமணம் தனிதான்!

பிதுங்கி வழிந்த காதலை அதே கூட்டுக்குள்ளே போட்டுத் திணித்து அடைத்த அமைதியோடு. வீட்டுக் கதவைப் பூட்டிச் சரிபார்த்துவிட்டு உட்புறம் அடியெடுத்து வைத்தாள் அவள். ஆத்தூரில் கத்தி முனையில் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பாவப்பட்ட செய்தி அவள் பார்வையில் பட்டுத் தொலைத்து, மறுபடி பய முறுத்தியது; குலை நடுங்கினாள். பத்திரிகையைப் பார்வைக்கு மறைவாகப் பரண்மீது வீசிவிட்டு நகர்ந்தாள்.

'ட்யூப்லைட்' அணைந்தது.

இப்போது நேரம்: பதினொன்று, நாற்பது.

உள்ளே:

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நடுவில் தாராளமாகக் கிடந்த இடைவெளியில் தாராளமாகப் பாயை விரித்தாள் பார்வதி.

திடீரென்று அலறல் ஒலி.

திரும்பவும் ஒளி திரும்பியது,

''நெஞ்சு வலி வந்திடுச்சு ; வலி தாள முடியல்லியே !... ஐயையோ ... ! கடவுளே !''

அப்பா துடிதுடிக்கிறார்.

பார்வதி பதை பதைத்தாள்.

விழிப்படைந்த சிவகாமி ; உயிரும் உடலும் பதறியவளாக அத்தானின் மெலிந்த நெஞ்சைத் தேய்த்து விட்டாள். ஊசலாடிய மாங்கல்யம், கண்ணீர்ச் சரம் தொடுத்தது. மூக்கை உறிஞ்சுக் கொண்டாள் ; "நெஞ்சு வலிக்கு மாத்திரை வச்சிருப்பியே, பாரு ?'' என்று ஆவலோடு கேட்டாள்.

இருக்கணும் !'' என்று கூறி எழுந்தாள் புதல்வி.

நோயின் உறவுமுறையிலும் கூட, அப்பா — அம்மாவுக்கிடையே ஏக ஒற்றுமை !

நெஞ்சுவலிக்கான மாத்திரைகள் இருந்த டப்பா காலியாக இருந்தது.

திரும்பிய பார்வதி, மாத்திரை தீர்ந்திடுச்சுப் போலே. நான் ஓடிப்போய் வாங்கிட்டு வந்திடுறேன் ; நீ அப்பாவை பத்திரமாய்ப் பார்த்துக்க, அம்மா'' என்று சொல்லி, துட்டு எடுத்துக் கொண்டு புறப்பட எத்தனம் செய்தாள்.

''துணைக்குத் தம்பியை வேணும்னா எழுப்பிட்டுப் போயேன் !''

''பாவம், தம்பி தூங்கட்டும் ; எனக்கு நான்தான் துணை இருப்பேனே ? ... நீ பைய எழுந்து வந்து நாதாங்கி போட்டுக்கிடு, அம்மா !'';

வீட்டிலிருந்து பார்வதி வெளியேறுகின்றாள்.

கூடவே, அவளிடமிருந்து பயமும் வெளியேறு கின்றது ! ...

# 10

ராஜ குமாரியைக் குறி வைத்து உஸ்மான் சாலை நெடுகிலும் எச்சரிக்கையுடன் ஜாக்கிரதையாக நடந்தாள் பார்வதி. பாசத்தின் கைப்பாவையாகிக்குமைந்து கொண்டிருந்தவளுக்குப் பனகல் பூங்கா ஒட்டி வந்து விட்டதை உணர்ந்ததும், ஆறுதல் அடைந்தாள்.

நட்ட நடுநிசியில் ஏதோ ஒரு பணக்காரச் சுவர்க்கடிகாரம் மட்டும் சிவராத்திரி நோன்பிருந்து, விழித்திருந்து, பன்னிரெண்டு முறை முறையாகவே மணி அடிக்கிறது

அவளை எதிர்த்துப் பாய்ந்து திரும்பி மடங்கி நூதனமான வெளி தேசத்துப் 'பிளஷர்' கார் ஒன்று, அவளை முன்னே மறித்துச் சரேலென்று நின்றது.

பார்வதி ஹெல்லோ !'' என்று கூவி, காரின் முன் ஆசனத்தில் இருந்த மின்னல் கொடியாள் ஒருத்தி ஜம்பமாக அழைத்தாள். ''க்வீன் மேரீஸிலே உன்னோடு பி. ஏ. படிச்ச அதே சாட்சாத் மாதங்கியே தான் நான் !'. என்றாள்.

தோழியைக் கூர்ந்து பார்த்ததும், ஓ ... அதே மாதங்கி தானா நீ ?'' என்று ஆனந்தப் பரவசம் தாங்காமல் கூவினாள். பார்வதி.

''கூடிய சீக்கிரத்திலே எனக்கு மாரேஜ் நடக்கப் போகுது நீதான் முன்னே நின்னு நடத்திவைக்கோணும்' பார்வதி !'

''அப்படியா ? ரொம்ப மகிழ்ச்சி !''

''மாப்பிள்ளை யார்னு கேட்க வில்லையே பாரு?''

''நீங்க...நீ சொன்னால்தானே?''

''மாப்பிள்ளை உனக்குத் தெரிஞ்சவர்தான்!''

''எனக்குத் தெரிஞ்சவரா? மாதங்கி, யாராம் அவர்?

''தெரிஞ்சவர் மாத்திரம் கிடையாது; ஒரு காலத்திலே உன்மேல் காதல் வசப்பட்டிருந்தவரும் கூட! — அவர் உன்னை உசுருக்கு உசிராவே காதலிச்சார்; அது சாமான்யப்பட்ட காதல் இல்லே! — முதல் காதலாக்கும் சரி; அந்த ஆளோட பேரைச் சொல் பார்க்கலாம்!''

''நான் அறியாமலே என்னை நேசிச்ச ஒருத்தரோட பேரை என்னாலே எப்படிச் சொல்ல முடியும், மாது?'' மனிதாபி மானத்தின் இரக்கம் அவள் குரளில் பேசியது,

''ஓஹோ! சரி; நானே சொல்லிட்றேன் ...! அவர்... அவர்தான் செந்தில் ... ஆமாம்; மிஸ்டர் செந்தில் நாதன் அவர்! — அவர் எனக்கு முறை மாப்பிள்ளை வேறே: சொந்த அத்தை மகன்! என்னை மாதிரி, அவரும் மேட்டுக்குடிப் புள்ளிதான்! அவருக்கும் சேலம்தான் சொந்த ஊர்!'' பெருந்தன்மையோடு சிரித்தாள் மாதங்கி.

இப்போது, அதிர்ச்சியோடு வேதனையையும் அனுபவிக்க நேர்ந்தது. இதயத்தில் தாரா நிழலாடுகிறாள்; கூடவே செந்திலின் அழகான முகமும் நிழற்படம் காட்டியது சில நாட்களுக்கு முன் இதே பூங்காவில் தாரா தன்னுடைய காதலின் சிக்கலைப் பற்றிச் சொல்லித் தன்னிடம் ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டுமென்று கோரினாள். இப்போது மாதங்கி .... பார்வதிக்கு

தாரா — செந்தில் சம்பந்தப்பட்ட காதல் சிக்கலில் அநாவசியமாகச் சிக்கிக் கொள்ள இஷ்டமில்லை. வெளிப் படையாக மறுத்து விட்டாள். அந்நேரத்தில் தான் அம்மாவுக்கு நெஞ்சு வலியென்று ராமையாப் பயல் ஓடோடி வந்தான்!— ஓ... அப்பாவுக்கு நெஞ்சு வலி வந்திருக்கிறதே? — சரி, சரி; இனியும் தாமதித்தால் ஆபத்துதான்! விவரத்தைத் தோழியிடம் சொல்லிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள்.

சாக்குமூட்டை லாரி ஒன்று போதையுடன் தள் ளாடித் தள்ளாடிப் பறந்தது. என்னென்ன கள்ளக் கடத்தல் சாமான்கள் அங்கே வனவாசம் இருந்தனவோ?

"பாரு! நீ நடந்து போவதா?—கூடாது; கூடாது; வண்டியிலே பின்னாடி ஏறிக்கொள்; உன்னை சந்திச்சுப் பேசணும்னு ரொம்ப நாளாகத் திட்டம் போட்டிருந் தேன்; உன்னையும் எங்க சோஷல் கிளப்பிலே மெம்பர் ஆக்கப்போறேன்! —நீ உன்னோட துணிச்சலை ஒரு பெர் சண்ட் அளவுக்கு முதலீடு செஞ்சால் போதும்; உனக்கு தொண்ணூற்றி ஒன்பது பர்சண்டுக்கு ஐசுவர்யம் வட்டி யும் முதலுமாக வந்து சேரும்! அதைப்பற்றி எங்க பங்களாவிலே அப்புறம் சொல்றேன்! — ம்... ஏறு! டைம் ஆகுது ப்ளீஸ்!"

ரம்பையோ, இல்லை திலோத்தமையோ, பின் கதவைத் திறந்து விட்டாள்.

பார்வதி ஏனோ சற்றே தயங்கினாள் மறுமுறையும் மாதங்கியைக் கூர்மையாகப் பார்த்தாள்; பார்வை யிட்டாள்! — பூலோக ரம்பையாகப் பொலிந்த மாதங்கியின் விழிகளில் ஏதோ ஒரு சாகசமும் விரயமும் ஊடாடிக் கிடப்பதை இப்போது அவளால் தெளி வாகவே உணர முடிந்தது. மாதங்கியின் விழிகள் சிவப் பாகப் பளிச்சிட்டன. அவை கண்கள்தாமா?... இல்லை

சிவப்பு விளக்குகளா ? இவள் ... இவள் கன்னி கழியாப் பெண்ணா ? ஊஹூம் !...

யோசிக்காமல், ஜல்திபண்ணி ஏறு, பாரு ! உன் னோட மாமூலான உஷார்த்தனம் இப்பகூடவா தேவைப்படும் ?'' என்று செல்லமான அன்போடு மாதங்கி சிரித்தபடி பார்வதியைத் தூண்டினாள்.

பார்வதி காரில் ஏறியப்பின், ஆசனத்தில் சுரத்து இல்லாமல் அமரப்போனாள்.

அப்போது—

காலடியில் கிடந்த யாரோ முரட்டு ஆசாமி ஒருவன் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து கீழே ஒதுக்கமாக உட்காரலானான்

திறந்திருந்த கதவின் வழியாக, வேர்க்க விறுவிறுக்க வெளியேறி ஈரத் தரையில் பாய்ந்து வழுக்கி விழாமல் நின்றாள் பார்வதி ! — எரிமலையாகக் கனன்ற கண் களால் மாதங்கியை எரித்துப் பிடிசாம்பலாக்கிவிடத் தீர்மானித்தவள் போன்று, அவளை ஊடுருவி நோக்கி னாள்.

அடுத்த இமைப்பொழுதில் மாதங்கி கலவரத்துடன் ஓடி வந்து பார்வதியின் கரங்களைப் பற்றினாள் ''காரிலே பின்னாடி உட்கார்ந்திருக்கிறவர் பெரிய சமூக சேவகர். ஸ்ரீமான் மாத்ருபூதம்னா எங்க இந்திரா நகரிலே சகலத்தனை பேருக்கும் தெரியும். திடீர்னு ஜூரம் வந்திட்டுது; அதுதான் காரிலே கீழே கிடந் திருக்கார் ! உங்க 'பாஸ்' திருவாளர் கனகசபை செட்டியாரை எங்க கிளப்பிலேருந்து வழியனுப்பிவச் சிட்டுத்தான் இங்கே ஒரு அவசரச் சோலியாய் வந்துக் கினு இருந்தோம்; உன் முதலாளியைக் கேள்; எங்களைப் பற்றிய அருமை பெருமைகளைக் கதை கதையாகச் சொல்லுவார் ! — சரி, சரி ! — முன் சீட்டிலே

நீ ஏறிக்க உங்கப்பாவுக்குத் தேவையான மருந்துகளை நானே வாங்கித்தந்து, உன்னை உன் வீட்டிலே ட்ராப் செஞ்சிட்றேன் என்று மன்றாடினாள்.

ஓடும் பாம்பை மிதிக்கின்ற பருவத்தில் நின்ற இளைஞன் ஒருவன் நாலு தப்படி தள்ளி நின்று, எல்லாக் கூத்தையும் நாடகரசனையோடு ரசித்துக் கொண்டிருந்தான். நாகரிக மோகத்துக்குப் பிடி கொடுக்காத எளிமைக் கோலம்.

அப்பாவின் நெஞ்சுவலி பிடரியைப் பிடித்துத் தள்ளவே பார்வதி பதை பதைப்போடு நடந்தாள்.

பார்வதி...என்று பலத்தகுரலில் கூவியபடி ஒரே ஓட்டமாக ஓடி வந்த மாதங்கி பலமான புன்னகையோடு பார்வதியின் நடுங்கிய கைகளைப் பிடித்துக் கொண்டு,

"உன்னோட வீம்பு எனக்குப் புதுசா ?" என்று கூறிச் செல்ல கோபம் சிந்தினாள்.

பார்வதி திமிறினாள்.

மாதங்கி விட்டுவிடுவாளா ?

...ரத்தச்சிகப்பில் பயமுறுத்திய மாதங்கியின் நவீன பாணிக் காரின் எண்களில் திடீரென்று மின்னல் வெளிச்சம் வெட்டிப் பாய்ந்தது.

சங்கத்தமிழ் விளம்பரம் பேசுகிறது அதே நேரத்தில் காவல் துறை வாகனம் ஒன்று சீறிப்பாய்ந்து அங்கே திரும்பிக் கொண்டிருந்தது.

மறுவினாடி, பார்வதியின் கைகளை உதறிவிட்டுத் தன்னுடைய காரை நோக்கிப் பாய்ந்தாள் மாதங்கி.

அந்த இளைஞன் தவித்தான்.

பார்வதி ஒதுங்கினாள்.

திரும்பிக் கொண்டிருந்த காவல் வாகனம் ஒரு வழியாக அங்கே வந்து நின்றது ! "அடேடே !" ஏமாற்றத்தில் விளைந்த ஆத்திரத்தில் அது பாயும் புலி ஆனது.

கண்கொட்டும் கணத்தில், மாதங்கி எங்கே மறைந்தாள் ?...ஏன் பிரிந்தாள் ?... எப்படிப் பறந்தாள் ?...

அரையும் குறையுமாகத் தொலைவிலிருந்து பார்க்க நேர்ந்த நாடகம், கதையும் புரியாமல் காரணமும் விளங்காமல் அரைகுறையாகவே முடிந்து விட்டதால் விளைந்திட்ட ஏமாற்றத்தைப் பார்வதியால் அப்போது பொறுமையாக ரசிக்கவும் முடியாமல் போய்விட்டது.

# 11

பாண்டி பஜார்.

பெருங்காய டப்பாவுக்கு உரியதான மதிப்பு மரியாதை எந்நேரத்திலும் உண்டு.

என்னவோ மணியொலி.

இடதுபுறம் ஓரம் விலகுகிறாள் குமரிப்பெண் பின்புறம் திரும்பிப் பார்க்கிறாள்.

"இருபத்திநாலு மணி நேர மருந்து ஷாப்புக்குத் தானே போகணுங்க? வண்டிலே ஏறிக்கிடுங்கம்மா!"

அதே இளவட்டம் கேட்டான்; சொன்னான். அவன் ரிக்ஷாக்காரன்?

"நீ யாராம்?"

"நான் பொதுவா ஒரு இந்தியன்; குறிப்பா, ஒரு தமிழனுங்க!"

அர்த்தமுள்ள பார்வையால் அந்த வாலிபனை அளந்தாள் அவள்; சோகமும் சுகமுமாக முறுவல் பூத்தாள் இவளையும் தமிழ்ச் சினிமா வெகுவாகத்தான் பாதித்திருக்கிறது. பேசாமல் நடையைத் தொடர்ந்தாள் தலைவலியாய்த் திருகுவலியா, என்ன?

சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளிக்கொண்டே அவளுக்குப் பின்னால் ஓடிவந்தான் அவன்.

நின்றாள்.

நின்றது.

''என் வழி எனக்குத் தெரியும். என் பின்னாலே வராமல் நீ மரியாதையாகப் போயிடு; யாரானும் பார்த்தால், ஏதானும் நினைச்சுப்பாங்க அசிங்கம் !'' என்று கண்டித்தாள் பார்வதி.

''இதிலே என்னாங்க அசிங்கம் இருக்க முடியும்? ஊரும் உலகமும் கெட்டுக் கிடக்குது; வேளை கெட்ட வேளையிலே, வயசுப் பொண்ணு நீங்க ஒண்டியாப் போறீங்களேன்னு இரக்கப்பட்டுச் சொன்னேன் வண்டிலே ஏறிக் குந்துங்க; ஒரு நொடியிலே உங்களை உங்க வீட்டண்டை கொண்டு போய் விட்டுப்புடுவேனுங்க ஊம், ஏறிக்கங்க !''

கையெடுத்துக் கும்பிடுகிறான்... அந்த இளைஞன். அவன் ரிக்ஷாவாலாதானா? சத்தியமாகவா? ...

கண்கள் கலங்க, அவனை ஆழமாகப் பார்த்தாள் பார்வதி. 'என் பேரிலே இவ்வளவு தூரத்துக்குக் கவலையும் அக்கறையும் வச்சிருக்கிற நீ யார்?'' என்று கேள்வி கேட்டாள்.

',நானும்' உங்களுக்கு ஒரு தம்பிதான்! பேரு முருகையன்!''

''அப்படியா? நான் உங்களை நம்பலாமா?''

''நான்' உங்களை நம்புறப்ப, நீங்க என்னை நம்பப்புடாதுங்களா, அக்கா?''

மேனி புல்லரித்தது. ''வாஸ்தவந்தான்!'' என்றாள் பார்வதி; குரல் கம்மியிருந்தது.

''அந்தக் கார் மோகினி, இன்னிக்கு ஒங்க பேரிலே குறிவச்சிருக்கா போலே — தனியாப் போனா, மறுபடியும் குறுக்கு மறிச்சு உங்களைத் தூக்கிப் போட்டுக்கினு

போகாமல் ராத்திரிக்குத் தூங்கவே மாட்டாளுங்க, அக்கா !''

''ஏம்பபா, நீ யாரைச் சொல்றே? சமூகச் சேவகி மாதங்கியையா ?''

''சமூக சேவகியா அவள்? தூ ... ! அவள் ஒரு சமூக வேசி ... பச்சையாய்ச் சொன்னா, அவள் ஒரு பச்சைத் தேவடியாள் !''

''நிஜமாத்தான் சொல்லுறீயா ?''

''சத்தியமாவும் சொல்றேனுங்க ... ஏங்க ஏழைன்னா அவனுக்கும் சத்தியம் பேசத் தெரியாதுங்களா ? தெரிய வேண்டாங்களா ?''

பார்வதி மெய்சிலிர்த்தாள்.

ஆனால் ...

'மெய்' சிலிர்த்து விடவில்லை.

அப்பா இந்நேரம் நெஞ்சு வலியால் எப்படி எப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ ? தெய்வமே ! பார்வதி உருகித் தவித்தாள்; தவித்து உருகினாள்; ... ''ம் புறப்படுப்பா !'' என்று உத்தரவு பிறப்பித்தாள்

தற்போது :

பார்வதி விழிப்புணர்வுடன் ஜாக்கிரதையாகவே அமர்ந்திருந்தாள். அந்த எச்சரிக்கை உணர்வின் உறுத்தல் தன்னை என்னவோ செய்தது போலவும் அவள் உணர்ந்தாள் ! பாசத்தைப் போன்றே நட்பும் எட்டும் தொலைவிலேயே இருந்தால் என்னவாம் ?

மணிச் சத்தம் ஒரேயொரு தரம் கேட்டது.

அதற்குள்ளாகவா மணி ஒன்று ஆகியிருக்கும் இப்போது மணி பன்னிரெண்டரையாக இருக்கக் கூடாதா? 'அப்பா!' — பார்வதியின் பாசவிம்மல் உள் வட்டத்தில் சுழிக்கிறது.

தம்பி முருகையன் வழி நெடுகிலும் கதை கதையாகச் சொல்லிக் கொண்டே வந்தான். படக்கதையா? —தமிழ்ப் படக் கதையா? ஊகூம்!—எல்லாம் அந்தப் பூலோகரம்பை மாதங்கியின் கதைதான்!

'அடி, பாவி!'— பற்களைக் கடித்துக் கொண்டேயிருந் தாள் பார்வதி.

அந்தக் காவல் துறை வாகனம் மறுபடி உஸ்மான் சாலையிலும் எதிர்ப்பட்டது

சற்றுமுன் மாதங்கி நின்ற இடத்தை கோட்டை விட்டு விட்டு, இப்போது அவள் நிற்காத இடங்களைத் தேடிப் பார்த்துத் தேடுகிறதோ? பார்வதிக்குச் சமூகப் பொறுப்பு கொண்ட ஆத்திரம் பற்றி எரிந்தது!

சபாஷ்!...

சைக்கிள் ரிக்ஷா மடங்கியது.

திரும்பு முனையில்—

சாராயம், பாட்டுப் படித்துக் கொண்டிருந்தது காலத்தைப் பற்றி அதற்கு என்ன கவலை?

மகாலட்சுமித் தெரு வந்தது.

வீடும் வந்தது.

மருந்துப் பொட்டணமும் கையுமாக இறங்கினாள் பார்வதி பாசத்தின் கட்டுக் கடங்காத துடிப்பில் அவள் மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

வெளிக் கதவை திறந்து வைத்துக் கொண்டு, விளக்கின் அடியில் தூணில் சாய்ந்தவாறு நின்றுகொண்டிருந்தார் பெரியவர் ஆத்மநாதன்.

பார்வதிக்குப் போன உயிர் திரும்பியது!—அப்பாவுக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை!—தெய்வமே.

''அக்கா நான் போய் வரட்டுமா ?''

—ரிக்ஷா போனது.

''ஏதாச்சும் சாப்பிட்டுட்டுப் போ. ராத்திரியே மோர் காணல்லே. இரு: பானைத் தண்ணி ஒரு குவளை கொண்டு வர்றேன்!''

காக்குருவி எங்கேயோ, ஏனோ கத்திக் கொண்டிருக்கிறது.

''அக்கா, அந்தக் கொள்ளிவாய்ப் பிசாசு விஷயத்திலே நீங்க எப்பவும் உஷாராகவே இருக்க வேணும்!''

பாசப் பிரிவினை தற்காலிகம்!...

# 12

ஞாலம் போற்றிடும் ஞாயிற்றுக்கிழமை !

பராக்...பராக்...பராக் !

கதிர் முத்தங்கள் நிலைப்படியில் முத்தம் பதிக்கின்றன இப்பொழுது.

பார்வதிக்குக் கொட்டாவி கொட்டாவியாக வருகிறது அரை நாழிகை படுத்து எழுந்தால் உடம்பு கலகலப்பாக ஆகிவிடும். நேரம் எங்கே இருக்கிறது ?

அடுப்படியில் ஓடியாடி வாய்க்கு ருசியாகத் தோசை சுட்டுப் போட்டு விட்டாள் அம்மா. அவள் உடம்புக்கு இதுவே பத்திரிகையிலே போடக்கூடிய பெரிய காரியம். திரும்பவும் ஒரு மூச்சு உறக்கத்தின் காலடியில் சரணாகதி அடைந்தாள்.

அப்பா எங்கே போய் விட்டார் ? — எங்கேயும் சொல் லாமல் கொள்ளாமல் போய்விட மாட்டார். பக்கத்து வீட்டுப் பாப்பாவோடு கொஞ்சிக் குலவிக் கொண்டிருந் தார்.

பேசும் பொற் சித்திரத்தைப் பேசாத சித்திரமாக்கி ரசிக்கவும் பார்வதி தவறி விடவில்லை ; ஏக்கப் பெருமூச்சு கீறிப்பாயவும் தவறவில்லை.

பார்வதி பி.ஏ., பக்கத்துக்குப் பக்கம் இலக்கிய விருந்து படைத்தாள்.

ஒரு நாடகம்......

"உங்களைத் தானே! பாருக்குட்டிக்கு நாம சீக்கிரமா கல்யாணத்தை முடிச்சி வச்சிட்டோம்னா, நாம ரெண்டு பேரும் சீக்கிரமா உடம்பு தேறி, எப்பவும் போல புதுத் தெம்போட நடமாடத் தொடங்கிடலாமுங்க!" என்று அம்மாக்காரி நயமாகப் பிரசினையை முன்மொழிய, "நீ சொல்றது சரியான நியாயந்தான்; தாளதசை கூடி வந்தாச்சின்னா நம்ம அருமைப் பாருக்குட்டியோட கல்யாணம் காட்சியும் பெருமையோடே கைகூட நடந்திடும். நம்ம பொண்ணை மாலையும் கழுத்துமாகப் பார்த்தால்தான். உண்மையிலேயே நீயும் நானும் தெய்வக் காட்சியாகவும் கொடுத்து வச்சவங்களாகவும் ஆவோம்! என்று பிரச்னைக்கு ஆதரவாக அப்பன்காரர் வழிமொழிய கடந்த சிலபல நாட்களாகவே உச்சக்கட்டக் காட்சியாக நடந்து வரும் 'பார்வதி கல்யாணம்' நாடகம் விடிய காலையிலே கூட நடந்தது! ...

கோடை வானம், சொல்லாமல் கொள்ளாமல் மப்பும் மந்தாரமுமாக ஆயிற்று.

வெட்டிப் பாய்ந்த கொடி மின்னல் அக்கணத்தில், குமாரி பார்வதியின் இளைய மனத்தையும், முதிர்ந்த காட்சியையும் சுற்றி வளைத்துக் கீறிப் பாயவே, அவள் பிரமை தட்டி எழுந்தாள்!— ஒரு சங்கதி எனக்கு இப்ப நல்லாவே புரிஞ்சிடுச்சு; அம்மாவுக்கும் சரி, அப்பாவுக்கும் சரி. இப்போதுள்ள தலைவலிப் பிரச்னையே, ஊகூம் நெஞ்சுவலிப் பிரச்னையே நான்தான்! ... இந்த அளவுக்கு நான் பாவி ஆகிட்டேன்; பாவியிலேயும் பாவி, கொடும்பாவி ஆகிப்பிட்டேன். இப்படிப்பட்ட பழி பாவத்தை நான் இந்த ஜென்மத்திலேயே எப்படித்தான் தீர்த்து வச்சு, அன்னைப் பெற்றெடுத்தவங்களுக்கு எப்படித்தான் மங்களகரமான மனச்சாந்தியைத் தேடிக் கொடுக்கப் போறேனோ? அந்தத் துப்பு எல்லாம்வல்ல ஆண்டவனுக்குத்தான் அர்ப்பணம்!'

மழைக்கும் ஆசாபாசங்கள் உண்டு; கொட்டித் தீர்க்கிறது.

பார்வதி நெஞ்சின் நிரடல் தீரக் கண்களை மூடிக் கொண்டாள் — தற்காலிகமாகத்தான். நினைவில் பேயாட்டம் போடத் தொடங்குகிறாள், புதிய பூலோகத் தின் புதிய ரம்பை மாதங்கி! ... சே! இவள் மாதிரியான சமூகப் புல்லுருவியெல்லாம் ஏன்தான் உயிரோடு இருக்கு துங்களோ? சே!... கண்களைத் திறந்தாள். செந்திலைப் பற்றி மாதங்கி பேசும்போது, அவர் உன்னை உசிருக்கு உசிராகவே காதலிச்சார்; அது சாமானியப்பட்ட காதல் இல்லை முதல் காதலாக்கும்!' என்று குறிப்பிட்டது நெஞ்சடியில் நெருஞ்சி முள்ளாகத் தைத்திருக்க வேண்டும். உள்ளே கூடத்துக்கு ஓடித் திரும்பினாள்.

எதிர் வரிசையில் 'ஜெய் வேதாளம்' பங்களாவில் காலத்தின் சத்தம் பத்துமுறை கேட்டது.

அதுவரையிலும் அவளுக்கு வந்திருந்த காதற் கடிதங்கள் அத்தனையையும் ஒரே குவியலாகக் கொட்டிய பின், அவை ஒவ்வொன்றையும் இப்போது தனித்தனியே பிரித்து வைத்துக்கொண்டு அனுசரணை யோடும் அனுதாபத்தோடும் மறுபரிசீலனை செய்யத் தொடங்கினாள்.

புத்தக அலமாரியில்

இடைச் செருக்கலாகத் தென்பட்டது. புதிய கடிதம் ஒன்று, உரிய நேரத்தில் வந்த அக்கடிதத்தை அப்பா உரிய நேரத்தில் என்னிடம் சேர்ப்பிக்க மறந்து, கடிதங் களோடு கடிதமாகச் செருகி வைத்திருக்க வேண்டும். அந்தக்கடிதத்தின் அடியிலே தென்பட்ட 'பி. செந்தில் நாதன்' என்கிற பெயரைப் படித்தவுடன், இனம் விளங்காத தவிப்பின் உறுத்தல் அவளை என்னவோ செய்திருக்கவும் வேண்டும்.

அந்தக் கடிதம் மூன்றே மூன்று வரிகளிலே இதய ஒலியை எதிரொலித்தது.

**“அன்பு பார்வதி !**
**நான் உங்கள் மீது கொண்ட முதல் காதலே**
**கடைசிக் காதலும் ஆகும். நல்ல வாக்கு**
**தாருங்கள். இந்த அன்புச் செந்திலை இரண்டா**
**வது தேவதாசாக ஆக்கிவிட மாட்டீர்களே ?**

**— பி. செந்தில்நாதன்**

ஊரைப் பார்த்தாள்.

மாம்பழ வாசனையாக சேலம் மணத்தது.

தேதியைப் பார்வையிட்டாள்.

எப்போதோ வந்த கடிதம் அது.

தொண்டைக்குழியிலே வெட்டி வேரின் வாசம் மறையாமல் இருந்தது.

# 13

மணியும் கையுமாக வந்தான் ராமையா,

இந்த மணிக்குக் கோயில் மணியின் அந்தஸ்து இங்கே எப்போதுமே காத்திருந்தது, அவர்களுக்கு வேண்டப்பட்ட பிள்ளை.

சமுதாயத்தின் தீவினைக் கலப்படம் துளியும் இல்லாத துல்லியமான அன்பைப் பார்வதி மோப்பம் பிடித்திருக்க வேண்டும்; நன்றியுடன் புன்னகை செய்து மணியை அன்போடு வரவேற்றாள்; நலன் விசாரித்தாள். "நீங்க எழுதின 'கண்ணீர் விற்கும் ஜாதி' நாடகத்தை எப்போது உங்க சிநேகிதர்களோட அரங்கேற்றம் செய்யப் போறீங்க, தம்பி?" என்று கேள்வி கேட்டவள், 'வருகிற ஜூன் முதல் தேதியன்னிக்கு கட்டாயம் ஸ்டேஜ் பண்ணிடுவோம்" என்ற பதிலைக் கேட்டதும் நிம்மதி அடைந்தாள்.

நீர்மோர் பருகினான் மணி.

"அப்பா நல்லா இருக்காங்களா?"

"இருக்காங்க; இருக்காங்க!"

"நான் பதிப்பகத்துக்கு வேலைக்கு வந்த புதுசிலே ஒரேயொரு வாட்டிதான் அப்பாவை அங்கே சந்திச்சேன்; ஆனாலும், அவங்களோட எழுத்துக்களிலே பெரியவனை அடிக்கடி சந்திச்சுக்கிணுதான் இருக்கேன். மனித சமுதாயத்தை சோதிச்சுக்கிட்டு இருக்கிற புல்லுருவிங் களாட்டம், எழுத்துச் சமுதாயத்தைப் பாழ்படுத்தி இன்னமும்கூட கெடுத்துக்கிட்டு இருக்கக்கூடிய எழுத்தாளர் எழுத்தாளிங்க ஒரு அஞ்சாறு பேர்வழிங்களைப்படுத்தி

முந்தி ஒரு பத்திரிகையிலே அப்பா தொடர்ச்சியாக எழுதின இலக்கிய விமர்சனத்தை என்னாலே எப்பவுமே மறக்க முடியதுங்க, தம்பி. அதையெல்லாம் புஸ்தகமாகப் போட்டால், இன்றையக் காலக் கட்டத்திலே தமிழிலே படைப்பிலக்கியம் எங்கே போய்க்கிட்டு இருந்திச்சு என்கிறதை நாளைய இளைய தலைமுறை புரிஞ்சுக் கிடுறத்துக்கு ரொம்ப ஒத்தாசையாக இருக்குமே?''

''வாஸ்தவந்தாங்க, அக்கா அந்த விமர்சனத்தை இப்போ இருக்கிற பதிப்பகத்துக் காரங்க யாரும் துணிஞ்சு வெளியிட மணந்துணிய மாட்டாங்க! அதனாலே, அதை நாங்களே வெளியிடப் போறோம்!''

பார்வதி ஆத்மார்த்தமாக மகிழ்ந்தாள். ''உங்க ஊர்ப் பக்கத்திலே காப்பித்தூள் வியாபாரத்திலே கலப் படம் செஞ்ச சமூகத்தை ஏமாற்றிக்கிட்டிருக்கு இரண் டொரு திடீர்ப் பணக்காரங்க இப்ப திடீர்க் குற்றவாளி களாகிக் கம்பி எண்ணிக்கிணு இருக்கிற நடப்பைக் காலம்பற பேப்பரிலே போட்டிருந்திச்சே பார்த்திருப் பீங்களே, தம்பி?'' என்று கேட்டாள்.

'ஊம்' என்று தலையை ஆட்டினான். மணி. ''சமுதாயத்துக்கு மத்தியிலே பெரிய மனுஷங்க என்கிற போலி வேஷத்திலே திரை மறைவிலே இருந்துக்கிட்டுச் சொந்த ஆதாயத்துக்காகச் சமூகக் குற்றங்களைச் செய்யத் துணிகிற சமுதாயத் துரோகிங்களோட முடிவு இப்படித் தான் ஆகுமுங்க; இப்படித்தான் ஆகவும் வேணுமுங்க, அக்காள்!'' என்றான். ''சமூகத்தை உருவாக்கிற தனிமனி தர்கள்'' செய்கிற தப்புக்கெல்லாம் மனிதர்களை உருவாக் கிற சமூகம்வீணாகப் பழிபாவத்தைச் சுமக்கிறது தெய்வத் துக்கே அடுக்காது என்கிற சமூகப் பிரக்ஞை சமுதாயத் தின் மத்தியிலேயும் மக்கள் மத்தியிலேயும் அப்பப்ப அபூர்வமாகி விழிப்படைஞ்சுக்கிட்டு வருவது வரவேற்கத் தக்க காரியம் தானுங்களே?'' என்று முடித்தான்.

''நூத்திலே ஒரு பேச்சு. தம்பி: சத்தியமும் அதுதான்: அதுவே தருமமாகவும் இருக்க வேணும்!''

''அதிலே இன்னொரு சங்கதியும் உண்டுங்க. அதாவது. சமூகத் துரோகிங்களை முகமூடிகளைக் கிழிச்சு முச்சந்தியிலே நிறுத்திறதிலே சட்டம் இயன்றவரை ஒத்துழைக்கிற மாதிரி, சமுதாயத்தோட நேர்மையான வளர்ச்சியிலேயும் வாழ்விலேயும் உண்மையான ஆர்வமும் அக்கறையும் கொண்ட சீர்த்திருத்தவாதிகளும் முழுமூச்சோட ஒத்துழைப்புத் தரவேணுமுங்க! அப்பத்தான் சமுதாயத்தோட நல்ல ஆரோக்கியம் பேணிப் பாதுகாக்கப் படவும் முடியுமுங்க, அக்கா!''

''பேஷ், பேஷ்!'' என்று பாராட்டினாள் பார்வதி.

இனி கொஞ்ச நாழிகைக்கு அவளுக்கு அடுப்படியும் அடுப்புப் புகையும்தான் சதம்.

பார்வதி உணர்ச்சி வசப்படலானாள்; தூயநெஞ்சு தூய்மையான விழிகளை ஊடுறவிப் பாயவே, சுடுநீர் தெறித்தது. தலையை உயர்த்தினாள்; நேர்கொண்ட பார்வையால் தாய் தந்தையரை நோக்கினாள்: ''இஷ்டப் பிரகாரமே நடந்துக்கிடுவேன், அம்மா !... நீங்களும் உங்க மகளை நம்பவேணும்' அப்பா!'' — தன்னுடைய நிதி நிலைக்கு ஒருசமூக அந்தஸ்தை ஏற்படுத்தி சாட்சி சொன்ன தங்கமான கழுத்துச் சங்கிலியை வருடிய வண்ணம், வண்ணம் மிகுந்த உதடுகளில் முறுவலைச் சிந்திப் பேசினாள் பார்வதி.

கூடத்தில் ஒளி வெள்ளம்.

முகூர்த்த நேரத்தில் மணவறையிலே போய் அமர்ந்து கொள்ளப் போகும் திருமணக் கன்னியாகவே வந்தாள். பார்வதி! கைகூப்பினாள் ; விழிகளை நிமிர்த்தி விட்டாள்

பார்வதி குடும்பப் பாங்கோடு நமஸ்காரம் செய்ததை மாப்பிள்ளையின் அருகதையைப்பெற்றிருந்த நாராயணன் அங்கீரித்து ஏற்றுக் கொண்டான்! அதற்கு அதிகாரபூர்வ மான அடையாளமாக ஒரு புன்சிரிப்பையும் வெளியிட்டான்.

சபையில் அதீதரமான பரபரப்புடன் கூடிய செயற்கை யானதோர் அரைக்கண அமைதி நிலவிக் கலைகிறது.

எதிர்ப்புறத்தில் சம்பந்தித் தரப்பிலிருந்து மாப்பிள்ளை இளைஞன் தனக்குப் பெண் பிடித்து விட்டதாக நெஞ்சு நிரம்பின நிறைவோடு "ஓ.கே" சொல்லி பச்சைக் கொடி காண்பித்தான். வறுமைக் கோடு பற்றி நினைத்துக்கூட பார்க்காத அளவிற்கு நடுத்தர வர்க்கத்தில் சீரான செழிப்பு மண்டிக் கிடந்த அவன் வதனத்தில் ஆனந்தமான கனவுகள் ஆர்ப்பரித்தன. அக்கணத்திலேயே அழகின் உச்சியில் நின்ற அபலை பார்வதியை மனைவியாக ஆக்கிக் கொள்ளும் பாக்கியத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டு விட்ட கனவுகளில் அவன் மயங்கி மிதந்து கொண்டிருக்கலாம்!

மாப்பிள்ளை வடிவத்தில் வந்து தெய்வமே நல்ல தீர்ப்பை சொல்லியிருப்பதாக நினைத்துப் பார்வதியின் தாயும் தந்தையும் ஜோடி சேர்ந்து ஆறுதலையும் அமைதியையும் அனுபவித்தார்கள்.

பார்வதியோ தனக்குச் செல்வத்தைக் கொடுக்கத் தெரியாத கடவுள் அற்புதமான அழகை வாரி வழங்கத் துணிந்த கருணையை எண்ணி மெய்மறந்தவளாக செருக்கோடு நின்றாள்.

"பெண்ணோட நல்ல முடிவும் தெரிஞ்சாச்சின்னா நாளைக்கே ஹேமமாலினியிலே கெட்டி மேளம் கொட்டிப் புடலாம்!"

''அப்பா என்று விளித்துத் தந்தையை அழைத்தாள்; ''மாப்பிள்ளை ஸாரோடே பெர்சனலா அஞ்சே அஞ்சு நிமிஷம் பேசுறதுக்குச் சந்தர்ப்பம் கிடைச்சா, நானும் என் கருத்தைத் தெரியப்படுத்த வாய்ப்பாகவும் வசதியாக வும் இருக்கும்!'' என்றாள் பார்வதி.

இப்பொழுது :

மணமகன் நிலையில் நாராயணும், மணமகள் வடிவில் பார்வதியும் தாழ்வாரத்தில் ஒதுங்கினார்கள்.

''பார்வதி, அபாரமான உன் அழகை உன்னோட போட்டோவிலே கண்டதுமே, உன்மேலே காதல் வசப் பட்டுப் போயிட்டேன் நான். அதாலேதான், உன் குடும்பத் தோட கஷ்டமான நிலைமைக்காக மனசு இரக்கப்பட்டு, வரதட்சணை என்கிற மாமூல் பேச்சைத் தப்பித் தவறியும் எடுக்கப்படாதின்னு அப்பாவுக்குச் சட்டம் போட்டுட்டு, உன்னையே கட்டிக்கிடவும் முன் வந்திட்டேனாக்கும்!'' என்று மார் தட்டினான் நாராயணன். பார்வதியை விழுங்கி விடுபவனைப் போன்று வெறியோடு பார்க்கவும் தவறவில்லை அவன்.

அப்படீங்களா? உங்க இரக்கமே, இரக்கம்!... உங்க ளோட சுயநலக்கலப்பில்லாத இரக்கப்புத்தியை அட்லீஸ்ட் பரமபிதாவேனும் வாழ்த்தாமல் இருக்க மாட்டார்!'' என்று புகழ்மாலை சூட்டினாள் பார்வதி. தொடர்ந்து, 'அது போகட்டும்; காதல்னா என்னங்க?'' என்று வேறு கேட்டு வைத்தாள்.

''காதல்னா... காதல்தான்!... இது கூடவா உனக்குத் தெரியாது?''

தெரியாமல்தானே கேட்டேன்; அதுதான் காதல்னா காதல்னு பிரமாதமாய் விளக்கம் கொடுத்திட்டீங்களே,

மிஸ்டர் நாராயண் ! ஒரு சின்ன வேண்டுகோள். ஏக வசனத்திலே பேசாமல், கொஞ்சம் மரியாதையாகப் பேசப் பழகிக்கிட்டா. உங்களுக்கு நல்லது !''

''ஆகட்டுங்க ; இது சரி ; என்னைப் பத்தின உங்க தீர்ப்பைச் சொல்லவே இல்லையே பார்வதி ?''

சொல்லாமல் இருப்பேனா ? நாளைக்கே சொல்லி அனுப்பிட மாட்டேனா, நாராயண் ஸாரே ?''

''ஒ.கே !....''

அப்போது, அவளால் வாய் விட்டுத்தான் சிரிக்க முடிந்தது !

# 14

**மௌ**ன நாடகத்தை வழக்கமாகப் பார்வதி விரும்புவதில்லை ; இது அவள் பழக்கம் ; இயல்பு. அவளுக்கென்று ஒரு மனம் ; தனி மனம் !

இரவுச் சாப்பாடு அப்படித்தான் ஆரம்பித்தது நடந்தது ; முடிந்தது. ஒரே மௌளம்.

சிவகாமி 'லொக், லொக்' கென்று இருமியபடி முன்னே நின்று, பின்னே அமர்ந்திருந்த ஆருயிர்க் கணவனுக்கும் அன்பு மகனுக்கும் உணவு படைத்தாள். பிறகு அவளும் உணவு கொண்டாள்.

ஆகவே, பார்வதி தானாகவும் தனியாகவும் சாப்பிட வேண்டியவள் ஆனாள் ; மாலையில் எதிர்பாராமல் ஏற்பட்டுத் தொலைத்த 'டென்ஷன்' அவளுடைய உள்ளத்தை மட்டுமல்லாமல், உடலையும் பாதித்திருந்த தால், அவளுக்கு உணவு வேண்டவில்லை. நிஜ வாழ்க்கை யில், நிஜமான மனிதர்களைச் சந்திப்பதே அபூர்வமாகி விடுகிறதே ?

படுக்கைகள் தயார் நிலையில் இருந்தன.

அப்பாவையும் அம்மாவையும் விளித்தாள் பார்வதி.

அவர்களோ விழித்தனர்,

பார்வதி சொன்னாள் :

'நானே கனவிலேகூட நினைச்சுப் பார்த்திராத வகை யிலே சாயரட்சை விரும்பாத சம்பவம் விரும்பாத முறை யிலே, முறை தப்பி நடந்து போச்சு, இது நான் எந்த

வகையிலேயும் காரணம் ஆக முடியாதுங்க. எல்லாத்துக்குமே மாப்பிள்ளையாகி மாயமாய் வந்த மிஸ்டர் நாராயணன் தான் காரணம் :... அன்று இரவு பார்வதி—அப்பா அம்மாவை அழைத்தாள், சொன்னாள்: ''வெறும் வியாபார நோக்கமும் மோக வெறியும் கொண்டு என்னைப் பெண் பார்க்க வந்தவரோட மனிதத்தன்மை தடம் புரண்ட ஈனப் புத்தியை அவரோட வாய்ப்பேச்சே அம்பலப் படுத்திடுச்சு. வாழ்ந்து கெட்ட நம்ம குடும்பத்தோட மூன்றாம் பேருக்குத் தெரிஞ்சிராத கஷ்ட நஷ்டங்களையெல்லாம் ஈடு வச்சுக்கிட்டு இரக்கத்தின் பேரைக் காட்டி, 'வரதட்சணை வேண்டாம்' அப்படின்னு அப்போதைக்குக் காரியத்தை முடிச்சுக்கிடச் சொன்ன தெல்லாம் போலித்தனமான பாசாங்கு என்கிற உண்மையை என் ஒருத்தியாலேதான் புரிஞ்சுக்கிடவும் முடியும்! கல்யாணம் என்கிறது ஆயிரம் காலத்து பயிர்னு வாய்க்கு வாய் எல்லாரும் சகஜமாய்ப் பேசிக்கிங்க. அந்த கல்யாணப் பயிரைக் கேவலம், ஒரு அஞ்சு, பத்து வருஷத்துக்காச்சும் வாடச் செய்திடாம, இவங்க காப்பாத்திடுவாங்க என்கிற சத்தியம் என் நெஞ்சிலே உறைக்கவே மறுத்திடுச்சுங்களே ? — நான் என்ன செய் யட்டும்? உங்க தூக்கத்தையும் இனிமேலும் கெடுத்திட்டா, அந்தப் பாவமும் என்னை சும்மா விடாது! — முடிஞ்சமுடிவாய்ச் சொல்லிட்டேன் ; நல்லாய்க் கேட்டுக்கங்க ; நீங்க ரெண்டு பேரும் கண் பார்க்கவும் மனம் பார்க்கவும் கூடிய சீக்கிரத்திலேயே, எனக்குப் பிடித்தமான உண்மையான ஒரு மனிதரைத் தேடிக் கண்டுபிடிச்சு, உங்க ரெண்டுபேரோட ஒப்புதலின் பேரிலே, நானும் அந்தப் புண்ணியவானும் மாலையும் கழுத்துமாய் வந்து நின்னு உங்க ரெண்டுபேர் கிட்டவும் ஆசீர்வாதம் வாங்கிக்கிடுவோம்!... இது சத்தியம்!''

மௌனம் கனத்தது.

''அம்மாடி!...''

''பாருகுட்டி!'' பார்வதி நிம்மதியாக முறுவல் பூத்தாள் - 'அனாதரட்சகா!'

பார்வதிக்கு ராத்திரித் தூக்கம் கெட்டது; அவளே கெடுத்துக் கொண்டாள் மனத்தின் உலைவுகள்—உளைச்சல்கள் அவளை உறங்க விட்டால் தானே? அவள்தான் என்ன செய்வாள்? கவலைகளும் சோதிப்புக்களும் ஒன்றிரண்டோடு நின்றால்தானே? மனத்தின் பாதிப்பு உடம்பையும் தொற்றியது. விளைவு; காய்ச்சல் அடித்தது; அடித்துப் போட்ட பாங்கில் தன்நினைவு பறிபோய்க் கிடந்தாள் எட்டிப் பார்க்கவோ, தொட்டுப் பார்க்கவோ ஈ, காக்கை நாதி இல்லை.

விடிந்தது.

அவள் கண்களைக் கசக்கிக்கொண்டு தட்டுத் தடுமாறியவளாக லட்சுமியைத் தேடு, தேடென்று தேடினாள். மாட்டுத் தொழுவத்தின் லட்சுமி போய், வருடங்கள் பல போய் விட்டன!— இப்போது அவள் தேடியது தனலட்சுமியை!— பைசா இல்லை; கேவலம்; ஒரு பைசா கூட இருப்பில் இல்லை, அவள் முதல் தேதிதான் பணக்காரி ஆவாள்!— நெஞ்சை உறுத்தியது தங்கச் சங்கிலி! அவள் கைதான் அவளுக்கு உதவி. ராம்லால் சேட்டைத் தேடிப் புறப்பட்டாள். அப்படியே லேடி டாக்டரையும் சந்தித்தாக வேண்டும்! ஆமாம்; முன்பு அடகு வைத்த தங்கச் சங்கிலியின் பேரில் கொஞ்சம் பணம் கடன் கொடுத்தால்தான் நர்ஸிங் ஹோமில் வேலை! சேட் நல்லவர்; கொடுப்பார்!...

வாசலில் மூலிகை சிக்கியது.

முருகையன் நின்றான். விவரம் கேட்டான், கேட்டதும் மனப்பூர்வமாக வருந்தினான். அப்போதைக்கு அவனால் செய்ய முடிந்தது அது ஒன்றுதான்!— பிறர் நிலைகண்டு வருந்தவாவது இந்த விசித்திரமான உலகத்திலே ஓர் ஆத்மா காத்திருக்கிறதே!....

பார்வதி முருகையனின் சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள். ஞாபகங்கள் நெஞ்சில் ஏறிக் கொண்டன. மாதங்கியைப் பற்றி முருகையன் சொன்னதெல்லாம் உண்மையான நடப்பாகத்தான் இருக்குமோ? நினைக்கவே கூசியது, சமுதாயத்தை வாழச்செய்து அதன் மூலம் நாட்டையும் வாழ்த்தக் கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் கொண்ட மனித ஜன்மங்களே நாட்டுக்கும் வீட்டுக்கும் விரோதிகள் ஆவதா ?— துரோகிகள் ஆகி விடுவதா ? தட்டிக் கேட்க ஆள் முளைக்க வேண்டாமா ?

வெயில் சூடேறுகிறது.

ஸி. ஐ. டி. நகர் பின்னே தங்கியது.

பார்வதி திடுக்கிட்டாள் ,

வழியில்—

அதே 'டேஞ்சர் சிக்னல்' காரிலே, சமூகப் பாதகி மாதங்கியோடு, இப்போது செந்தில் நாதனும் பறந்து கொண்டிருந்தான்!...

# 15

பார்வதி மூன்று தினங்கள் லீவு எடுத்துக்கொண்டாள் !— அடிவயிற்றின் உபாதை தேவலாம், இப்போது ஒன்பது மணி ஆன கையோடு' டம்பப்பையும் கையுமாக அவள் அலுவலகத்திற்குப் புறப்பட்டாக வேண்டும். ஆகவே, காலைக் கடன் காரியங்களைச் சுறுசுறுப்போடு செய்து முடிப்பதில் ஈடுபட்டாள், இடை இடையே, சமூகத்தின் ஆரோக்கியத்தைப் பகல் வேஷம் போட்டுக் கெடுக்கும் விஷக்கிருமியான மாதங்கி அவளுக்குப் பூச்சாண்டி காட்டவும் தவறவில்லை. இவ்வளவு மோசமாகப் பேசப் பட்டு வருகின்ற மாதங்கியோடு எங்கள் செட்டியார் ஐய்யா சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிறார் என்கிற செய்தியை நம்பவும் முடியவில்லை ; நம்பாமல் இருக்கவும் இயலவில்லைதான். ஐயா தனியாக இருக்கையில் மாதங்கியைப் பற்றின விவகாரத்தைப் பற்றி முதலாளியிடம் இன்றைக்காவது கேட்டுத் தெளிய வேண்டும். எத்தப் புற்றிலும் எந்தப் பாம்பும் இருக்கத்தான் இருக்கும். நிதர்சனமான உலகத்தின் நித்தியமான நடைமுறை இதுவென்றே ஆகிவிட்டது. குளியல் முடிந்ததும், வெளியே வந்தாள் அவள்.

மணி எட்டு ; நிமிடங்கள் பதினெட்டு,

எப்போது பார்த்தாலும், பார்வதி மகாலட்சுமிதான்! வெளி அழகிற்கு அழகுசேர்த்துக் கொண்டிருந்த சங்கிலி அடகுக்குப் போய்விட்டதால். அவளுடைய உள் அழகும் உடன் சேர்ந்து போய்விடாது ; போய்விடவும் முடியாது வகிடு எடுத்துச் சரிபார்த்துத் தலைவாரிக் கொண்டு, மையம் பார்த்துக் குங்குமம் வைத்துக் கொண்டாள்.

பூவையைத் தேடிப் பூவும் நாடிவந்ததில் அவள் மகிழ்ந்தாள். நாளைக்கு முதல் தேதி என்றும் நினைவு கொசிறு 'தட்டியது, பிசிறு பாய்ந்த ஆறுதல் எட்டி ஓடியது'— இங்கேயும் வழக்கம்போல், பற்றாக்குறை பட்ஜட்தான். பணத்தைக்கொடுத்து விட்டால், நகையைக் கொடுத்து விடுவார் சேட்ஜி. பணத்தை யார் கொடுப்பது? —கடவுளா ? எந்தக் கடவுள் ? ஏதோ ஒரு கடவுள் ! — அந்தக் கடவுள் என்றைக்குப் பணம் தருவார் ?... என்றைக்குச் சங்கிலியை மீட்பது ? என்றைக்கு அப்பா — அம்மா சந்நிதானத்திலே மாப்பிள்ளை புடைசூழ மாலையும் கழுத்துமாகத் தோன்றி அவர்களின் பெற்ற வயிறுகளில் அசலான பாலை வார்த்து அவர்களையும் மகிழச் செய்து, நானும் மகிழ்ச்சி அடைவதா? என் பிரச்னையைத் தீர்த்து வைக்க ஒரு கம்பூட்டராவது கண் பார்க்கலாகாதா ? — மூச் ! ....

புதிய கோட்டையை ஆக்கிரமித்து அங்கே கொடி கட்டிப் பறக்கத் திட்டம் புனைந்தவர் போன்று, நின்றது நிலைக்சத் தீவிரமாகச் சிந்தனைவசப் பட்டிருந்தார் அப்பா.

அம்மா உப்புமா பிளேட்டுடன் வந்தாள். "டிபன் சாப்பிட்டியா, பார்வதி"? என்றாள். ஊம் கொட்டிய திருமகளைப் பார்த்ததும், தேள்கொட்டிய வேதனையை அடைந்தாள். 'உன் கழுத்தில் டாலர் செயினைக்காணலை யேம்மா ?'' என்று பரதவிப்போடு விசாரணை நடத்தினாள்.

நடந்தகதை நடந்தது.

வாய் அடைத்தது.

நின்றது நின்றவாக்கில், பார்வதிக்குத் திருமணக் கவலை வந்தது. இப்போதெல்லாம் ஒரு நாளில் ஓராயிரம்

தடவையாகிலும் அவள் தன்னுடைய கல்யாணப் பிரச்னையில் மூழ்கித் திக்குமுக்காடிப் போய்விடுகிறாள்:— மிச்சம் : டென்ஷன் !

அலுவலகம் செல்ல, இன்னும் ஐந்து நிமிஷம் பாக்கி.

பார்வதி சடக்கென்று பூசை அறைக்குள்ளே பிரவேசித்தாள் ; கரங்களை ஒருமையுடன் குவித்தாள் ; ''தாயே உன்னோட சின்னப்பொண்ணுக்கு உண்டான ஒரு சின்னக் கலியாணத்தை இனிமேலாச்சும் நீ பண்ணிவைக்க ஆசைப்படப்படாதா?... அப்பா, அம்மாவோட மோசமான உடல்நிலை சதா என்னைப் பயமுறுத்த, நான் அவுங்க ரெண்டு பேரையும் சதா சர்வகாலமும் பயமுறுத்த இப்படியே தொடர்ந்துக்கிட்டே இருக்கிற பயங்கரமான நரகவேதனையிலேயிருந்து! எங்க மூன்று பேரையும் காப்பாத்து, தாயே!— அப்பதான் நானும் உயிரோடு இருப்பேன் ; அப்பா, அம்மாவும் உயிர்தறிக்க முடியும்— ''—பிரார்த்தனையின் இதயம் ஓலமிட்டது : இதயத்தின் விழிகளும் ஓலமிட்டன, விரிந்த நீர்த்திரையில் பிரிந்த மனித முகங்களின் நவீன பாணிச் சித்திரங்களின் கிறுக்கல்களுக்கு மத்தியில் செந்திலும் தென்படவே, அவள் அதிர்ந்தாள், வேர்த்துக் கொட்டியது. 'யார் இந்தச் செந்தில் நாதன் ?— இந்தச் செந்திலை நினைக்க நான் யார் ?'— விழிகளுக்கும் வேர்வை கொட்டும்!— அவளுக்கு என்னவோ செய்தது ; பிரமை தட்டி நின்றாள்.

''அம்மா! எதெது எப்படி எப்படி நடந்து தீரணும்னு எழுதிப் போட்டிருக்குதோ, அதது அப்படி அப்படிதான் அணு பிசகாமல் நடந்துதான் தீரும்!— அந்தச் சூத்திரத்தையும் சூட்சுமத்தையும் நம்மாலே அறிய முடிஞ்சுதின்னா 'அப்பவே, நாமளும் கல்லாகிக் கடவுளாகிட மாட்டோமா'!... சரி, சரி ; முதலிலே உன் பசி பாட்டையாச்சும் தீர்த்துக்க !'' சிவகாமிதான் பேசுகிறாள்.

''ஆமாம்மா! சாப்பிட்டுட்டு வேலைக்குப் போயிட்டு வா, பார்வதி, நேரம் ஆச்சுது !'' என்று உட்புறத்திலிருந்து தீனமாகக் குரல் கொடுத்த புள்ளி ஆத்மநாதன் தான் !

பார்வதி சலனம் அடைந்தாள் : 'இவங்க தொனி நல்லாவே இல்லையே ?... ஒருவேளை இவங்களுக்கு நான் எப்பவுமே தீராத பிரச்சனையாகவே ஆக்கிடுவேனா?... அப்படி ஆயிட்டா, அப்பறம் இவங்க ரெண்டுபேரையும் உயிரும் உடம்புமாக நான் எப்படிக் காண முடியும் ?'— நெஞ்சு முகாரி ராகத்தில் விம்ம, பசி ஆதித்தாளம் போட அவள் ஒரு வழியாகக் காலைப் பலகாரம் சாப்பிட்டு முடித்தாள். உப்புமா வென்றால், உப்பு தூக்கலாகத் தான் இருக்கும் அதற்காக, இப்படித் தாகம் எடுப்பதில் அர்த்தம் இல்லை.

லேடி டைப்பிஸ்ட் பார்வதி புறப்பட்டாள்!— ''போயிட்டு வர்றேன், அப்பா!... போய்வரேன் அம்மா!'' என்று அன்போடும் பாசத்தோடும் சொல்லிக் கொண்டாள்.

''பத்திரமாய்ப் போயிட்டு, பத்திரமாக வாம்மா!''

பாரமும் பாசமும் ஒரே ராகத்தில் ஒரே பல்லவியைப் பாடின.

தலைவாசலுக்கு வந்தாள் பார்வதி. கூறை பிய்ந்து பரிதாபமாகவும் அலங்கோலமாகவும் கிடந்த மாட்டுத் தொழுவத்தை இப்போதும் பார்வையிட்டாள். நினைவு கள் பொங்க, வேறுபுறம் திரும்பினாள். மாட்டுத் தொழுவத்தை இன்று பெரியதம்பி பிரித்து விடுவானாமே! இனி, அது எதற்கு ? வெளி வாசலுக்கு விரைந்தவள், திடுக்கிட்டாள் !

அங்கே—

செந்தில்நாதனும் செந்திலுமான அந்தச் சீமான் வீட்டுச் செல்வப்பிள்ளை அன்பே உருவமாகவும், அழகே வடிவமாகவும் சொகுசான ரோசாப்பு நிறக் காரிலிருந்து வெகு பதற்றத்தோடு இறங்கினான்! 'குட்மார்னிங், மிஸ் பார்வதி! என்று கூறி, வணக்கம் கூறினான்: நாகரிக மாகப் பார்வையைச் சிரம் தாழ்த்தியபடி, மயில் கண் ஜரிகை வேட்டியைத் தரையிலே புரளவிடாமல் நாசூக்காக இடுப்பில் இழுத்துச் செருகிக் கட்டிக் கொண்டான்! — உலக இளைஞர் ஆண்டின் மேல்தட்டுப் பிரதிநிதியா இவன்? இவன் எங்கே வந்தான்? ஏன் இங்கே வந்தான்? பாதை மாறி வந்து விட்டானா? அல்லது பாதை தவறி வந்துவிட்டிருப்பானோ?

கும்பிடு வாங்கிக் கும்பிடு கொடுத்தாள்.

வழக்கம் மாறாமலே, கண் ஜாடையாகப் பெற்ற அனுமதியுடன், கைஜாடையாக ரோஜாப் பூவைப் பறித்துக் கொண்டு வந்து நின்றான் செந்தில்.

"நீங்க நல்லா இருக்கீங்களா?" என்று அன்பாகவும் அன்பிற்காக நலம் விசாரித்தான் அவன்.

"ஓ" புன்சிரிப்பு.

அவனை ஆழ்ந்து நோக்கினாள் அவள். அந்தப் பார்வையின் அன்பும் பாசமும் நயமும் நாகரிகமும் அவனை என்னவோ செய்திருக்க வேண்டும்!— ஒப்பிட்டுக் காட்டவோ என்னவோ, மயிலாப்பூர் மாப்பிள்ளைக் காரன் நொடிக்கு நூறு தரம் மோக வெறி துள்ள அவளை அவளது கவர்ச்சி கனிந்த, இளமை பொங்கிப் பொங்கி வழிந்த மேனியைப் பார்த்த—பார்த்துக் கொண்டேயிருந்த அநாகரிக காட்சி அவள் நெஞ்சில் படமெடுத்தது செந்திலின் பார்வை அவளுக்கு இதமாகவே இருந்தது. ஆகவே, புன்சிரிப்பு வந்தது; சந்தோஷமும் வந்திருக்கக்

கூடும், அவளுக்குக்கூட சந்தோஷமான கனவுகள் தோன்றும் போலும்! மறுகணம், அவள் கண்கள் திறந்தன!— 'நான் யார்? இந்தச் செந்தில் யார்?... நான் எங்கே? இந்தச் செந்தில்நாதன் எங்கே?'—இப்போது அவள் இருதயத்திலும் வேர்வை சுரக்கிறது. சமாளித்துக் கொண்டாள்: அவள் சாமர்த்தியம் வேறு ஒருத்திக்கும் வராது!

வெய்யிலில் சூடு தெரியவில்லை.

''ஏங்க....?'' செந்தில்,

பார்வதி: ''என்னங்க?''

''வந்து...''

''வந்து....''

''உங்களாலே...''

''உங்களாலே....ஊகூம், என்னாலே?''

''ஒரு அவசரமான, முக்கியமான, உயிருக்கு ஒப்பான நல்ல காரியம் நடந்தாகணும்: அதுக்கு நீங்க மனசொப்பி எனக்கு ஒத்தாசை செய்யவேணும்?...''

''மிஸ்டர்! செந்தில்! கண்ணைத் துடைச்சுக்கிடுங்க. என்னாலே முடிஞ்சால் செய்றேன்; முடிஞ்சதைச் செய்றேன்; கட்டாயமாய்ச் செய்வேன். ஊம், சீக்கிரமா விஷயத்துக்கு வாங்க!''

''சீக்கிரமா நீங்க என்கூட எங்க வீட்டுக்கு வர வேணும்!''

''நீங்க என்னா பேசுறீங்க, மிஸ்டர் செந்தில்நாதன்.''

''உங்களாலே என்னை நம்பவே முடியலையா, மிஸ் பார்வதி?''

மௌனம் ஒரு பாஷை ஆவது கிடையாது.

பார்வதியின் கண் எதிரில், பொம்மலாட்டம் ஒன்று ஊமைத்தனமாக ஆட்டம் காட்டிற்று! — மூன்று நாட்களுக்கு முன்னதாக, தலை போகிற அவசர ஆத்திரத்தில் சமூகவேசி மாதங்கியோடு அவளுடைய காரிலே இதே செந்தில் பறந்து சென்றது பொய்யா? அதற்கெல்லாம் முந்தி, இதே செந்தில் பதிப்பகத்தின் வாசலில், பொது ஜனங்கள் புடை சூழ்ந்து மரியாதை தெரிவிக்க, தாராவோடு ஸ்கூட்டரில் வந்து அடிபட்டு வீழ்ந்து கிடந்தானே அது கதையல்லவே?— கண்களிலே தொடுவானம் காட்டித் தலையை ஏறிட்டு நிமிர்த்தினாள் கன்னி இளம்மான்.

செந்தில்நாதன் வேட்டியை மடித்து 'டப்பா கட்டு' கட்டியபடி, ''நான் கொடுத்து வைக்காத பாவி!. வர்றேன்!'' என்று நா தழதழக்கக் கூறிவிட்டு, அங்கிருந்து பதட்டத்தோடு நகர்ந்தான். கண்களிலே சுடுநீர் மின்னியது.

மிஸ்டர் செந்தில்! நில்லுங்க; நானும் வர்றேன்! — எப்போதும் எனக்கு நானேதான் துணை இருக்கிறது. வன்மை; இப்ப நீங்க வேறே எனக்குத் துணை இருக்கீங்க, அப்புறம் எனக்கு என்ன கவலை?''

''பார்... மிஸ் பார்வதி! தாங்க்யூ வெரி மச் ... ஆபத்தான அவசரம்; அவசரமான ஒரு பாசக் கடமை...ம் புறப்படுங்க!''

பரிசுத்தமான விடியல் பொழுதுகளிலே, தன்னைப் பார்த்து விட்டுப் போவதற்கென்று பரிசுத்தமான அன்போடுதான் இந்தச் செந்தில் உண்மையிலேயே இங்கே அடிக்கடி வந்து கொண்டேயிருந்தானோ? — தவித்தாள்

உருகினாள் ; இப்ப என்னை ஏன் அழைச்சிட்டுப் போறார் ?'' பார்வதிக்கு இனம் விளங்கவில்லை !

'பாரு சேச்சி'க்கு டாடா சொல்வதற்கென்று எதிர் வீட்டு அம்முக்குட்டி தன்னுடைய குஞ்சுக் கால்களில் எத்தனை நேரம் காத்துக் கொண்டு இருந்திருக்கிறாள், பாவம் ! ...

புத்தம் புதிய கைத்தறிப் புடவை சலசலக்கிறது.

எலுமிச்சை நிறமென்றால் பார்வதிக்குப் பிரியம்.

# 16

மந்திரிமார்களின் அதிகாரமான அதிகாரபூர்வமானதுமான அழகுக் குடியிருப்பு வட்டாரத்தைப் பின் தங்கச் செய்தவண்ணம், 'காரினும் கடிது' சென்ற—பறந்த 'டால்ஃபின்', தென்முனையில் பிரமாண்டமாக எழுப்பி நின்ற பங்களாவின் தலைவாசலில் வந்து நின்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டது.

பார்வதி இப்பொழுது எந்த உலகத்தில் இருக்கிறாள்? மயன் உலகம் என்கிறார்களே, அது இப்படித்தான் இருக்கும் போலும்!

முன்னே நடந்துகொண்டே இருந்தான் செந்தில்.

பின்னே தொடர்ந்து கொண்டே இருந்தாள் பார்வதி

மாடி வந்தது.

நடுக்கூடமும் வந்தது.

அவன் நின்றான்.

அவளும் நின்றாள்; நின்றவள் மலைத்தாள்; மலைத்தவள் சிலையானாள்; சிலை என்றால், மோகினிச் சிலை; அசல!

அங்கே, கனமான—பெரிதான பூமாலைகள் இரண்டு பளிச்சென்று காட்சியளித்தன!

''பார்வதி...''

''சொல்லுங்க...''

''சொல்றேன்''

ஒன்றும் சொல்லாமல் எதிர் அறைக்கு அழைத்துப் போனான் செந்தில். "அங்கேதான் இரண்டு ஜீவநாடகங்கள் நடந்துக்கினு இருக்குது ; நடந்துக்கினு இருக்கிற அந்த இரண்டு நாடகங்களும் அங்கேயேதான் முடியவும் போகுதுங்க!"

வாய்ப்பேச்சு கண்ணீர் சொரிந்தது.

உள்ளே —

செந்தில்நாதன் பெற்றோர்கள் இருவருமே அப்போது சுயநினைவு இழந்து கிடந்தார்கள் ; இருவருக்குமே மண்டைகளில் பலமான கட்டுக்கள் போடப்பட்டிருந்தன.

பார்வதியின் உயிர் துடித்தது ; "என்ன ஆச்சுங்க ?" என்று பதைப்போடு விசாரணை செய்தாள்.

"எல்லாமே ஆயிடுச்சுங்க !... அப்பாவும் அம்மாவும் ஏற்கனவே இருதய நோயாளிங்க ; இந்த லட்சணத்திலே, காலம்பற கார் விபத்துக்கு வேறே ஆளாகிட்டாங்க...."

"அட, கடவுளே !"

"ஏங்க, கடவுள் இருக்காருங்களா ?"

"மிஸ்டர் செந்தில் !"

"இந்தச் செந்தில் இருக்கானே செந்தில், இவன் பெரிய பணக்காரர் வீட்டுப் பிள்ளை மட்டும் இல்லே ; உண்மையிலேயே உண்மையாகவே பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளையுந்தான் !— அந்தப் புண்ணியமே இவனுக்குப் பாவமாகவும் ஆயிடுச்சு ; இவன் என்னவோ கனவு கண்டான் ; என்னமோ நடந்திடுச்சு ; என்னென்னமோ நடந்துக்கிட்டிருக்குது ; இன்னும் என்ன வெல்லாமோ நடக்கவும் போகுது ! "ஊம்... அம்மாவும் அப்பாவும் எப்பவோ என்னை மாப்பிள்ளைக்

கோலத்திலே கண்ட கனவு நிறைவேறாததாலே என்னைப் பெற்றவங்களோட ஆசையை என்னாலே நிறைவேற்றி வைக்க முடியாமல் போயிடுச்சு. அவங்க ரெண்டு பேரும் மாறி மாறிப் பாயும் படுக்கையுமாக ஆன சமயங்களிலே என்னாலே செந்திலாக நடமாட முடிஞ்சுது !...இந்தக் கலிகாலத்திலே எது நடக்கும், எது தான் நடக்காது என்கிறதே புரியல்லே !.... கொஞ்சநாள் முந்தி, என் தாயாருக்கும் தகப்பனாருக்கும் ஒரே சமயத்திலே கடுமையான 'ஹார்ட் அட்டாக்' வந்திடுச்சு ; அப்பத்தான், என்னோட பாசத்தின் மனச்சாட்சி எனக்குச் சவுக்கடி கொடுக்க ஆரம்பிச்சுது !—நான் விரும்பினது நடக்கல்லே ; அதனாலே, என்னை எனக்காகவே நேசிச்ச தாராவைக் கலியாணம் கட்டிக்கிட்டு, கண்கண்ட என்னோட தெய்வங்ககிட்டே நல்லாசி வாங்கிக்கிடவும் நான் என் மனசை மாற்றிக்கிட்டேன். ஆனா, தாராவைப் பெற்றவங்களோ மனசு மாறாமலும், மறைவிலே என்னை ஏசிப்பேசியும், எங்க திட்டத்தை ஏற்றுக்கிட மறுத்திட்டாங்க ! அந்நேரத்திலே, எப்படியோ அப்பாவும் அம்மாவும் உயிர் பிழைச்சிட்டாங்க !... ஆனா...இப்ப மறுபடியும் இவங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசி வச்சுக்கின மாதிரி என்னைச் சோதிச்சுக்கிட்டும், சாவோட போராடிக்கிட்டும் இருக்காங்க !....அதனாலே...''

அவன் பேச்சை முடிப்பதற்குள், என்னவோ சத்தம் அமர்க்களப்பட்டது

டாணிக் சீசா உடைந்து நொறுங்கிற்று.

அந்தக் கறுப்புப் பூனைக்குப் பாலைக் காவல் வைத்திருக்கலாம் !

பார்வதி பதறிய நிலையில் செந்திலின் பெற்றோர்களின் மூக்குகளில் விரல்களைப் பரப்பிச் சோதித்துப்

பார்த்தாள். ''எனக்கு என்னமோ பயமா இருக்குங்க !'' என்று கலங்கினாள். ''கடைசி வாட்டியாக ஒரு தடவை நல்ல டாக்டர் ஒருத்தரை...'' அவளால் பேச்சைத் தொடர முடியவில்லை.

செந்தில் உதடுகளைப் பிதுக்கினான்.

நேரம் கெட்ட நேரம் தொலைபேசிக்குப் புரிவ தில்லை.

''இன்னும் கொஞ்ச நாழியிலே நான் அங்கே இருப் பேன். உன்னை என்னாலே எப்படி மறக்க முடியும் மாதங்கி? ஆல்ரைட் !''

பார்வதி திகைத்தாள் ; மாதங்கியின் கதை தொடர் கதையோ ? எப்போது முடியுமாம் ?

திரும்பியவனின் கைகளில் காஞ்சிப் பட்டும் சோளியும் தளதளக்கின்றன. எலுமிச்சை நிறத்துக்குத் தனி அழகு தான் !

இப்போது பார்வதி திடுக்கிட வேண்டியவள் ஆனாள்.

தாழ்ந்திருந்த கண்களை நிமிர்த்தினான் செந்தில். அவை பார்வதியின் அழகான விழிகளை அழகாகவே ஊடுருவல் செய்திருக்க வேண்டும். கண் இமைப் பொழு தில் விரிந்து விளையாடவும் விளையாட்டுக் காட்டவும் தொடங்கிய பழங்கனவுகளுக்கும் புதுக் கனவுகளுக்கும் இடையிலே ஊஞ்சலாடவும் அந்த இமைப் பொழுது பற்றாதா ? நெஞ்சம் இனித்துச் சிலிர்க்க மெய்மறந்து நின்றவன், சுயப்பிரக்ஞை அடைந்தான். பெருமூச்சு நெஞ்சை அடைந்தது, சிரம் தாழ்த்தினான்.

இப்போது பார்வதி நேர்கொண்ட பார்வையை விரித்தாள் : "உங்க பேச்சு அரைகுறையாக நிற்குதுங் களே ?'' என்றாள். காட்டிலே கண்களைக் கட்டிக் கொண்டு தவிப்பதற்கும் எல்லை வேண்டும்தான் !

''வாஸ்தவம்தான் ; என்னோட பேச்சும் அரைகுறை யாகத்தான் நிற்குது ; அதையாச்சும் முடிச்சுடுறேன் !''

குறுக்கிட்டாள் அவள் ; சீக்கிரம் விஷயத்துக்கு வாங்க !''

''பார்வதி, நீங்க என்னை நம்பறீங்கதானே?''

''நிச்சயமாக!''

''மனப்பூர்வமாகவும் நீங்க என்னை நம்புறீங்க தானே ?''

''ஆமா!''

''மன ஆறுதலுக்காகக் கேட்டேன். விஷயம் இது தான். என் தாயும் தகப்பனும் என்னைக் கல்யாண ராமனாகக் காணவேணும்னு ஆசைப்பட்டாங்க ; நான் ரெடி ; கல்யாணச் சீதையைத் தேடி என்னோட உள்ளம் அலைஞ்சப்ப, என் பரிசுத்தமான உள்ளத்தினுள்ளே பரிசுத்தமாகக் கொலு வீற்றிருக்கிற உங்களை என் மனசு கண்டு பிடிச்சதிலே அதிசயம் இல்லைதானே பார்வதி ? சொல்லுங்க பார்வதி சொல்லுங்க!'' என்று ஆத்திரமும் அவசரமுமாகப் பதறினான் செந்தில்நாதன்.

''அதிசயம் இல்லேதானுங்க!''

''எம்மனது செஞ்சது சரிதானே ?''

''சரிதாங்க!''

"பேஷ், பேஷ்...! அதனாலேதான் உங்களை நேரிலே தேடியும் ஓடியாந்தேனுங்க!... பார்வதி, இப்ப நீங்க மணப்பெண் கோலத்திலே எனக்குப் பக்கத்திலே நிற்கணும் ; அதாவது நீங்க எனக்கு மனைவியாக ஒரு வினாடி, ஒரே வினாடி ஆக்ட் பண்ண வேணும் ! உங்களையும் என்னையும் என்னோட பெற்றோர்கள் தம்பதி சமேதராகப் பார்த்தால்தான், அவங்களோட ஆவி நிம்மதியாகப் பிரிய முடியும்!... இது வெறும் நாடகம்தான் ; ஒரு நாடகத்துக்குள்ளே இன்னொரு நாடகம்!— அவ்வளவுதான்... மற்றப்படி இதிலே சூதோ, தந்திரமோ கிடையவே கிடையாதுங்க!— நான் உங்களைத் திரிகரசுத்தியோட காதலிச்சவன் ; காதலிக்கிறவன் என்கிற தருமச் சத்தியத்தை மதிச்சும் நம்பியும் நல்ல வாக்குக் கொடுத்தீங்கன்னா, என்னைப் பெற்றவங்க கடைசி நிம்மதி அடைகிறதோடே, நான் அதிர்ஷ்டசாலி யாகி முதல் நிம்மதியை அடையவும் முடியும், பார்வதி!'' செந்திலின் பேச்சு தழதழத்தது. ''சமூக அநீதியான வரதட்சணைக் கொடுமைகளுக்கு எதிர்நீச்சல் போட்டு வீரத்தமிழச்சியாகத் தலைநிமிர்ந்து நிற்கக் கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கிற உங்களுக்கு நானே வரதட்சணைக் கொடுத்துக்கூட மனசுக்குள்ளே ஆசைப்பட்டதும் உண்டு ஏன், நானே உங்களுக்கு வரதட்சணையாகவும்கூட திட்டமிட்டிருந்தேன்!'' பேச்சு நின்றது.

மோகினிப் பதுமையென நின்றாள் பார்வதி.

''நேரம் சோதிக்கிற நேரத்திலே நீங்களும் சோதிச் சிடாம, சீக்கிரத்திலே நல்ல வாக்குத் தாங்க, பாரு !'' பாசத்தின் வெறியில் சத்தமிட்டான் செல்லப்பிள்ளை.

''உங்க அன்பு மகத்தானது ! மனிதாபிமானம் மிகுந் தது!.... உங்க இஷ்டப்படி நடப்பேனுங்க; இது உங்களுக்கு உண்டான கடமை மாத்திரம் இல்லே ; எனக்கு வாய்ச்

சிருக்கிற சோதனையான புண்ணிய கடமையும் தானுங்க!''— மேனிச் சிலிர்ப்பு அவளுக்கு இன்னமும்கூட அடங்கலில்லை.

உச்சி வெளிச்சம் கூடத்தை உச்சி மோந்தது.

செந்திலின் உந்திக் கமலத்தினின்றும் புறப்பட்ட ஆனந்தச் சிரிப்பு அவன் இதழ்களில் மாவுக்கோலம் வரைகிறது. ''ஜரிகைப் பட்டு, ப்ளவுஸ் எல்லாத்தையும் பாத்ரூமுக்கு எடுத்துப் போங்க ; உள்பக்கம் நல்லாவே நாதாங்கியைப் போட்டுக்கங்க ; நொடியிலே, திருமணப் பெண்ணாக வேஷம் போட்டுக்கங்க; அந்த மாலைகளிலே ஒண்ணை எடுத்துப் போட்டுக்கிடுங்க ; ஒரு செகண்டிலே திரும்பி வந்திடுங்க பார்வதி ; ...'' என்று கெஞ்சினான், ''புனிதமான அன்புத் தேவதையான உங்களைப் புனிதமானதொரு கல்யாணப் பெண்ணாக அன்பின் புனிதத் தோட வரவேற்கக் காத்து தவம் இருப்பேன், பாரு !'' — பேச்சை முடித்தான் ; பரபரப்புக்கூடிய நடப்பு : நடவடிக்கை.

''ஆகட்டும் !'' என்றாள் பார்வதி. கைந்நொடிப் பொழுது தயங்கினாள் ; பின் உடைகளோடு உள் நடந்தாள். 'கல்யாணம்னா தாலி வேணுமே ? ... செந்தில் மறந்திட்டாரோ, என்னமோ, தெரியலையே ?' — அவள் செருமுகுறாளா, இல்லை, பொருமுகிறாளா ? அந்த அந்தரங்கம் அவளுடைய அந்தரங்கத்துக்கே புரியவில்லை !

அப்போதைய வினாடிகளுக்கு மகிமை கூடுதல் !

அதன் விண்வெளியில் மிதந்தான். 'அப்பாவும் அம்மாவும் கொடுத்து வச்சவங்கதான் ; அவங்களோட இறுதிக் கனவு பூர்த்தியடைஞ்சிடப் போகுது ; ஆமாம் ; என்னோட கடைசிக் கடமையும் நிறைவேறப் போகுது !— அப்பாலே, எனக்கு கவலையே கிடையாதாக்கும் ! ...

அதோ, என்னோட சொப்பனத் தேவதை ! ... ஆசை ஆசையாக நான், கண்ட ஏதோ ஒரு வகையிலே — வழியிலே நனவாக்கப் போறவங்களாச்சே பார்வதி !' — பதட்டத்தோடு பார்வதியை வரவேற்றான் செந்தில்.

உணர்ச்சிப் பிழம்பாக நின்றாள் பார்வதி ! — தீப் பிழம்பில் கோலவிழிகள் சிரிக்கின்றன ; இதழ்களுக்கும் சிரிக்கத் தெரிந்திருந்தது ; இளமையின் கவர்ச்சியில் பொலிந்த அழகான மார்பகம் அழகாகவே எம்பி எம்பித் தாழ்கிறது. பூவும் பொட்டும் மங்கலம் பாடின. தன் தாய் தந்தையரின் பாசச் சூழலிலே நின்று கொண்டிருப் பதாகவே அவள் உணர்வு அப்போது அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும் நெற்றியில் நெளிந்த பூ விரல்கள் கழுத்திற்கு ஓடி வந்ததுதான் தாமதம் ; 'அவளுக்குச் சுருக்கென்றது ! — 'இந்நேரத்துக்கு என் கழுத்துச் சங்கிலியாச்சும் அடகுக்குப் போகாமல் என் கையிலேயே மிஞ்சியிருந்திருந்தா, நல்லா இருந் திருக்குமே ? ...' பூவிரல்கள் பூச்சிதறலாக நடுங்குகின்றன.

செந்திலுக்குச் சூட்சுமம் அதிகம். பார்வதியை நெருங் கினான். ஏதோ இனம் புரியாத உரிமையின் உறவில் அவனுள் அமைதி கனிந்தது. ''காதலுக்காக முடியை மட்டுமல்லாமல், உயிரையும் துறந்தவங்களைப் பற்றியே சதா நினைச்சுட்டு இருந்தவன் நான் ; அதனாலேதான், கல்யாணம்னா ஒரு தாலி வேணுமே என்கிற சாதாரண மான உண்மையைக் கூட நான் மறந்து போயிட்டேன் ! நான் தேடினது கிடைச்சிருந்தா, ஒரு தாலியும் என்னைத் தேடி வந்திருக்கும் ! ... சரி, சரி ! ... இந்தாங்க, செயின் ! போட்டுக்கங்க, பாரு !'' என்றான்.

பூ முகத்தில் பூவிழிகள் பன்னீர் தெளித்திருக்கக்கூடும்.

செந்தில் மாலையும் கழுத்துமாக, அசல் மாப்பிள்ளை யாகவே தோன்றுகிறான். ஜரிகைத் துப்பட்டாவைச்

சீராக்கிக் கொண்டான். அவன் தலை நிமிர்ந்தான். நெஞ்சடியில் அழுந்திக் கிடந்த சோகமும் தலையை நிமிர்த்தியது தேடி வந்த சோகத்தில் ஓர் ஆறுதலை தேடியவனாகச் சற்றே முன்பக்கம் நகர்ந்தான் ; அப்பா அம்மாவின் பாதங்களைத் தொட்டுப் பார்த்தான். பாதங்களில் சூடு தெரியவில்லையே ? — பதறினான். மறுகணம், "அம்மா !" என்று கதறினான் ; தொடர்ந்து "அப்பா !" எனவும் அலறினான் ! வேட்டியின் ஜரிகைக் கரையில் கண்ணீரின் கரையும் கரை சேர்ந்தது.

சூன்யத்தில் கரங்குவித்து நின்றாள் பார்வதி.

செந்தில் ஆனந்தக் கூத்தாடினான் !

"பாரு ! என்கிட்டே நெருங்கி வந்து நில்லுங்க. சங்கிலியை ஜாக்கெட்டுக்கு உள்ளே தள்ளிவிடுங்க. ஊம், இன்னும் துளி நெருங்கி வாங்க ; என்னோட ஒட்டியும் வந்திடுங்க. மறந்திடாதீங்க ; இப்ப நீங்க என் மனைவி; நான் உங்க புருஷன்!— ஆமாம், தற்காலிகமான உடன் பாடுதான் — ஏற்பாடுதான்— நான் இந்த உண்மையை மட்டும் மறந்திடவே மாட்டேனுங்க! சரி; இப்ப அங்கே பாருங்களேன் ; என்னோட அன்பான அப்பாவும் அன்பான அம்மாவும் மறுபடியும் கண்ணை முழிச்சுப் பார்க்கிறாங்க !"

ஆச்சரியந்தான் !

செந்தில்நாதனின் பெற்றோர்கள் இருவரும் ஒருவருக் கொருவர் அந்தரங்கம் பேசிக் கொண்டவர்கள் மாதிரி கண்களை உருட்டி உருட்டி விழித்தார்கள் ; பார்த்தார் கள். எதிர்ப்புறத்தில் பார்த்துக்கொண்டே இருந்தார் கள் !

திருமணக்கோலம் ஏந்தி நின்ற செந்திலும் பார்வதி யும் ஓரே பாவனையில் அஞ்சலி செலுத்தினர்.

முதியவரும் மூதாட்டியும் புதுமணத் தம்பதிக்கு ஆசி வழங்கினர்!...

வெளித் தாழ்வாரம்.

''செந்தில், எனக்கு நேரமாச்சுங்க!''

''எனக்குக்கூட நேரமாச்சுத்தான், பார்வதி சரி, புறப்படுங்க !''

ஒஹோ ! மாதங்கி அழைத்தாளே?...

''ஆகட்டுங்க ; போட்ட வேஷத்தைக் கலைச்சிட்டு, இதோ ஒரு நிமிஷத்திலே வந்திடறேனுங்க!'' என்று சொல்லிச் சென்றவள், சொன்ன பேச்சுப்படி திரும்பி வந்தாள். கைப்பிடியில் பட்டுப் புடைவை, சோளி, கழுத்துச் சங்கிலி, மாலை எல்லாமே இருந்தன. ''இந்தாங்க!'' என்று நீட்டினாள் பார்வதி.

''இதுகளை நான் வச்சிட்டு என்ன செய்யப் போறேன்?''

''நான் மாத்திரம் இதையெல்லாம் வச்சுக்கினு என்னங்க செஞ்சிடப் போறேன்?''

செந்திலுக்கு முகம் சிறுத்தது. சற்றே நகர்ந்தான். சிகப்பு நிறத்திலே எச்சரிக்கை செய்த பொத்தானை அழுத்தினான்.

பார்வதிக்கு இருப்புக் கொள்ளவில்லை, அங்கே.

செந்தில் ஏதோ சிந்தனையில் நெற்றியைத் தேய்த்துக் கொள்கிறான்.

இரண்டு கோப்பைகளிலே காப்பி வந்தது.

கோப்பைகளை எதிர்கொண்டு ஏந்தினாள் பார்வதி. ஒன்றைச் செந்திலிடம் நீட்டினாள்.

''எதுவுமே எனக்குச் சூடாக இருந்தாகணும்; நீங்களும் குடிங்க'' என்று சொல்லிக் கொண்டே காப்பியை ருசித்துச் சுவைத்தவன், திடீரென்று தலையை உயர்த்தி, ''ஆயா, இவங்கதான் பார்வதி'' என்றான்.

''இவங்க பார்வதி இல்லே, தம்பி, எங்க வீட்டு மருமகப் பொண்ணாக்கும்!''

பார்வதியின் கைக்கோப்பை நடுங்குகிறது; விழிகளிலே சலனம்.

''ஆயா, இந்தாங்க கப்!''

செந்திலின் எச்சில் கோப்பையை வாங்கிக்கொண்டவளோ, பார்வதி. அவள் கைப்பட அதை ஆயாவிடம் கொடுத்தாள். ''மிஸ்டர் செந்தில், வழக்கம் போல இனிமே நான் வெறும் பார்வதிதான்!'' என்று தெரியப் படுத்தினாள்.

''ஓ கே.'' என்றான் செந்தில். ''மிஸ் பார்வதி, நான் உங்களை இனி எப்போது சந்திக்கலாம்?'' கேட்டான்.

''எப்போது வேணும்னாலும் சந்திக்கலாமே!''

சோகத்தின் அமைதியோடு முறுவல் பூக்கினான் மாஜி மாப்பிள்ளை.

''பார்த்தீங்களா? — மறந்தே போயிட்டேன். பார்வதி ஆபத்துக்கு மனசொப்பியும் மனசு இரங்கியும் நீங்க எனக்கு உதவினீங்க; உங்களோட இந்த உதவியை நான் உயிருள்ளவரை மறக்கவே மாட்டேன்; உங்களுக்கு இந்த

ஜென்மத்திலே நான் என்ன கைமாறு செய்யப்போறேனோ தெரியவே இல்லீங்க !'' என்றான் ; ஓரவிழிகளில் ஈரம்.

''வர்றேனுங்க !''

''போயிட்டு வர்றேன்னு சொல்லுங்க, பாரு !''

''போயிட்டு வர்றேன் !'' என்று சொல்லிக் கைகளைக் குவித்தாள் 'குட் பை' போட நினைத்தவள், 'டாடா' போட்டாள்!—'இப்ப இங்கே நடந்து முடிஞ்ச நாடகத்தை பற்றி அப்பா அம்மா கையிலே சொன்னதும், அவங்க என்ன பண்ணுவாங்களாம் ? ம்...இனிமேலும் என் வழி தான் எனக்குச் சொந்தமா''

செந்திலுக்குத் தன்னுடைய கண்ணீருக்கு விடை கொடுக்கத் தெரியவில்லை!—ஆனால், பார்வதிக்கு மட்டும் விடை கொடுத்தான் !

# 17

ஈஸ்வரமணிப் பதிப்பகம் !

மின்காற்று பட்டமாத்திரத்தில், பார்வதியின் உள்ளமும் உடம்பும் இதம் அடைந்தன. அடையாறு பங்களாவில் ஒரு மணி நேரத்திற்குள் நடந்து முடிந்த — நடத்தி முடித்த — ஜீவநாடகத்தை கெட்ட தொரு கனவாகவே அவள் நிமிஷங்களைக் கூடச் சொந்தப் படுத்திக் கொள்ள மாட்டாள். மேஜைமீது வட்டியும் முதலுமாக அலுவல்கள் அம்பாரமாகக் குவிந்து கிடந்தன! விற்பனையாளர்கள் என்கிற பெயர் பொருத்தமாகத்தான் இருக்கிறது !— கடனுக்கு வாங்கின புத்தகங்களை ரொக்கத்துக்கு விற்பனை செய்யும் இவர்கள் பணத்தைப் பதிப்பகத்திற்கு அனுப்ப மாட்டார்களோ ? எதிர்ப்பக்கம் முதலாளியின் அறையை எட்டிப் பார்த்தாள். அழைப்பு வரவே எழுந்து நடந்தாள்.

''இப்பத்தான் வர்றிங்களா, பார்வதி?-உங்கஃப்ரண்ட் செந்தில் உங்களுக்கோசரம் ஃபோன் பண்ணினார். உங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நித்தியகண்டம் பூரண ஆயுசு கணக்கிலே இப்படியே மாறி மாறி உடம்புக்கு வந்தால், பாவம், நீங்க ஒண்டியாய் என்னதான் செய்வீங்க ? இப்ப தேவலாமா ?''

பார்வதி தலையை உலுக்கினாள்.

''நல்லவேளை ; அவங்க ரெண்டு பேருக்கும் ஒரே சமயத்திலே நோய்நொடி வராதவரை, உங்க பாடு யோகந்தான்! நல்லவங்களைத்தான் பகவானுக்குச் சோதிக்கத் தெரியும் !''

மறுபடி அவள் தலையை உலுக்க வேண்டியதாயிற்று.

கடமையோ நடக்கிறது.

காலமோ ஓடுகிறது.

கனகசபையிடம் ஒரு விசேஷம் : அவர் ஏழைரைக் கட்டை கருதியில் பேசவும் செய்வார் : "அடடே, மாதங்கியா ? இந்திரா நகரிலேருந்துதானே பேசுறீங்க ? நான் உடனே புறப்பட்டு வரணுமா ? அதுக்கென்ன, உடனே வந்தால் போச்சு. இண்ணைக்கு மத்தியான சாப்பாடு மாம்பலத்திலே, சின்ன வீட்டிலே. கோழிச் சாப்பாடு. முடிச்சுட்டு, காரிலே பறந்து நேரே அங்கே வந்திடுறேனே !... ஓ!...சரி, சரி; புரியுது. நான் ரெடி !" குதூகலமான சிரிப்பில் செட்டியார் குலுங்கினார். நாலு பேருக்கு நல்லவர் ஆயிற்றே ?

செட்டியாரையும் அழைத்திருக்கிறாளே, சமூகப் பழி காரி மாதங்கி ?

பார்வதிக்கும் அது சாப்பாட்டு நேரம்தான்.

தோழியர்கள் அவளுக்காகக் காத்திருந்தார்கள்.

மனம் இல்லாமலே, உப்புமாச் சம்புடத்தைத் திறந் தாள் பார்வதி. சிநேகதிகளுக்கு ஈவு வைத்துக் கொடுக்கும் போது, உப்பு கூடுதலாக இருக்கும் மாப்பண்டத்துக்குப் பேர்தான் உப்புமா என்ற பெயர் பொருந்துமென்று அவர் களிடம் வாதாடித் தப்பித்து எப்படி நியாயமாக முடியுமா ? பாகப் பிரிவினை செய்த அந்த வேலையில் தொலைபேசி அழைப்பு வரவே விரைந்தாள். மிஸ்டர் செந்தில் அழைக்கிறாரோ ?

தம்பி ராமையா பேசினான்.

காற்றடித்துத் தீக்கணப்பிலே விழுந்துட்ட உயிர்ப் பூவாகத் துடிக்கிறாள் பார்வதி; விதியின்சவாலுக்கு எதிர்ச் சவால் விடுக்க முடியாத ஆற்றாமையில், வேதனையில், நெட்டுயிர்ப்பில் விம்முகிறாள் ; பேசுகிறாள்: ''அழா தேப்பா, தம்பி, அழாதே ! நீ நூறு எண்ணறதுக்குள்ளாற, நான் நம்ம வீட்டிலே வந்து நின்னுடுறேன், பாரேன் ராமையா, நம்ம அம்மாவையும் அப்பாவையும் நீதான் பத்திரமாகப் பார்த்துக்கிட வேணும். பயப்படாதேப்பா; அப்பா அம்மாவுக்கு ஒண்ணுமே ஆயிடாது !... எதுக்கும் மூணாவது வீட்டு சீதாப்பாட்டியைத் துணைக்கு வந்து இருக்கச்சொல்லேன் !...'' தோழிகளிடமும் விவரம்சொல்லி வீட்டுத் துயரத்தை வெளியிலே காட்டிக் கொள்ளாமல், சமர்த்தாகவே புறப்பட்டாள் பார்வதி !

# 18

பறந்து வந்த டாக்ஸி—டிஎம்எஸ் 3089, பறந்து விடாமல் நிற்கிறது; 'துட்டு கைக்கு கிடைத்து கையோடு பறக்கிறது.

உள்ளே பாய்ந்தாள் பார்வதி.

ஆத்மநாதனும் சிவகாமியும் சுரணை தவறிய நிலையிலே, பாயும் படுக்கையுமாகக் கிடந்தனர்.

நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்த பாச வெள்ளத்தில் சிக்கித் தடுமாறிக் கரைசேர மாட்டாமல் தவித்தும் ஏங்கியும் உருகியும், போராடிக்கொண்டே பெற்றோர்கள் இருவரையும் மாறி மாறி, மாற்றி மாற்றிப் பார்த்தாள்; பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

ராமையாவின் விம்மலும் நிற்கவில்லை.

"அப்பா!" என்று வீரிட்டாள்; தொடர்ந்து "அம்மா!" என்றும் அலறினாள்.

என்ன அநியாயம்!

அப்பாவும் சரி, அம்மாவும் சரி, அசையவில்லை! அசைந்து கொடுக்கவும் இல்லை.

அதே மகாலட்சுமித் தெருவின் தென்கோடியிலிருந்த ஸ்கூலிலிருந்து யதேச்சையாக தண்ணீர் குடிக்க வீட்டுக்கு வந்தது நல்லதாகப் போயிற்று. விதி, இல்லை, இல்லை, தெய்வம்தான் அவனை அந்நேரத்தில் இங்கே அனுப்பி வைத்திருக்கிறது இல்லாவிட்டால், விவரம் தெரியாமல் போயிருக்கும்; அப்பா அம்மாவை உயிரோடு பார்த்திருக்க

வும் முடியாது. 'எனக்குக்கூட அதிர்ஷடம் என்கிற ஒண்ணு இருக்குத்தான் போலே!—நன்றி சொல்ல ஒரு தெய்வ மாச்சும் இருக்கே?'—அலைகளின் ஆர்ப்பாட்டம் சகிக்க வில்லை!

பாட்டி வெடிகுண்டைத் தூக்கிப் போடுகிறாள்!

விட்டகுறையும் தொட்ட குறையும்போல, அம்மாவுக் கும் அப்பாவுக்கும் எழுதி வைத்த மாதிரி நாடித்துடிப்பு 'சிலேட்டுமம்' பேசி அடங்கிக் கொண்டே வருகிறதாம்!...

வந்த டாக்டரும் கைகளை அகலமாக விரித்தார்; ஆனாலும், இருவரும் தம்பதி சமேதராகப் பிழைத்தால் மறு பிழைப்புத்தான் என்ற மனித அபிமானத்தில் ஆளுக்கு ஓர் ஊசியைச் செலுத்தினார்: இன்னும் மூன்றே முக்கால் நாழிகை கழிந்தால்தான், தம்பதி சமேதராகவே நெஞ்சடைப்பு நோய்க்கு ஆளான அப்பா—அம்மாவின் உயிர் களுக்கு உண்டான தீர்ப்பைச் சொல்லமுடியும் என்றார்; விதிக்கு மருந்து கிடையாதெனவும் கூறினார். அவர் கடன் பணி செய்து கிடப்பது!—போயே விட்டார்.

பிற்பகலில் கூட, சூடு தணியவில்லை.

பார்வதி எதை நினைப்பாள்? எதை மறப்பாள்? எதைத்தான் மறுப்பாள்? 'நம்ப பாருக் குட்டியைத் திருமணக் கோலத்திலே தாலியும் மாலையுமாய் நாம ரெண்டு பேரும் பார்த்தால்தான், நம்ம ரெண்டு பேர் ஜீவனும் நம்மளோட உடம்பிலே நல்லலபடியாய் நிலைக்குமாக்கும்!' என்று அம்மாவும் அப்பாவும் நித்த நித்தம் செத்துச் செத்துப் பிழைத்த நெருக்கடி நிலைமையிலேயும் ஒருவருக்கொருவர் ஒரு நாளைக்கு ஓராயிரம் தடவையாகிலும் பகிரங்கமாகவும் ரகசியமாக வும் எச்சரிக்கை செய்து கொண்டார்களே? ஒருவேளை, அவர்கள் போட்ட புள்ளிக் கணக்குப் பிரகாரம்

அன்றைக்கே மயிலாப்பூர் பிள்ளையானுக்கு வாழ்க்கைப் பட்டு, நான் மாலையும் கழுத்துமாக அவர்கள் முன்னிலை யிலே தோன்றியிருந்தால், அவர்களுக்கு இப்படிப்பட்ட விதி எழுதிப்போட்டிருக்காதோ ?' — பார்வதி குமுறிக் குமுறி அழுதாள் ; புலம்பினாள் ! — தர்மத்தையும் சட்டத்தையும் விதியையும் மீறிக்கிட்டுச் சமூகத்திலே பேயாட்டம் போடுற வரதட்சணைக் கொடுமைக்கு நேர் முகமாக பலியாகிடப்படாதேன்னு நான் நினைச்சிருந் தேன்; ஆனா, அதே வரதட்சணைப் பிரச்னையே அப்பா வையும் அம்மாவையும் மறைமுகமாக இப்ப பலிவாங்கிக் கிட்டு இருக்குதே ? எனக்கு மட்டும் கடுகத்தனை நல்ல திர்ஷ்டம் இருந்திருந்தா, இது மட்டும் என்னைப் பெண் பார்க்க வந்த எத்தனை எத்தனையோ மாப்பிள்ளை களிலே ஒருத்தராச்சும் எனக்காகவும் என் அன்புக்காகவும் மட்டுமே என்னைக் கலியாணம் கட்டிக்கிட சம்மதிச்சிருக்க மாட்டாரா ?' நெஞ்சு வெடித்துவிடவில்லைதான் !

வெள்ளைப்பூனை சுற்றிச் சுற்றி வலம் வருகிறது.

பெற்றவர்களின் பாதக் கமலங்களில் அடைக்கலக் காதை படித்தான் ராமையா.

பார்வதிக்குச் சித்தம் பேதலிக்கப் போகிறதா, என்ன தெய்வத்தையும் தெய்வங்களையும் சபித்தவளின் இருதயத் திலே என்னவோ சுருக்கென்று தைக்கவே, விழிப்படைந் தாள் ; ஒருவேளை, நான் இப்ப, இந்த நிமிஷத்திலே அப்பாவும் அம்மாவும் கண்பார்க்க, நான் தாலியும் மாலை யுமாக கலியாணக் கோலத்திலே காட்சி தந்தால், ஒரு வேளை அவங்க ரெண்டுபேரும் ஒன்று போலவே மறுபிறவி எடுத்திடுவாங்களோ ?' மனத்தின் அடிவானத்தில் என்னவோ ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக மின்னியது மேனியின் சிலிர்ப்பு தொடர்க்காவியம் ஆனது. செந்திலை நினைந்தாள் ; 'பார்வதி, ஆபத்துக்கு மனசொப்பியும் மனசு இரங்கியும் எனக்கு நீங்க உதவினீங்க!...உங்களோட

உதவியை நான் உயிருள்ள வரையிலும் மறக்கவேமாட்டேன். உங்களுக்கு இந்த ஜென்மத்திலே நான் என்ன கைமாறு செய்யப் போறேனோ, தெரியவே இல்லீங்க !' செந்திலின் பேச்சை நினைத்தாள். போன உயிர் திரும்பின மாதிரி தோன்றிய ஆறுதலான ஓர் அமைதியை அவளால் உணர்ந்திட முடிந்தது. தாய்தந்தையாரை மீண்டும் ஒரு தரம் பார்த்தாள். தொட்டும் பார்த்தாள் அழுகை பீறிட்டது.

அப்பாவும், அம்மாவும் ஜோடியாகவே சித்து விளையாட்டுப் பயின்றவர்கள் மாதிரி, இன்னமும்கூட மூச்சை அடக்கிக் கொண்டு உயிர்ப் பிணங்களைப் போலவே காட்சியளிக்கின்றனர் ! —

'கடலே கதி' யென்று எதிர்ப்பங்களாவுக்கு ஓடினாள் பார்வதி. தொலைபேசியில் செந்தில்நாதனோடு தொடர்பு கொள்ள எண்ணி எண்களைச் சுற்றினாள். செந்தில் பேசவில்லை. அவனுடைய தகப்பனார் பேசினார். அவளுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. செத்துக் கொண்டிருந்தவர் பிழைத்து விட்டாரா ? தெய்வமே !— ''எங்க மருமகப் பொண்ணு பார்வதிதானே ? செந்தில் பையன் எங்கேயோ அவசரம்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடியே போயிட்டான், கல்யாணம் கழிஞ்சதும் கழியாததுமா, எங்க கையிலே சொல்லாமல் கொள்ளாமல்கூட அதுக்குள்ளாற என்னம்மா உங்க வீட்டுக்குப் போயிட்டே ? பொழுது படுறத்துக்கு முந்தியே இங்கே உன் வீட்டுக்கு— பங்களாவுக்கு வந்திடு, தாயே ! மகாலட்சுமியான உன்னைப் பத்தி ரொம்ப ரொம்பப் பெருமையாகச் சொன்னான் உன் புருஷன் ! — உன்னை ஆசை தீர நல்லாப் பார்த்துச் சந்தோஷப்படுறதுக்காக நானும் உன் மாமியாரும் துடியாய்த் துடிச்சுச்கிணு இருக்கோம்,'' என்றார்! — பேச்சைத் திசை திருப்பினாள் பார்வதி.

செந்தில் வந்தவுடன் தன்னை வீட்டில் வந்து உடனடியாகச் சந்திக்கச் சொல்லும்படி பெரியவரிடம் கேட்டுக் கொண்டாள்; "அவசரம், ரொம்ப ரொம்ப 'அவசரம்'' என்றும் நினைவு படுத்தினாள். வீட்டுக்கு வந்துதான் அவள் மூச்சுவிட்டாள்.

அம்மாவும் அப்பாவும் மயிரிழை கூட ஆடாமலும் அசையாமலும் மௌனமான உயிர்ப்பிண்டங்களாகக் காட்சி தந்தபடியே, ஜீவ மரணப் போராட்டத்தை இன்னமும்கூட நடத்திக் கொண்டுதான் இருக்கின்றனர்!— இவர்கள் இரண்டு பேருக்கும்தான் எத்தனை ரோஷம், வீம்பு வைராக்கியம்!...

மணி : 2-20

டாக்டர் வைத்த கெடு நெருங்கிக் கொண்டிருந்தது!....

நிற்கவோ, நிலைக்கவோ நேரம் ஏது? உயிர்க் கழுவில் துடித்தவளாக உட்புறம் விரைந்தாள். கலவரமான சத்தங்களுக்கு நடுவில், அவள் தேடியவை இரண்டுமே சோதனை நடத்தாமல் கிடைத்தன! ஒன்று; காஞ்சிபுரம் பட்டுச் சேலை; சன்னமான ஜரிகை போட்டது; எலுமிச்சை நிறம். இரண்டு: மஞ்சள் துணுக்கு முடிந்த தாலிக்கயிறு! வெளிப்புறம் திரும்பினாள். 'வாழ்க்கையோட விதியும் வினையும் வேடிக்கையாகத் அமைஞ்சிடுது கமலி தன்னோட கல்யாணத்துக்காக எனக்கு எடுத்துத் தந்தது இந்தப் பட்டு; மஞ்சள் தாலிக் கயிற்றை ஒருசமயம் அறுபத்து மூவர் திருவிழாவிலே விளையாட்டாக ஐம்பது காசு கொடுத்து வாங்கினேன்!' ஈரம் அவள் அப்போது அணிந்திருந்த எலுமிச்சை நிறச் சோளியிலும் வழிந்தது.

கணங்கள் பேய்க் கணங்களாக உருமுகின்றன.

தேடிப் போகாத பச்சை மூலிகையாகத் தேடிவந்து சிக்கினான் முருகையன்.

‘‘தம்பி, அர்ஜெண்ட்; பாண்டிபஜாருக்குப் போய், இரண்டு பெரிய கல்யாண மாலை வாங்கிகிட்டு வேகமா வா’’ என்றாள் பார்வதி. பணத்தை எடுத்துக் கொண்டு வந்த போது, அவள் முருகையனைக் காணவில்லை. ஆனால் ஊதுவத்தி மணத்தைக் கண்டாள். தெய்வத்தை மட்டிலும் காணமாட்டாளோ ?

# 19

ஆஹா !...

தேடி வருகின்ற தெய்வமாகத் தெய்வமனிதன் ஒருவன் மனம் இரங்கியவனாகக் காரிலிருந்து இறங்கி வருகிறான். ஜரிகை வேட்டியும் பட்டுச் சட்டையும் இன்னமும் பளபளக்கின்றன ! — காலம் கெட்ட இந்தக் கலிகாலத்தில், மனிதர்களையும் தரிசிக்க முடிகிறது ?

டால்ஃபின் தளதளக்கிறது !

''செந்தில், வந்திட்டீங்களா ?''

''வந்திட்டேனே !''

அழுகையை மறந்து சிரித்தாள் பார்வதி; மனம் திறந்து சிரித்தாள் ; வாய் திறக்காமலும் அவள் சிரிப்பாள் ! இப்போது, முதல் முறையாக அவனை ஏற இறங்கப் பார்த்தாள். ''செந்தில், என்னைக் கண்டதும் பயந்திட்டீங்களா ? உங்க முகம் வெளிறிப் போயி ருக்குதே ?'' என்று விசாரணை நடத்தினாள். ''சரி, சரி. வெட்கப்படாமல் நல்ல பிள்ளையாக நில்லுங்க. ஆமா, நெற்றிக்குச் சிகப்புக் குங்குமம் இட்டுக்கிடுற பழக்கம்கூட உண்டா உங்களுக்கு ? பாவம், அங்கே அவசரத்திலே கோணல் மாணலாக இட்டுக்கிட்டு ஓடியாந்திருக்கீங்க !'' என்று பேச்சைப் பின்னினாள்.

முகத்தை எத்தனை தடவைதான் துடைத்துக் கொள்வான் அவன் ? வேர்வை நேரம் காலம் புரியாமல் இப்படியும் ஆடிப் புனலாக ஓடி வருமா ? என்னவோ சிந்தனையில் எங்கேயோ வெறித்தவன், சடக்கென்று திரும்பி, ''பார்வதி, அங்கே ஒரு மாட்டுத் தொழுவம் இருந்திச்சுது இல்லையா ?'' என்றான்.

''பரவாயில்லையே ? ஞாபகம் வச்சிருக்கீங்களே ? அதுக்கு இப்ப தேவைஇல்லை; பிரிச்சுப் போட்டாச்சுங்க!',

''அடடே !'' — பச்சாத்தாபம்.

இருந்திருத்தாற் போலச் சிரித்தவள், இருத்திருந்தாற் போலே, விம்மினாள் !

ரோஜாப்பூ என்றால் செந்திலுக்குக் கொள்ளை ஆசை ஆயிற்றே ? இப்போது மறந்து விட்டானே ? — ''பாரு ! என்று விளித்துப் பதறினான் செந்தில் ; அழகான முகம் வெளிறிக் கிடந்தது !

அப்போது, இரண்டு மாலைகளும் இரண்டு கைகளு மாகத் தோன்றிய முருகையன், புன்னகையுடன் செத்திலுக்கு 'சல்யூட்' மரியாதையைச் செலுத்தினான்.

பார்வதி பதட்டமும் பரபரப்பும் அடைந்தாள் ; ''செந்தில் ! நீங்க உங்க வீட்டிலே, ஊகூம், பங்களாவிலே இரண்டு மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட ஒரு ஜீவ நாடகத்தை எனக்குக் காண்பிச்சீங்க ; இப்ப நான் என் பங்களாவிலே, ஊகூம், வீட்டிலே அதே அச்சான இரண்டு மானுடப் பிண்டங்கள் சம்பந்தம் கொண்ட ஒருஜீவிதக் கூத்தை உங்களுக்குப் காட்டப் போறேனுங்க ! என் பின்னாலே வாங்க !'' என்றாள். தம்பிமார்களையும் கூப்பிட்டுக் கொண்டாள்.

நடை வளர்கிறது.

ஏழைமை பூத்துக் குலுங்கிய மிகச் சிறிதான நடுக் கூடத்திலே, மிகப் பெரிதான மனித உயிர்ச் சடலங்கள் இரண்டு ! ஜோடி சேர்ந்த நிலையிலேயே விதியாலோ வினையாலோ நெஞ்செலும்புகள் நொறுங்கிட அடித்துப் போடப்பட்ட மாதிரி, பேச்சு மூச்சு இல்லாமலும் நெஞ்சடைப்பு நோயும் கிழிசல் பாயுமே கதியென்றும்

சதமென்றும் போடப்பட்டது போட்டபடி கிடக்கிறார்கள் !

''பாரு !'' விம்மினான் செந்தில்நாதன்.

பார்வதி அதிசயமாக ஆறுதல் அடைகிறாள். செந்திலைத் துருவினாள் ; பார்த்தாள் ; பார்வையிட்டாள் ; பகலிலே நீங்க எனக்குப் பிரதி உபகாரம் செஞ்சா, அதிலே என் அபிமானமான எந்தவகை ஆறுதலையும் காணாது ; என் மனசு அப்படி ; ஆகச்சே, நீங்க எனக்குச் செய்யப்போற செய்யவேண்டிய உதவி முதல் உதவியாகவே இருக்கணும். சரிதானே ? சொல்லுங்க, செந்தில் !'' வேண்டினாள்.

''உங்க இஷ்டம் ...''

''ஓ. கே ! ... இங்கேயும் ஒரு திருக்கல்யாணம் நடக்கப் போகுதுங்க ; நீங்க இரண்டாவது தடவையாகவும் மாப்பிள்ளை வேஷம் போடப் போறீங்க ; நானும் இரண்டாவது முறையாக மணப்பெண் கோலம் ஏந்திடப் போறேனுங்க ! ''ஷூட்டிங்கிலே நடக்கிறமாதிரி, எல்லாம் 'டக்டக்'னு டக்கராவே நடந்தாகணுமுங்க !''

''ஓகே !... என்னை உங்களுக்கு மாப்பிள்ளையாக ஆக்ட் பண்ணச் சொல்றீங்க...அப்படித்தானே ?...ஓ. கே!''

பார்வதியின் பொன்னார்மேனி ஏன் அப்படி நடுங்குகிறது ?

பரத நாட்டியத்தை ரசிப்பவனை கட்டாயத்தின் பேரில் டிஸ்கோ நடனத்தை ரசிக்கச் செய்தால், அவன் அழுது வடிய மாட்டானா ?— அதே கதையாகவும் காரணமாகவும், வினாடிகள் சில அப்போதைக்கு அழுது வடிகின்றன.

''நான் ரெடி !'' என்று கூறியவாறு வந்து நின்றாள் பார்வதி.

''நானும் ரெடிதான்!'' என்றான் செந்தில். மாப்பிள்ளை முறுக்கோடு தோன்றினான் மாப்பிள்ளை யென்றால், சாமன்யமான மாப்பிள்ளையா ?— சிரஞ்சீவி மாப்பிள்ளை ! தலையை நிமிர்த்தி, விழிகளை உயர்த்தி எதிரே நின்றவளை எதிர்கொண்டு நோக்கினான்; அவன் மெய்சிலிர்த்தான்; மெய்மறந்தான் 'காஞ்சிப்பட்டிலே காஞ்சி காமாட்சி மாதிரியே தரிசனம் தராங்களோ பார்வதி ?... கையெடுத்துக் கும்பிட்டா என்னவாம் ?''— கூப்பாட்டுச் சத்தம் எதிரொலிக்கவே, தன் நினைவு பெற்றுத் திரும்புகிறான்.

திரும்பத் திரும்ப ''அம்மா !... அப்பா !'' என்று கூப்பாடு போட்டாள் பார்வதி.

ஊஹூம் !....

பெற்றோர்களின் காலடியல் நெடுஞ்சாண்கிடையா விழுந்து புரண்டு கதறினாள் பார்வதி: ''நீங்க ரெண்டு பேரும் ஆள்மாற்றி ஆள் நொடிக்கு நூறுவாட்டி நோய் நொடியில் படுத்துக்கிட்டு என்னைச் சோதிக்கலையா? நான் ஒருவாட்டி உங்களைச் சோதிச்சதுக்காக இத்தனை தொலைவுக்கு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணுகூடி அழுச் சாட்டியம் செஞ்சா, அது தெய்வத்துக்கு அடுக்குங்களா ? அப்பா...அப்பா !... ''காலங்காலமா நீங்க ஆசைப்பட்ட மாதிரியே உங்க பாருக்குட்டி, இதோ, திருமணக் கோலத் திலே அழுது துடிச்சுக்கிட்டு இருக்காளே ?— கண்ணைத் திறந்து பாருங்களேன் !... அம்மா...என்னைச் சுமந்த தெய்வமே !... உன்னோட கனவுப் பிரகாரம், நான் கல்யாணப் பெண்ணாக மாலையும் கழுத்துமாய் நிற்கிறதையும், வெறும் பணத்துக்காகவோ, அற்பத்தன மான வரதட்சணைக்காகவோ இல்லாமல் எனக்காகவும் என்னோட துல்லியமான அன்புக்காகவும் மட்டிலுமே எனக்குத் துணை இருக்க முன் வந்த சமூகப் பிரக்ஞை

கொண்ட உண்மையான ஒருமனிதன் எனக்குத் தாலிகட்டப் போறதையும் பார்த்துப் பரமானந்தம் அடையவாவது உங்களோடு கண்கள் திறக்கப் படாதா ?'' அலறினாள் ; கதறினாள் ; பதறினாள்.

பலன் : பூஜ்யம்

ஆனாலும், திருவாளர் ஆத்மநாதனுக்கும் திருமதி ஆத்மநாதனுக்கும் இவ்வளவு வைராக்கியம், வீம்பு, ரோஷம் கூடவே கூடாது !

மறுகணம் —

பார்வதி வெறிமூண்டு உள்ளே பாய்ந்து, பூஜைஅறைப் படங்கள் அத்தனையையும் வெளியே சுமந்து வந்தாள். "என்னை பெற்ற புண்ணிய ஆத்மாக்களோடு நெஞ்சை நெகிழ்ந்து இளகச் செய்யாத எந்த ஒரு தெய்வத்துக்கும் இந்த வீட்டிலே இடம் கிடையாதாக்கும் !'' சத்தியக் குரல் எழுப்பிக் கொண்டே, எல்லாத் தெய்வங்களையும் அப்படியே தரையிலே போட்டு உடைத்தாள்.

தெய்வங்களின் குரல்கள் மண்முட்டி விண்முட்டி யிருக்க வேண்டும் !

செந்தில் வியப்பு மேலிட, "பாரு ! அங்கீட்டுப் பாருங்க உங்க அப்பா அம்மாவோட கண்கள் திறந்து விட்டன !'' என்று கூவினான்.

பாருக்குட்டி ஆனந்தத் தாண்டவம் ஆடினள். பார்வதிக்குத் தெரியாத கூத்தா? — பெற்ற தாயையும் தந்தையையும் உற்ற பாசத்தோடும் பரிவோடும் தொடுத்த விழிகளை எடுக்காமல் பார்த்தாள் ; அவர்கள் இருவரை யும் விழுங்கி விடுகிற பாவனையில் மாறிமாறியும் மாற்றி மாற்றியும் அப்படிப் பார்த்தாள். "அம்மா !'' என்று

கூவினாள்; ''அப்பா'' என்று கூப்பிட்டாள்! — ''நீங்க ரெண்டு பேரும் என்னை — உங்க பாருக்குட்டியை மாலையும் கழுத்துமாகப் பார்க்கவேணும்னு காலம் காலமாக ஆசைப்பட்டீங்க... அதுக்காகவேதான், நான் இதோ மாலையும் கழுத்துமாக வந்து நிற்கிறேன். அன்பாக எனக்காக என்னோட பரிசுத்தமான அன்புக்காகவும் என்னை மனப்பூர்வமாகவும் சுத்தமான மனசாலேயும் நேசிச்ச பெரிய இடத்தைச் சேர்ந்த உயர்ந்த உண்மையான ஒரு நல்ல பிள்ளையை மாப்பிள்ளையாகவும் ஏற்றுக் கிட்டேன்; இந்தாப் பாருங்களேன்... அவர் என் பக்கத்திலேயே ஒற்றைக் காலிலே தவம் செஞ்சபடி நின்னுக்கிட்டிருக்காருங்களே!... பார்த்தீங்களா, அப்பா? பார்த்திட்டியா அம்மா?'' — ஆனந்தமாக ஆடினாள், கூத்தாடினாள் பார்வதி.

ஆத்மநாதனும் சிவகாமியும் திறந்த கண்களை மூடாமல் அன்புத் திருமகளைப் பார்த்தார்கள்; பார்த்துக் கொண்டிருந்தார்கள்? கதிர் முத்தங்கள் இருவருக்கும் முத்தம் கொடுத்த வண்ணம் இருந்தன.

செந்திலை அழைத்தாள் பார்வதி.

நெருங்கி வந்தான் செந்தில்.

''முகத்தில் சுரத்து இல்லாமல் என்னவோமாதிரி நிற்கிறீங்களே, செந்தில்? ஒண்ணும் விசேஷம் இல்லையே நீங்க இப்ப இந்த எளிய வீட்டுக்கும் பணக்கார மாப்பிள்ளை என்னோடு நல்லா ஒட்டிக்கிணு நில்லுங்களேன்!'' என்று குதூகலத்தோடு சொல்லிக்கொண்டே, இடுப்பிலே ஒளித்து வைத்திருந்த மஞ்சள் தாலியை எடுத்துச் செந்திலிடம் சமர்ப்பித்தாள். அவனுடைய தளிர் விரல்கள் அவளது பூ விரல்களைத் தீண்டியிருக்கலாம். அவள் மறுகணத்தில் திகைத்தாள். அவனுடைய

வலது கைச் சுட்டுவிரலைத் தொட்டாள். நகக்கண்ணிலே ரத்தக்கறை தரிசனம் தரவே திடுக்கிட்டாள். கன்னிமனம் கனிந்திட கயல் விழிகள் கசிகின்றன. ''ஐயையோ, விரல் பலமா அடிபட்டுப் போச்சு ரத்தக்கறை இன்னமும் மறையக் காணோமே? நான் அப்பறம் இதுக்கு முதல் உதவி செய்கிறேன்,'' என்று சொல்லி, எச்சிலைத் தொட்டு ரத்தக்கறையை அழித்தாள். ''ஆல்ரைட்... அட்டென்ஷன் ப்ளீஸ்!'' — ஓரவிழி காட்டி ஆணை கூட்டினாள், கெட்டிமேளம்...கெட்டி மேளம்!'' என்றாள் அப்பா — அம்மாவுக்கு, ஆணைச் சத்தம். கேட்கவேண்டும் அல்லவா?

என்ன ஆச்சர்யம்!

கெட்டி மேளம் கொட்டி முழங்கியது.

நாதசுரம் கொட்டாமலே முழங்கியது

அம்முக்குட்டி 'டேப் ரெகார்டருடன் நின்றாள்.

''அக்கா, அக்கா! சுற்றிலும் பாருங்க; உங்களோட பூஜை அறைத் தெய்வங்க எல்லாம் உங்களை ஆசீர்வதிக்கக் காத்திருக்குது சேவிச்சுக்கிடுங்க!'' — முருகையன்!

ராமையாப் பயலுக்கு வாயெல்லாம் பல்.

கூப்பிய இரு ஜோடிக் கரங்களும் கூப்பியபடியே இருந்தன.

இத்துணை சந்தோஷத்தையும் இத்தனை நாட்களாக இந்தப் பாருக்குட்டி எங்கே ஒளித்து மறைத்து வைத்திருந் தாளோ?— ''அப்பா...அம்மா! உங்க இரண்டு பேரையும் திரிகரணசுத்தியோட நானும் மாப்பிளையும் கும்பிட்டுக் கிடுறோம். மாலையும் கழுத்துமா நிற்கிற உங்க பாருக் குட்டிக்கு உங்க மாப்பிள்ளை தாலிகட்டப் போறார்!

கண்கண்ட மனித தெய்வங்களாக இருந்து எங்களை —தம்பதி சமேதரான எங்களை மனப்பூர்வமாய் ஆசீர் வதியுங்கள்! — நீங்க ரெண்டு பேரும் ஏன் அப்படிப் பார்க்கிறீங்க? — நான் இஷ்டப்பட்ட கல்யாணமாக்கும் இது! — ஆமாங்க; இது உண்மையான, சத்தியமான, தருமமான கலியாணமாக்கும்!....ம் ஆசீர்வதியுங்க!''

மணமகனும் மணமகளும் திருமண மாலைகளை மாற்றிக் கொண்டார்கள்,

கெட்டிமேளம் முழங்கியது.

திருப்பூட்டி முடிந்தது.

'நல்ல விளக்கு', அதீதமான ஒளியைச் சிந்திக் கொழுந்துவிட்டு எரிகிறது!

ஆத்மநாதனும் சிவகாமியும் தங்களுக்குள்ளே அந்த ரங்கத்தைப் பேசி வைத்திருந்தவர்கள் மாதிரி, ஒரே நேரத்திலும் பாவனையிலும் கைகளைத் தூக்கியெடுத்து உயர்த்திப் புதுமணத் தம்பதியை புதிய மனத் தம்பதியைப் பூரிப்புத் துலங்கிட ஆசீர்வாதம் செய்கின்றனர்!

அடுத்த வினாடியில் —

இரு ஜோடிக் கரங்களும் ஜோடி பிரியாமலே தொய்ந்தும் சாய்ந்தும் விழுந்துவிட்டன ....!

சோதனை! ... சோதனைதான் ....

''அம்.. மா!'' என்று கதறினாள் பார்வதி. 'அ...ப்பா' என்று அலறினாள் அவள். இஷ்ட தெய்வங்களின் காலடியை விட்டெழுந்து, ''ஐயையோ பாழாய்ப்போன தெய்வமே'' என்று விம்மி வெடித்த வண்ணம் நடந்து, அந்தத் தெய்வ மணிக்கரங்களை எடுத்து கண்களிலே ஒற்றிக் கொண்டு, குமுறிக் குமுறி அழுதாள்; கதறிக் கதறிப் புலம்பினாள். மண்டையிலே அடித்துக் கொண்டு ஓலமிட்ட ராமையாவை கட்டிப் பிடித்து அணைத்துக்

கொண்டாள்; ''தம்பிப் பயலே நீ ஏன்டா அழறே? உனக்குத்தான் அக்கா நான் இருக்கேனே? எனக்கும் கமலிக்கும் தானே அப்பாவும் இல்லே; அம்மாவும் இல்லாமல் போயிடுச்சி;'' என்று அவனைத் தேற்றிக் கொண்டே, தான் மட்டும் தேற முடியாமல் ஓலம் பரப்பினாள் பார்வதி. அவளைப் பெற்ற தாய்க்கும் அவளை வளர்த்து ஆளாக்கிய தந்தைக்கும் வந்த நெஞ்சுவலி அவர்களின் செல்வ மகளான அவளுக்கும் வந்து தொலைத்ததோ? — நெஞ்சைப் பற்றித் தேய்த்துக் கொண்டாள். உயிர்ப் பகுதியில் விரல்களை வைத்துப் பைத்தியக்காரி மாதிரி வெறியுடன் அழுத்தியவள், மறு இமைப்பில் மயங்கிச் சாய்ந்தாள்.

''செந்தில், ''பாரு!'' என்று வீரிட்டுக் கூப்பாடு போட்டான்; தன்னுடைய அருமையான உயிரை யாரோ சிறைப்பிடித்து அடைத்துவிட்ட உணர்வில் அவன் தவித்தான்; ஏங்கினான்! — மிஸ் பார்வதியை அழ வேண்டாம் என்றேன்; அழக்கூடாது என்றும் கெஞ்சினேன். அழாதீங்க, பாரு, அழாதீங்க! நீங்க இப்படி வாய் ஓயாமல் அழறதைக் காணக் காண எனக்கு நெஞ்சு பொறுக்கல்லேங்க, உங்க துயரத்தையும் துன்பத்தையும் என்னாலே தாங்கிக்கிடவே முடியல்லீங்க, பாரு! ... என் பேச்சைத் தட்டிப்பிட்டு நீங்க இப்படியே இன்னும் கொஞ்ச நாழி கூக்குரலிட்டால், அப்பாலே, உங்க அப்பா அம்மாவுக்கு வந்த நெஞ்சுவலி உங்களுக்கும் வராமல் தப்பாதுங்க!' அப்படின்னு கெஞ்சிக் கூத்தாடினேனே? — என் பேச்சைக் கேட்காமலே சாய்ந்து விட்டார்களே பார்வதி? விம்மினான் அவன்; ஓடியவன் சடுதியிலேயே நின்றான். பார்வதியை அப்படியே வாரியெடுத்து மடியிலே போட்டுக் கொண்டு அவள் நெஞ்சிலே தடவிக் கொடுக்க வேண்டுமெனவும் துடிதுடித்தான் அவன்' துடிப்போடு துடிப்பாக, அவனுடைய கடமை உணர்வு துடிதுடித்ததோடு சரி! — 'நான் பாவி

ஆகிட்டேனே? நான் துர்ப்பாக்கியசாலியாக ஆகிட்டேனே நான் ?' — அவனும் நெஞ்சை பிசைந்து கொள்கிறான் ஒரு மாத்திரைப் பொழுது கழிந்ததும், அவன் பார்வதியை உடலும் உள்ளமும் அதிர்ந்து குலுங்க அண்டினான்; அவள் கால்மாட்டில் குத்துக்காலிட்டுக் குந்தியவாறு, அவளுடைய பொற் பாதங்களை பொற்புமிக்க பாதங் களை நடுங்டும் விரல்களை நடுங்காமலே தொட்டான் : என் அப்பாவும் அம்மாவும் செத்தவங்க பிழைச்சிட் டாங்க ; அதுமாதிரி பார்வதியை பெற்றவங்களும் பிழைச்சிருக்கப் படாதா?— பாவம், பார்வதி !'

புதிதான தொட்டுணர்விலே, புதிதாகப் பிறந்தவள் போன்றே, பார்வதி புதிய பாவனையுடன் எழுந்தமர்ந் தாள். செந்திலை நேர்கொண்ட பார்வையால் அளந்த படி, "நீங்களா ?" என்றாள். கண்களில் பனி பெய்கிறது.

செந்தில் சின்னப் பையனாகச் செருமினான். 'பாரு ! பாரு !... நீங்க மயங்கிச் சாய்ந்த நொடிப் பொழுதிலே, என் உயிரே போயிட்ட மாதிரி நான் தவிச்சுப் போயிட்டேனுங்க, பாரு !" என்றான்.

பார்வதிக்கு விம்மத்தான் தெரிந்தது !

நடுக்காட்டில் கண்கட்டை அவிழ்த்துக் கொண்ட வனாக முருகையனின் அரவணைப்பில் சோகமே உருவாக அமைதி பூத்துக் காணப்பட்டான் ராமையா ; அக்கா பார்வதி எழுதிக் கொடுத்த அவசரத் தந்தியைக் கமலி அக்காவுக்கு அனுப்புவதற்கு அவசரமாக வெளியே ஓடினான்.

# 20

காலத் தேவனுக்கு இப்போது கொள்ளிவாய்ப் பிசாசாக வேடம் கட்டிக் கொள்ள வேண்டுமென்ற வக்கிரப் புத்தி தோன்றியிருக்க வேண்டும்.

செந்தில் கெட்ட சொப்பனம் ஏதாகிலும் கண்டு விட்டானோ? வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்! தடுமாற்றமும் தவிப்பும் தோன்றியது போலவே மறைய லாயின. நிதானம் அடைந்தான்; மணிக்கட்டில் காலத் தேவனை சந்தித்தவன், எதிர்ப்புறத்தில் தெருவாசலில் பார்வையைச் செலுத்தினான். பெருமையாகவும் பெரு மிதத்தோடும் ஓர் அரைக்கணம் அவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்; காரியசித்தியின் வெற்றிக்களிப்பு அந்தச் சிரிப்பிலே கடமை தவறாமல் கொடிகட்டிப் பறந்தது. தன்னுணர்வு அடைந்ததுதான் தாமதம்; அவன் கண்கள் மீண்டும் கலங்கத் தொடங்கின!— 'ஆமாங்க' இது உண்மையான—சத்தியமான—தருமமான கலியாணமாக்கும்; ஓ மிஸ் பார்வதி சொன்னார்கள்!

காடவிளக்கின் தலைமாட்டில் ஆத்மநாதன் — சிவகாமி தம்பதியர் இன்னமும் கூட தம்பதி சமேத ராகவே கண் அயர்ந்து கொண்டிருக்கிறார்களே?

மேலே சிட்டுக்குருவி.

கீழே வெள்ளைப்பூனை'

உடலும் உள்ளமும் அதிர்ந்து குலுங்க அண்டினான்; அவள் கால்மாட்டில் குத்துக்காலிட்டுக் குந்தியவாறு, அவளுடைய பொற்பாதங்களை பொற்புமிக்க பாதங் களை நடுங்கும் விரல்களை நடுங்காமலே தொட்டான்: 'என் அப்பாவும் அம்மாவும் செத்தவங்க பிழைச்சிருக்கப் படாதா? — பாவம், பார்வதி!'

மோகினிச் சிலையின் அழகு முகமும் அழகுக் கண்களும் அழகாகவே வீங்கிக் கிடக்கின்றன ; தளிர் விரல்களோ, மார்பகத்தில் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த மஞ்சள் தாலியோடு கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன!— என்னவோ அரவம் !— யார் செந்தில் அல்லவா ?

''பார்வதி, நான் புறப்படுறேனுங்க!''

''ஊகூம் ; நீங்க புறப்படக் கூடாதுங்க, செந்தில்!''

''என் கடமைதான் முடிஞ்சிட்டுதே?''

என் கணக்குப்படி, உங்க முதல் உதவி தான் இப்போ முடிஞ்சிருக்கு ; ஆனா, உங்க கடமை இனித்தான் ஆரம்பமாக வேணுமுங்க !— நீங்க எங்கழுத்திலே கட்டின மஞ்சள் தாலியிலே பூசின மஞ்சளோட ஈரம் இன்னங்கூட காயலீங்களே ? அதுக்குள்ளே, எங்கே புறப்பட்டுட்டீங்க ?... ஏன் புறப்படுறீங்க ?''

செந்தில் விரக்தியின் வேதனையைத் தாளமாட்டாமல் ஒப்பனைக்காகச் சிரிக்க முயற்சி செய்கிறான் ; நெற்றித் திட்டில் ரத்தச் சிகப்பாகப் பளிச்சிட்ட குங்குமத்தைக் கைவிரல்கள் தடவிப் பார்க்கின்றன. எச்சரிக்கையோடு வாசலை மறுபடியும் பார்த்தான். அவன் எதிர்பார்த்திருந்தபடி, வெளிப்புறத்திலே போலீஸ் ஜீப் வந்து நின்றதைப் பார்த்ததும், அவன் மறுமுறையாகவும் வெற்றிச் சிரிப்பு சிரித்தான். இப்போது அவன் பார்வதியைப் பார்வையிடலானான். ''மிஸ் பார்வதி! நீங்களுமா இப்போது என்னைச் சோதிக்க வேணும் ?'' என்று கேட்டான்.

பார்வதி ஈரல் குலை நடுங்கத் திடுக்கிட்டாள். ''மிஸ் பார்வதியா ? இப்ப நீங்கதானே என்னை சோதிக்கிறீங்க, செந்தில்?'' தொண்டை அடைக்கிறது.

"வாஸ்தவந்தான் ; நான்தான் இப்போ உங்களைச் சோதிக்கிறேன், மிஸ் பார்வதி !"

"நான் ஒண்ணும் மிஸ் பார்வதி இல்லீங்க, செந்தில்!- நான் யார் தெரியுங்களா ?.... நான்-..நான் மிஸஸ் பார்வதி செந்தில்நாதன் !" கம்பீரமான விம்மலுடன் தொடர்ந்தாள் : சாவோட சந்நிதானத்திலே உயிருக்கு மன்றாடிக் கிட்டிருந்த என் அப்பா-அம்மாகிட்டே மாலையும் கழுத்துமாக உங்க பக்கத்திலே மணக்கோலத்திலே நின்ன நான் கொடுத்த அந்தச் சத்தியவாக்கிலே இன்னமுமா உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாமல் போயிடுச்சு?... செந்தில் ! நீங்க எப்போதுமே இனி என்னோட செந்தில்தானுங்க ! இந்த ஒரு விஷயத்திலேயாச்சும் என் இஷ்டப்படியே நான் அதிர்ஷ்டக்காரியாக ஆகியிருக்கேனே, அதுவே போதுமுங்க !"

"பாரு! பாருக்குட்டி!"

உணர்ச்சிகள் புதுவெள்ளமெனச் சுழித்திடப் பார்வதியை அப்படியே வாரியெடுத்து நெஞ்சோடு நெஞ்சாகவும் உயிரோடு உயிராகவும் அணைத்துக் கொண்டு கட்டுக்குள் அடங்காத ஆனந்தக் களிப்போடு விம்மி வெடித்தான் செந்தில்.

பார்வதிக்கு மட்டும் விம்மி வெடிக்கத் தெரியாதா என்ன ?

சுகமான ராகம் சுகமாகவே விளையாடுகிறது.

இப்போதாகிலும், செந்தில் ஆசை தீரப் பேசியாக வேண்டும்...

"பார்வதி! போன வருஷத்திலே நடந்த அனைத்துக் கல்லூரி பேச்சுப் போட்டியிலேதான், நான் உன்னை முதன் முதலாகக் கண்டேன் ! உன் பேரிலே கொண்ட காதலையே முதல் காதலாகவும் கடைசிக் காதலாகவும்

முதல் மரியாதையோடு மதிச்சும் நம்பியும் நான் நல்ல காலத்துக்காகத் தவம்இருந்தேன்; விதி செஞ்ச பிழையினாலே, நான் இப்படிப்பட்ட பெரிய இடத்துப் பிள்ளையா ஏன் பிறந்தேன்னுகூட சமயங்களிலே என்னை நானே நொந்துக்கிட்டதும் உண்டு!—நான் சீமான்மகன் தான்; ஆனாலும், ஏழை பாழைங்கதான் என்னோட உலகமாகவும், எனக்கு உலகமாகவும் இருந்து வர்றாங்க; இது சத்தியமான உண்மை. இதைப் பட்டணத்துப் பணக்கார வட்டாரம் பூராவுமே அறியும்! சரி, விஷயத்துக்கு வந்திடுறேன். பெரிய இடங்கள் எல்லாத்திலேயும் பெரிய பிரச்னையாவே இருந்துக்கினு வருற வரதட்சணை கொடுமைக்கு நானும் விலக்கு விதியாக இருக்க மாட்டேன்னு கருதியோ என்னமோ, உன் பேரிலே மாறாத உள்ளன்பை வச்சுக்கிட்டிருந்த என்னையும், நான் உனக்கு அன்பான நம்பிக்கையோடு சேலத்திலிருந்து எழுதின காதல் கடிதத்தையும் நீ உதாசீனம் செஞ்சிட்டே! என்றாலும் என்னோட முதல் காதல் எப்படியும் வெற்றி பெறும் என்கிற நம்பிக்கை என் மனசிலே எப்பவுமே இருந்து வந்திச்சு. அதனாலேதான், வழக்கமான என்னோட சமூக நலச் சேவைகளிலே மனசைச் செலுத்தி ஆறுதல் அடையவும் முடிஞ்சுது. இடையிலே குறுக்கிட்ட தாராவை நீயும் மறந்திடு!...இனி என்னாலே பேச முடியாது!...ஒண்ணை மட்டும் சொல்லி முடிச்சிடுறேன்; உண்மையும் தருமமுமான சத்தியத்தைத் தேடித்தேடி அலைஞ்சு திரிஞ்சுக்கிட்டு இருக்கிற எனக்கு நீயே ஒரு சத்தியமாக ஆகியிருக்கிறது நான் இந்த ஜன்மத்திலே செஞ்ச பாக்கியம்தான்!...அன்பே வடிவமான உனக்காகவும், உன்னோட பரிசுத்தமான அன்புக்காகவும் மாத்திரமே, நான் உன்னை என்னோட மனசாலும் உயிராலும் உணர்வாலும் சதாசர்வகாலமும் உன்னையே—உன் ஒருத்தியையே பாசத்தோடவும் பந்தத்தோடவும், ஏன் பக்தியோடவும் கூட நேசிச்சுக்கிட்டிருந்த எனக்கு இந்த மண்ணுக்குச் சொந்தம் கொண்டாடுற

எளியவனுக்கு ஒரு தேவலோகத்துப் பாரிஜாதப் பூ சொந்தபந்தம் என்கிற உரிமையான உறவு முறையிலே கிடைக்கிறதென்றால் அந்தப் பாக்கியத்துக்குப் பூர்வ ஜென்மப் பந்தமே தான் காரணமாக இருக்கவும் வேணும்! ஆஹா! நான் கூட பூர்வ ஜென்மத்திலே புண்ணியம் செஞ்சிருக்கத்தான் வேணும்! ஆமா பார்வதி ஆமாம் !...

பார்வதி உருகினாள் ; உருகுகிறாள் :

''செந்தில் !...மைடியர் மோஸ்ட் செந்தில் !...''

புதிய உலகத்தில் மிதந்து, தன்னை மறந்த நிலையிலே மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்த பார்வதி, பழைய உலகத்திற்கு மீண்டவுடன் மீண்டும் ரத்தக் கண்ணீர் பெருக்குகிறாள்....

# 21

**சோ**தனைதான் !...

வாசலில் ஒலித்த ஜீப்பில் குழல் ஒலி கூடத்திலே எதிரொலித்தது.

பரபரப்படைந்தான் செந்தில்; பார்வதியின் உஷ்ண மான உயிர்மூச்சை அனுபவிக்க ஆசைப்பட்டவனைப் போன்று, அவளை—தன்னுடைய இனிய பாதியை—தன் னுடைய அன்புப் பார்வதியை அன்போடும் ஆசையோடும் நெருங்கினான். பிறை நெற்றியில் பிசிறு தட்டிக் கிடந்த சுருள் முடிகளை நீவிவிட்டுச் செம்மைப் படுத்தினான். நெற்றியில் கலையாமலும் கலைந்து விடாமலும் அழகு காட்டிய சிவப்புக் குங்குமத்தைப் புதிய நம்பிக்கையோடும் புத்தம் புதிதான மனத் தெம்போடும் அழகு பார்த்தான். ஒழுங்கோடும் முறையோடும் நிதானத்தைக் கடைப்பிடித் தான். அவன் நெஞ்சு குலுங்கினால் என்ன? அவன் குலுங்க மாட்டான்; குலுங்கவே மாட்டான்!— அவளைக் கைத்தலம் பற்றினான்!

பார்வதியின் விழிகள் பிதுங்கின; 'செந்திலுக்கு—என் செந்திலுக்கு என்ன ஆச்சு?' மனமும் மனச்சாட்சியும் குலுங்கின.

மௌனத்தின் ஊமைத்தனமான நாடகம் போதும், போதும்!

"பார்வதி, விடை கொடு!"

"விடை கொடுக்கவா? நீங்க இன்னும் கேள்வியே கேட்கலையே, செந்தில்?"

அவனுக்குச் சிரிக்கத் தெரியவில்லை.

அவளுக்கு அழத் தெரியவில்லை.

"அதோ பார், பார்வதி!...கேள்வி வருது!"

ஆச்சரியக் குறியாகக் காவல் துறை அதிகாரி வந்தார்; நின்றார்

"வணக்கங்க," என்றான் செந்தில், நான்தான் பிரபல பாங்கர் பரந்தாமனின் செல்வ மகன்; உங்களுக்கு ஃபோன் பண்ணினதும் நானே தான்!" சேதி சொன்னான்.

ரத்தம் உறைய, உருக்கத்தோடும் ஏக்கத்தோடும் செந்திலை தனக்கு தாலிப் பாக்கியத்தைக் கருணையுடன் வழங்கிய செந்திலை நன்றியுடன் ஊடுருவிப் பார்த்தாள் பார்வதி.

காக்கிச் சட்டை, காலத்தைப் பார்த்தது.

செந்திலோ, பார்வதியைப் பார்த்தான்.

"மிஸ்டர் செந்தில்!"

"ஸார், உங்களுக்குக் காலத்திலே கண்; எனக்குக் கடமையிலே கண்!— மறுபடியும் சொல்றேன்: இந்த அருமைத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பிரமாதமாகத் தொண்டு செய்கிறதாகத் தம்பட்டம் அடிச்சுக்கிட்டு, சமூகத்தோட நல்லாரோக்கியத்தையும் உயர்பண்பாட்டையும் திரைமறைவிலே அண்டிக்கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் கிட்டு வருற சமூகக்குற்றவாளிங்களிலே "சமூகத் துரோகிங்களிலே ஒருத்தியான இந்திரா நகர் மாதங்கி என்கிற போலித்தனமான பொய் வேஷதாரியான சமூக வேசியை என்னவெல்லாமோ நாடகம் ஆடி இந்தத் தமிழ் மண்ணின் பிரகாசமான எதிர்கால வளர்ச்சியையும் வாழ்வையும் முன்னேற்றத்தையும் உத்தேசிச்சுத் தமிழ்ச்

சமூகப் பண்பாட்டின் பேராலேயே குத்திக் கொன்றவனும் நானே தான் !...''... செந்தில்நாதன் வாக்குமூலம் கொடுத்தான்.

பார்வதி கூக்குரல் எழுப்புகிறாள் :

''ஐயையோ !...நடந்த நாடகம் போதாதா ?....அட, பாழுந் தெய்வமே !''

சட்டம் கண் சிமிட்டுகிறது.

கண் அமர்த்துகிறான் செந்தில். ''என்மாதிரி நீங்களும் உண்மையான ஒரு மனிதரானால், இன்னம் ஒரு பத்து நிமிஷம் எனக்காகக் காத்திருங்க. கொஞ்சம் முந்தி நான் தாலி பூட்டி, எனக்கு அருமையாக மனைவியாக ஆன பாக்கியவதி இவள், பேர், பார்வதி ! தமிழ்ப் பார்வதி இவள் ; தமிழச்சி பார்வதி இவள் !—அங்கே பார்த்தீங்க தானே? சொல்லி வச்ச மாதிரி ஒரே நேரத்திலே நோய்க்குப் பலியான அவங்க ரெண்டு பேரும்தான் என்னோட பார்வதியைப் பெற்றவங்க ! '' —செந்திலுக்கு விவேகம் கூடுதல் கூடுதலான அக்கறையோடு பார்வதியின் திசைக்குக் திசை திரும்பினான் அவன்.

'நல்லவிளக்கு' இன்னமும் கூட எரிந்து கொண்டிருக்கிறது.

பார்வதிக்குத் திரும்பவும் சொல்லுகிறான் செந்தில்;

''பார்வதி ! இப்போதைக்கு நான் சட்டத்தின் குற்றவாளிதான் ; ஆனாலும், உண்மையான நடப்பை நீயும் தெரிஞ்சுக்க வேண்டாமா ? சமூக சேவகி என்கிற பொய்யான சமூக அந்தஸ்தை நிழலாக்கிக்கிணு, திரை மறைவிலே விபச்சார விடுதி ஒன்றையும் ரொம்பக் காலமாக நடத்திட்டு வந்த மாதங்கியைப் பற்றி நம்ம முருகையன் மூலம் உனக்குத் தெரிஞ்சிருக்கும் ; மாதங்கி

எனக்கு முறைப் பெண் என்பது பொய் இல்லை; எனக்கு வாழ்க்கைப்படுறதுக்காகப் பகீரதப் பிரயத்தனம் செஞ்சவங்களிலே, உன் சிநேகிதி தாராவைப் போல, என் அம்மான் மகள் மாதங்கியும் ஒருத்தியாக இருந்தாள் என்கிறதிலேயும் தப்பு இல்லை தான்! — ஆனாலும், தன்னோட காதலுக்குக் குறுக்கே நின்ன யாரையும் தன்னோட கபட வலையிலே சிக்க வைக்காமல் தப்பி விடச் செய்யறதுக்கு அவள் ஒப்பினதே கிடையாது! — அவளோட விதிக்குத் தாராவாலேயும் விலக்காக இருக்க முடியல்லே; அவள் காட்டின வழியிலே, திசைமாறிப் போயிட்டா தாரா! — ஆனால். நீ தப்பிச்சிட்டே; உன் சமர்த்தும் துணிவும் யாருக்கு வரும்?... களை எடுத்தால் தானே பயிர் வளரும், பார்வதி? அதே சட்டம் நம்ம சமுதாயத்துக்கும் உண்டுதானே? அதனாலேதான், இந்தச் சமுதாயம் சுகமாகவும் சுகத்தோடவும் வளரவும், மானத்தோடவும் மனிதத் தன்மையோடே வாழவும் வேண்டித் தான் விஷக்கிருமியான ஒரு சமூகப் புல்லுருவியைச் சமூகப் பிரக்ஞையோடவே ஏழாவது மாடியிலேயே வேரோடு பிடுங்கி வீசி எறிஞ்சிடவும் மனம் துணிஞ்சேன்! —இந்த அளவிலே தார்மிகமான என்னோட சமுதாயக் கடன் நியாயமாகவே நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் நான் நம்புகிறேன்!... பாவம், மாதங்கி! இன்றைக்கு சாயரட்சை சட்டப்பூர்வமாக எனக்கு வாழ்க்கைப்படக் கனவு கண்டுக்கிட்டு இருந்தா. எங்க கலியாணத்தை நடத்தி வைக்க உங்க முதலாளியும் கீழே காத்திருந்தார்!... பாவம் மாதங்கி!... கடைசியா இன்னொரு உண்மையையும் உன் கிட்டே சொல்லிடனும்; பாருக்குட்டி! உன்னோட உயிர் எனக்குச் சொந்தமாக்கும்! — என் ஆணை இது; இதிலே தருமம் மட்டுமல்ல, சத்தியமும் உள்ளடங்க இருக்குது. சரி, சரி... வேளை நெருங்கிடுச்சு... இப்பவாச்சும் எனக்கு விடை தா, பாருக்குட்டி!''

எப்படியோ, எப்பாடுபட்டோ, வெகு சமர்த்தாகவே பேசிவிட்டான் செந்தில்! உடனேயே அவன் காவல்

அதிகாரியை அண்டினான்; "இனி நீங்க உங்களோட கடமையைச் செய்யலாம்!" என்று அனுமதி வழங்கினான்'

பார்வதிக்குத் தலைசுற்றியது. "ஐயையோ செந்தில்... இனிமே, நான் என்ன செய்வேன், செந்தில்?" தலைமயிரை பிய்த்துக் கொண்டாள்.

செந்திலின் உயிர்—உயிரின் உயிர் அணலிலே அகப் பட்டு ரோஜாவாகத் துவண்டது. அவனால் பார்வதியின் சுடுநீரைத் துடைக்கவே இயலவில்லைதான்!— "பாரு நீ என்னோட பாருக்குட்டி இல்லியா? — அழக்கூடாது; இனிமேல் நீ அழவே கூடாது; அழுததெல்லாம் பத்தாதா? எனக்காகவும், ராமையாவுக்காகவும் நீ அழாமல் இருப்பது தான் உசிதம். நடக்கிறதெல்லாம் நன்மைக்கேன்னு நம்பினவன் நான்; இன்னமும் நம்புறவன்!... போனது போக மிஞ்சுறதுதான் வாழ்க்கை!... பார்த்தியா, பார்த் தியா? அழாமல் சமர்த்தாக என்னை வழியனுப்பி வச்சிடு பாருக்குட்டி!" — அவளுடைய மஞ்சள் தாலியை எடுத்து முத்தம் கொடுத்தான். நிர்மலமான கண்களால் திரும்பவும் ஒருமுறை ஆருயிர்ப் பார்வதியை மிகமிக ஆறுதலாகப் பார்த்துக்கொண்டே, தன்னுடைய கழுத்துச் சங்கிலியைக் கழற்றி அதைப் பார்வதியின் கழுத்திலே போட்டு விட்டான். "உனக்கு நான் தருகிற கல்யாணப்பரிசு இது!" என்றான். அவனுடைய உணர்ச்சிகளை ஒழுக்கத்தோடு கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியும். பார்வதி நான் வர்றேன்!'

மோகினிச் சிலை எப்படிப் பேசும்?

காவல் வாகனத்தில் ஏறியவன், கீழே இறங்கினான். "பா...ர்...வதி!" என்று விளித்தான். "நான் உனக்குத் கொடுத்ததாட்டம், நீயும் எனக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டாமா?... முன்பெல்லாம் ஒவ்வொரு விடியல் பொழுதிலேயும் நான் இங்கே பறந்து வந்து உன் முக

தரிசனத்துக்காகக் காத்துத் தவம் இருந்து தொடுவானமாகத் தெரிந்த உன்னை தூரத்திலே இருந்து பார்த்த ஆறுதலோடு இங்கிருந்து பிரிகிற சமயத்திலே, என்னோட மனசுக்கு ரொம்பவும் பிடித்தமான ரோஜாப்பூவை நானே பறிச்சுக்கிட்டுப் போயிடுவேனே ?... ஞாபகம் இருக்குது, இல்லையா ?... இப்ப உன் கையாலே ஒரு ரோஜாப்பூவைக் கிள்ளி எனக்குத் தா. பாருக்குட்டி !'' என்று நெஞ்சம் தழதழக்கக் கெஞ்சினான்.

ரோஜாப்பூப் பரிசை செந்தில்நாதனிடம் சமர்ப்பிக்கின்றாள் பார்வதி. கழுத்தில் ஊசலாடிய சங்கிலி கனக்கவே தொட்டுப் பார்க்கிறாள் ; 'ஆ!' சங்கிலியோடு சங்கிலியாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது ! ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது அந்த ரத்தச் சிலுவை!...

''பாருக்குட்டி, நான் வர்றேன்... போயிட்டு வர்றேன்!'' செந்தில் எவ்வளவு அழகாகவும் அன்பாகவும் சிரிக்கிறான்.

கை விலங்கு அழுதது !

''போயிட்டு வாங்க, செந்தில்!''

பூவும் பொட்டும் விடை கொடுத்தன!...

# 22

**பா**ர்வதி இப்போது புதிதாகப் பிறந்திருக்கிறாள் அல்லவா ? ...

ஆத்மநாதனும் சிவகாமியும் இன்னமும்கூட விழிப்புக் கொள்ளவில்லை ; விழித்துக் கொள்ளவும் இல்லை!... அவர்களுக்கென்ன ?— கொடுத்து வைத்தவர்கள் !— அன்பான தவப்புதல்வியை திருக்கல்யாணக் கோலத்தில் தம்பதி சமேதகராகத் தரிசித்த மகத்தான அமைதியைத் தம்பதி சமேதகராகவே இன்னமும் அனுபவித்துக் கொண்டேயிருக்கிறார்கள் !

ராமையாவின் உயிர்க்காப்பாக ஓடோடி வந்து நின்றான் முருகையன்.

தாழ்ந்து கிடந்த விழிகளை வைராக்கியத்தோடும் ரோஷத்தோடும் உயர்த்தினாள் : தம்பி, கமலி அக்கா ராத்திரி பொழுதுக்குள்ளேயோ, இல்லாட்டி, விடிகாலம் பறவோ வந்ததும்தான் அப்பா—அம்மாவை அடக்கம் செஞ்சாக வேணும் ; அதுக்குள்ளாற, ஆக வேண்டியதைத் துருசு பண்ணிக் கவனியுங்க ? ராமையாவையும் கூடமாட உதவி ஒத்தாசைக்கு வச்சுக்கங்க, இன்னொரு சங்கதி!— இன்னிக்குப் பசுமாட்டுக் கொட்டகையை நீங்க பிரிச்சுப் போடல்லியா?— அதே இடத்திலே, கொல்லைப்பக்கம்— கிடக்கிற பெரிய மரக் கட்டிலை ரெண்டு பேரும் தூக்கி யாந்து போட்டுடுங்க. ; அங்கேயேதான் அப்பாவையும் அம்மாவையும் குளிப்பாட்டிச் சடங்குக் காரியமெல்லாம் செஞ்சு அவங்க ரெண்டு பேரையும் ஜோடியாகப் பயணம் பண்ணி வைக்கணும். மறந்திடாமல், நிஜமான ஒரு அய்யர்ப் புரோகிதராகப் பார்த்து விவரம் சொல்லிடுங்க.

அட்வான்ஸ் கேட்டா, கொடுங்க; அம்முக்குட்டி கேட்காமலே கொண்டாந்து கொடுத்த பணப்பெட்டியை அடுப்படி பீரோவிலே மேல் தட்டிலே வச்சிருக்கேன்!''— பேசிக்கொண்டே முருகையனோடு நடந்தவள், வாசல் வெளிக்கு வந்துவிட்டதை அப்பொழுதுதான் உணரலானாள், பார்வதி.

கூட்டம் குறையவில்லை.

அந்தி மாலையின் வரவைப் பூமணத்தோடு அறிவித்துக் கட்டியம் கூறுகிறது பூந்தென்றல்.

திசை திரும்பியவள் பூகம்ப அதிர்ச்சிக்கு ஆளானாள்!— 'அதோ, என் செந்திலோட ரோஜாப்பூ நிற 'ட்ால்ஃபின்' கார் நின்னுக்கிட்டிருக்குது!...ஆ! என்னோட செந்தில்லைதான் காணோம்!...செந்தில்! நீங்க இந்தக் காரை உங்களுக்கு உயிர்ச் சாட்சியாய் வச்சிட்டுப் போயிருக்கீங்களா? நீங்களே உங்களுக்குக் கையிலே விலங்கை மாட்டிக்கிட்டு, எனக்குக் காலிலே விலங்கைப் பூட்டிட்டு, மனசறிஞ்சு ஒரு பாவத்தையும் கனவிலே கூட செஞ்சறியாத என்னை—இந்த அபலைக் கன்னியையே ஒரு பயங்கரத் தொழுவமாக ஆக்கிட்டு மாயமாய்ப் பறந்திட்டீங்களே?...செந்தில்! சமூகப் பிரக்ஞையோடே—வாழவழி புரியாமல்—வழிகாட்டப் படாமல் கெட்டலைஞ்சு தட்டுத் தடுமாறி விதியே சதம்னு நம்பி நம்பி உருகி உருக்குலைஞ்சு சாகாமல் செத்துச் செத்துப் பிழைச்சுக்கிட்டிருக்கிற என்னை மாதிரியான அபலைக் கன்னிகளுக்குச் சட்டத்துக்கும் தருமத்துக்கும் மேலான ஒரு சமூகக் கடமையைச் செய்தாக வேண்டிய ஒரு பொறுப்புள்ள சமுதாயப் பிரக்ஞையோடவே எங்கிட்டே சீக்திரமாகவே நீங்க திரும்பி வந்து சேர்ந்தாக வேணுமாக்கும்! — அப்பத் தான், நீங்க எனக்கு விதிச்சு எழுதி வச்சிட்டுப் போயிருக் கிற அந்த விதியை—கன்னித் தொழுவமாகிட்ட எனக்கு

இட்டிருக்கிற அந்த ஆணையைக் கட்டிக் காத்து நிறைவேற்றி வைக்கவும் என்னாலே முடியுமாக்கும்! மறந்திடாதீங்க!...அப்பாலே எம் பேரிலே வருத்தப்பட்டுக் கண்ணீர் வடிச்சு எந்தப் புண்ணியம் கிடையாதுங்க; கிடைக்காதுங்க!...ஆமா, நான் முடிஞ்ச முடிவாய்ச் சொல்லிட்டேனுங்க!...'

நெஞ்சை இறுக்கமாகவே பற்றிக் கொண்டவளாக— எந்தப் பற்றுமின்றிப் பற்றி கொண்டவளாக, நடை பழகுகிறாள் பார்வதி!...

அதோ, 'டால்ஃபின்!...'

'எனக்கு அக்கினிப் பரிட்சை நடத்தவே காத்துக்கிட்டு நிற்குது அந்த டால்ஃபின்!' பார்வதி இப்பொழுது நெஞ் சொடுங்கி உள்வட்டத்தில் வீம்மிச் சுழல்கிறாள்!

தோட்டம் வந்தது.

நின்றாள் பார்வதி.

சுடுநீரிலே மஞ்சள் தாலி சுடுகிறது!

அதோ! ...

அந்த ஒற்றை ரோஜாப்பூ மாத்திரம் உலகாளும் உமையவளாம் அன்னை பார்வதியைப் போலவே ஒற்றைக் காலிலே வீர நேசத்துடனும் தீர வைராக்கியத்துடனும் தவம் செய்த வண்ணம், அழகாகவும் அன்பாகவும் புன்னகை செய்து கொண்டிருக்கிறது இன்னமும்கூட!

வேடிக்கைதான்!...

**வாழிய செந்தமிழ்**

# நூலாசிரியர் பற்றி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | **பூவை. எஸ். ஆறுமுகம்** |
| புனைப்பெயர்கள் | : | கார்த்திகைபாலன், மறைநாயகன், இளைய பிரான், பிறைசூடி |
| பிறந்த நாள் | : | *31—01—1926* |
| பிறந்த ஊர் | : | பூவை மா நகர், புதுக்கோட்டை மாவட்டம். |
| முதல் கதை | : | *15—8—1947* சுதேசமித்திரனில் "கரகம்". வெளியிட்டவர் 'சாண்டில்யன்'. |
| இலக்கியப் பணி | : | "பொன்னி' 'காதல்' 'மனிதன்' 'உமா' ஆகிய இதழ்களில் சேவை. பல்வேறு துறைகளில் 175 நூல்களுக்கு மேல் படைத்தது. |
| அரசுப் பணி | : | ஏலக்காய் வாரியத்தில் பத்தாண்டு காலம். |
| நாடகப் பணி | : | 'ஜாதி ரோஜா' 'சமுதாயப்புரட்சி நாடகக் கதை வசனம் |
| திரை உலகப்பணி | : | 'கூண்டுக் கிளி' கதை வசன உதவியாளர், "சொந்தங்கள்" வாழ்க" மூலக்கதை. |
| நடப்புப் பணி | : | எழுத்துப்பணி தொடர்கிறது ; இனிமேலும் தொடரும். |